# தமிழரசு

திங்களிருமுறை

1972 மார்ச் 16 . 35 காசு



# அரசு — மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீக்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடு களைக் கையாண்டு உற்பத்தி செய்யப் படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)

ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

## அரசு — வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16

# தமிழரசு

மலர்: 2 16-3-1972 இதழ்: 18

# குமரி மாவட்டச் செய்தித் தொகுப்பு



# வயது பதினாறு

"நின்கடற் பிறந்த
ஞாயிறு பெயர்த்தும்
நின்வெண் தலைப்புணரி
குடகடல் குளிக்கும்"

என்று இரண்டாயிரம் ஆண்டு கட்கு முன்னர், மன்னன் ஒருவனின் மாண்பினைத் தமிழ்ப் புலவர் ஒருவர் பாராட்டிப் பாடி மகிழ்ந்தார். அவ்வாறு பாடப்பெற்ற வரிகளின் தெளி பொருள் விளக்கமாகக் கடலில் எழுகின்ற காய்கதிர்ச்செல்வன், கடலிலேயே மூழ்கும் கவினுர்ந்த காட்சியினை இன்றும் நாம் கன்னியாகுமரியில் கண்டு மகிழ் கிறோம். கதிரவன் கடலில் எழுந்து, கடலிலே மூழ்கும் இக்காட்சியினை நாம் கன்னியா குமரியில் மட்டுமே காணமுடியும்.

"வடக்கில் இமயமலை பாப்பா—
தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா;
கிடக்கும் பெரியகடல் கண்டாய்—
அதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா"

என்று இந்திய நாட்டின் எல்லையை இளஞ்சிறுவர் சிறுமியர்க்கும் உணர்த்தும் பாரதியார்,

"நீலத் திரைக்கட லோரத்திலே
—நின்று
நித்தம் தவம்செய் குமரிஎல்லை
—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே
—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு"

எனத் தாய்த் தமிழகத்தின் புகழ் பரவிக் கிடந்ததை—சிறந்து விளங்கியதைத் தெளிவுறப் பாடி மகிழ்கிறார்.

தொல் புகழ் கொண்ட தமிழகத்தின் எல்லையினை விளக்கப் புகுந்த பழந்தமிழ்ப் புலவர் பனம்பாரனர்,

" வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகம் "

என்றார்.

அண்ணல் காந்தியடிகள் ஒரு சமயம் கன்னியாகுமரிக்கு வந்திருந்த போது, "முக்கடல்கள் இணையும் இடம் இங்கன்றி வேறெங்குமில்லை ; கப்பல்கள் வந்து கலவாத கவினுர்ந்த துறை இதுவே ." என்று பாராட்டியுள்ளார்.

குமரி, தொன்று தொட்டு வரலாற்றுப் புகழ் உடையது. தென்றலும், தெவிட்டாத தேன் மொழியும் உலவும் தமிழகத்தின் தென் பகுதியில் குமரியாறு, பஃறுளியாறு என்னும் ஆறுகளும், குமரி என்னும் மலையும் ஒரு காலத்தே இருந்தன என்றும், தமிழ் வளர்த்த முதற் சங்கமும் இடைச் சங்கமும் இருந்த காலத்தே அப் பகுதி இருந்ததென்றும், பின்னர் அத் தென்பகுதி கடற்கோளுக்கு இரையாகி மறைந்ததென்றும் தமிழ் இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன.

"பஃறுளி யாற்றுடன்
பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடும்
கொடுங்கடல் கொள்ள . . "

என்றார் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் தந்த இளங்கோ வடிகள். பஃறுளியாறும், பழந்தமிழ்க் குமரிமுனையும் அழிந்து பட்டபின், எஞ்சிய— இப்போதுள்ள குமரி முனையினையே நாம் 'குமரி' என்றும், கன்னியாகுமரி என்றும் வழங்குகிறோம். குமரித் துறையைக் கொண்ட இப்பகுதியை உள்ளடக்கிய மாவட்டத்தையே நாம் 'கன்னியாகுமரி மாவட்டம்' என்கிறோம்.

முன்னர், குமரி மாவட்டத்தின் ஒரு பகுதி (நாஞ்சில் நாடு) பாண்டியர்களால் ஆளப்பட்டு வந்தது. பாண்டிய மன்னர்களின் ஆட்சிக்குப் பிறகு அது புறத்தாய நாடு, நாஞ்சில் குடியரசு, வேணாடு என முப்பிரிவாயிற்று. இன்றையக் கன்னியாகுமரியும் அதன் சுற்றுப்புறங்களும் புறத்தாய நாடு என்றும், இன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அகத்தீசுரம், தோவாளை வட்டங்களில் புறத்தாய நாடு நீங்கிய பகுதிகள் நாஞ்சில் குடியரசு என்றும், இன்றையக் கல்குளம், விளவங்கோடு வட்டங்களைத் தன்னகத்தே கொண்டது வேணாடு என்றும் வழங்கப்பட்டு வந்தன.

தொன்மைச் சேர மரபினர் வேணாட்டை ஆண்டு வந்தனர்; நாஞ்சில் குடியரசும், அதனைச் சார்ந்த புறத்தாய நாடும், பல்வேறு படையெடுப்புக்களுக்கு இலக்காயின. சோழர்கள், பாண்டியர்கள், விஜய நகரத்து வேந்தர்கள் ஆகியோர் இப் பகுதிகளில் ஆட்சி புரிந்துள்ளனர். பின்னர் 18-ஆம் நூற்றாண்டில் இப் பகுதி ஆர்க்காட்டு நவாப்பின் ஆட்சிக்கு உட்பட்டது. அவன் இதனை,




கன்னியாகுமரி மாவட்டம்
0 5 10 15 கி. மீ.
77° 15'
77° 30'
8° 30'
8° 15'
8° 0'
கேரளம்
நெடுமன்காடு
கோட்டைகோலம்
நெடுமன்காடு
கோடையாறு
கல்குளம்
விளவங்கோடு
மேல்புறம்
திருவட்டாறு
குழித்துறை
முன்சிறை
கிள்ளியூர்
தக்கலை
திருநெல்வேலி
தோவாளை
பூதப்பாண்டி
தோவாளை
நாங்குனேரி
குருந்தங்கோடு
குளச்சல்
நாகர்கோவில்
அரபிக்கடல்
அகஸ்தீஸ்வரம்
ராஜக்கமங்கலம்
அகஸ்தீஸ்வரம்
மன்னார்விரிகுடா
கன்னியாகுமரி
குறிப்பு
மாநில எல்லை
மாவட்ட எல்லை
வட்ட எல்லை
பஞ்சாயத்து ஒன்றிப்பு எல்லை
மாவட்டத்தலைநகர்
வட்டத்தலைநகர்
ஊராட்சி ஒன்றிப்புத்தலைநகர்
தேசிய நெடுஞ்சாலை
மாநில நெடுஞ்சாலை
இதர சாலைகள்
ஆறு, ஓடை
இதர கிராமங்கள்
மத்திய நிலஅளவை அலுவலகம், சென்னை



வேணாட்டு வேந்தர்க்குப் பரிசிலாக வழங்கினான். அதிலிருந்து இப்பகுதி வேணாட்டுடன் சேர்ந்து, அகண்ட திருவிதாங்கூர் நாட்டிலும் இணைந்தது.

பின்னர் மொழிவழி நாட்டமைப்பில் பெரு வேட்கை கொண்ட அப்பகுதி மக்கள், உரிமைக் கிளர்ச்சி தொடங்கினர். பேரறிஞர் அண்ணா அதனை ஆதரித்து ஆணையிட்டதற்கிணங்க, பல நூற்றுக்கணக்கான தொண்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றனர். அதன் பயனாக, 1956-ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாள், இப்பகுதி திருவிதாங்கூர்-கொச்சி மாநிலத்திலிருந்து பிரிக்கப்பட்டுத் தாய்த் தமிழகத்தோடு இணைக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டம் பிறந்தது. ஆம்! கன்னியாகுமரி மாவட்டத்திற்கு இப்போது பதினாறு வயதாகிறது.

குமரி மாவட்டத்தின் வடக்கிலும், வடகிழக்கிலும் திருநெல்வேலி மாவட்டமும், வடமேற்கில் கேரள மாநிலமும், மேற்கிலும் கிழக்கிலும் நீலக் கருங்கடல்களும் எல்லைகளாக உள்ளன.

கன்னியாகுமரி மாவட்டக் கடலோர மணல்களில் 'இல்மனைட்'டும், 'மோனசைட்'டும் கிடைக்கின்றன. இங்குக் கிடைக்கும் 'மோனசைட்'டில் தோரியம் மிகுதியுள்ளது. இந்தியாவிலேயே இல்மனைட் கிடைக்கும் மாநிலங்கள் இரண்டு: ஒன்று கேரளா; இன்னொன்று தமிழ்நாடு; அதுவும் குமரி மாவட்டம்தான்! கார்னெட் மணல், கல்குரியஸ், சுண்ணாம்புக் கற்கள் முதலியனவும் கன்னியாகுமரி மாவட்டத்தில் பெருமளவில் கிடைக்கின்றன.

தமிழ்நாட்டில் ரப்பர்க் காடுகள் உள்ள மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டமே.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கோட்டாறு, வடசேரி, இரணியல் முதலான இடங்களில் நெசவுத் தொழில் சிறப்பாக நடைபெறுகிறது. இம்மாவட்டத்தில் உற்பத்தியாகும் கயிறு பல அந்நிய நாடுகளுக்கும், அயல் மாநிலங்களுக்கும் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டம் இயற்கையெழில் கொழிக்கும் மாவட்டம். எனினும், தமிழ்நாட்டிலேயே மிகச் சின்னஞ்சிறிய மாவட்டம் இந்தக் கன்னியாகுமரி மாவட்டமே. இந்த மாவட்டத்தின் மொத்தப் பரப்பு 1,665 ச.கி.மீ. இதில் பயிர் செய்யப்படுகிற பரப்பு 2,01,075 ஏக்கர்; காடுகளின் பரப்பு 1,25,712 ஏக்கர்; மேய்ச்சல் தரை 3,071 ஏக்கர்; மாவட்டத்தின் சராசரி மழை அளவு 1,326 மி.மீ. இங்குப் பருவ மழை தொடங்குவதைச் 'சாரல் தொடங்கிவிட்டது' என்று குறிப்பிடுவார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தின் மக்கள் தொகை 99,70,000; 

இவர்களில் 5,04,000 ஆண்கள்; எஞ்சியோர் பெண்கள். இங்கு, எழுத்தறிவு பெற்றவர்கள் ஏறத்தாழ 10 இலட்சம் பேர். இம்மாவட்டம் தமிழகத்திலேயே மிகச் சின்னஞ் சிறிய மாவட்டம் என்றாலும், கல்வியறிவு பெற்றவர் விழுக்காடு அதிகமாக உள்ள மாவட்டமும் இதுதான் என்பது குறிப்பிடத் தக்கது.

கன்னியாகுமரி மாவட்டம், அகத்தீசுரம், தோவாளை, கல்குளம், விளவங்கோடு ஆகிய நான்கு வட்டங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குவது. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மலைகளில் குறிப்பிடத் தக்கவை அசம்புமலை, மகேந்திர மலை, மருந்துவாழ் மலை, இரண்டாம் வரிமலை ஆகியன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் குறிப்பிடத் தக்க முக்கிய



மான ஆறுகள், பறளையாறு, தாமிரபரணி, கோதையாறு, பழையாறு, முல்லையாறு, வள்ளியாறு ஆகியன.

6.17 கி.மீ. நீளமுள்ள கடற்கரையைக் கொண்ட கன்னியாகுமரி மாவட்டத்தின் முக்கியத் துறைமுகங்கள், குளச்சல், தேங்காய்ப்பட்டினம், மணக்குடி, லீபுரம், கோவளம் ஆகியன.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மலைகளில் தேயிலை, காப்பி, தென்னை, மிளகு முதலியன பயிர் செய்யப்படுகின்றன. பள்ளத்தாக்குப் பகுதிகளில் பாக்கு, நெல், வாழை முதலியன பயிர் செய்யப்படுகின்றன. மலைச் சரிவுகளில் மரவள்ளிக் கிழங்கும், சமவெளிப் பகுதிகளில் நெல், மரவள்ளிக் கிழங்கு, தென்னை, காய்கறி முதலியனவும் பயிர் செய்யப்படுகின்றன. கிணற்றுப் பாசனத்தால் வாழை, ராகி, மிளகாய், புகையிலை முதலியன விளைவிக்கப்படுகின்றன. ஏராளமான பழத் தோட்டங்களும் உள்ளன. கூட்டுறவுத் துறையில் மார்த்தாண்டத்தில் அன்னாசிப் பழம் பதனிடும் தொழிற்சாலை நிறுவத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது.



முக்கடல்கள் கூடும் மூவாச் சிறப்புப் பெற்ற கன்னியாகுமரி மாவட்டம், மா, பலா, வாழை என்னும் முக்கனிகளையும், எக்காலமும் தந்து மகிழ் ஊட்டும் ஏற்றமிக்க மாவட்டமுமாகும்.

## எலும்புக் கூட்டின் இன்னிசை

சுடுகாடு!

மண்டையோடுகளும், எலும்புகளும் சிதறிக் கிடக்கின்றன. பாம்புப் புற்றும், பட்டமரமும் தென்படுகின்றன. அம்மரத்தில் ஆந்தை ஒன்று வட்டவிழிகளைக் காட்டி ஓலமிடுகின்றன. ஒரே இருட்டு. பயங்கரமான சூழ்நிலை.

திடீரென்று மெய்சிலிர்க்க வைக்கும் மரண ஓலம். மங்கிய ஒளியில் எலும்பு மனிதர்கள் மூன்று பேர் காட்சி தருகிறார்கள். எங்கிருந்தோ ஓர் இசை மெல்லக் கேட்கிறது. உற்றுப் பார்த்தால், முதல் எலும்பு மனிதன் பிடில் வாசித்துக் கொண்டு பாடுவது நன்கு தெரிகிறது. இரண்டாவது எலும்பு மனிதன் ஜம்மென்று நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, பாட்டுக்கேற்றபடி காலில் தாளம்போட்டுக் கொண்டே மேளம் வாசிக்கிறார். மூன்றாமவர் கிதார் வாசிக்கிறார் மிக இனிமையாக.



வெறும் எலும்புக்கூடு உயிருள்ளமனிதனைப்போலத் தாடைகளை அசைத்துப்பாடி, இசை எழுப்பும் இந்தக் காட்சியைச் சென்னை மருத்துவக் கண்காட்சியில் கண்டு களித்தனர்.

இதனைஏற்பாடு செய்தவர்கள் தஞ்சை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் ஐவர். மருத்துவக் கல்லூரியில் பரிசோதனைக்காக உள்ள எலும்புக் கூடுகளை வைத்தே இந்தப் பேய்களின் இன்னிசைக் கச்சேரியை உருவாக்கி யிருக்கிறார்கள். இதை அமைக்க நான்கு நாட்கள் பிடித்ததாம். இது பொம்மலாட்டம் போல மின்சாரத்தால் இயங்குகிறது. ஒரு மின்சாரப் பொத்தானை அழுத்தினால், மூன்று எலும்புக் கூடுகளும் இயங்குகின்றன. இதனை உருவாக்க ஆன செலவு ரூ. 500.

மாணவர் திறமைக்கு எடுத்துக் காட்டாய் விளங்கும் இது போன்ற காட்சி தஞ்சை, மதுரை மருத்துவக் கண்காட்சிகளில் காண்பிக்கப்பட்டு பாராட்டுதல்கள் பெற்றுள்ளன. இக் காட்சிகளில் நடித்தவை, ஆங்காங்குள்ள எலும்புக் கூடுகளே.



# சமதர்மம் மலர- சமுதாயம் செழிக்க- முதல்வர் கலைஞர் அளித்த 1972-73 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கை

**வெ**ற்றிமாலை, நியாயத்தின் கழுத்தில் விழுந்தே தீரும் என்பதற் கேற்ப. இந்தியத் திருநாடும்— உரிமை முழக்கம் தொடக்கத்திலே அலட்சியப்படுத்தப் பட்டாலும் ஒருநாள் அதற்கான உயர்ந்த மரியாதை கிடைத்தே தீரும் என்பதற்கு அடையாளமாகப் புதிய வங்கதேசமும்—

உலக அரங்கில் கம்பீரமாகத் தலைதூக்கிப் புன்னகை சிந்தும் எழுச்சிமிகு காட்சி கண்டு இதயம் பூரித்தவாறு, இந்த நிதிநிலை அறிக்கையைப் பேரவையின் சார்பில் நாலரைக் கோடித் தமிழ் மக்களின் திருமுன் வைத்து,அவர்களின் பேராதரவை என்றும் போல் இன்றும் இறைஞ்சி நிற்கின்றேன்.

1972–73-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை மதிப்பீடுகளையும், 1970–71-ஆம் ஆண்டின் கணக்குகளையும், 1971–72-ஆம் ஆண்டுக்குரிய திருத்த மதிப்பீடுகளையும், இன்று உங்கள் பால் வழங்குவதில் உவகையடைகிறேன்,

நடந்து முடிந்த போரில் கிழக்கு வங்கத்தின் குரலுக்கு ஜனநாயக உணர்வோடு காது கொடுத்து, இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் செயல்பட்ட திறனையும், இந்தியத் தளபதிகள், வீரர்கள் காட்டிய வியத்தகு ஆற்றலையும் எத்தனைமுறை இந்த அவையில் பாராட்டிப் புகழ்ந்திடினும் தெவிட்டுவதே இல்லை.

நாட்டுப் பாதுகாப்பிற்கு நமது மாநிலத் தமிழ் மறவர்கள் சிந்திய இரத்தம்—மாநில அரசின் மூலம் மாநில மக்கள் எல்லா வகையிலும் அளித்த ஆதரவு, இந்திய ஒருமைப் பாட்டில், தமிழகத்திற்கு உள்ள உளமார்ந்த நம்பிக்கையின் அடையாளங்களாகும்.

மூன்று மாத கால அளவில் 3·30 கோடி ரூபாய் நாட்டுப் பாதுகாப்பு நிதியாகத் திரட்டியிருப்பதும், அதற்குத் தமிழ் மக்கள் மனமுவந்து அள்ளித் தந்திருப்பதும், கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரையில் நமது ஒன்றுபட்ட தேசிய முழக்கம், எதிரியின் செவிப்பறையைக் கிழித்திடச் செய்யும் என்பதற்கு மற்றுமொரு உதாரணமாகும்.




பகைப்புலத்தை வேரறுப்பதில் இந்திய மக்கள் காட்டிய ஒற்றுமை மேலும் வலுப்பெற வேண்டுமென்பதில் இந்த அரசு தணியாத ஆர்வம் கொண்டுள்ளது. அதே நேரத்தில், வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே இந்திய ஜனநாயகத்தின் வலிமை என்ற பேருண்மையை யாரும் மறந்துவிடக்கூடாது. ஒற்றுமை என்றால் எல்லாம் ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமென்று பொருளல்ல. ஜனநாயகம் தழைத்தோங்க வேண்டுமானால் பல்வேறு கருத்துக்களுக்கும், பல்வேறு கொள்கைகளுக்கும் சுதந்தரமளிக்கப்பட வேண்டும். இந்த நாடு சமதர்மம், ஜனநாயகம் மலர வேண்டியதை முழு மனத்துடன் ஒப்புக் கொண்டாலும், அந்த நோக்கத்தை எந்த வழிவகைகளில் இந்நாட்டின் பல பகுதிகளிலும் எய்திடுவது என்பதில் கருத்து வேறுபாடு இருக்கத்தான் செய்யும். இந்தியாவின் பல மாநிலங்களும் ஒரே வழியில்தான் செயல்பட வேண்டுமென்றும், அறநெறி பிறழாது வேறு வழிகளில் சென்று இந்த நன்னோக்கத்தை அடைந்திட முயற்சித்தல் கூடாதென்றும் தடைக் கற்களைப் பரப்புவது, நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப் பாட்டிற்கும் ஏற்றதாக அமையாது. இந்த உண்மையை உள்ளத்தில் நிறுத்தி, பரந்த இந்தியப் பூபாகத்தின் எதிர்காலத்தைப்பற்றிய சிந்தனைகளை உலவவிடுவது இன்றியமையாத ஒன்று என்பது, இந்த நிதிநிலை அறிக்கையின் முன்னுரைப் பகுதியாக அமைகிறது.

1971–72-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை அவை முன் வைத்து நான் உரையாற்றுங்கால், சமதர்ம வளங்கெழு சமுதாயத்தினை ஏற்படுத்துவது நமது பொறுப்பாகும் எனச் சுட்டிக் காட்டினேன். சமதர்மம் என்றால் வெறும் பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல; சமுதாய நிலையிலும் மாற்றங்கள் பூத்துக் குலுங்கிட வேண்டும். சமுதாய மாற்றமற்ற பொருளாதார மாற்றம், புண்ணை மறைத்துப் பொன் துகில் அணிந்து கொள்கிற கதையாக முடிந்துவிடும்.



பொருளாதாரத் துறையில் மட்டும் நவீன கால முன்னேற்றங்களை நடமாட விட்டுவிட்டுச் சமுதாயத் துறையில் பகுத்தறிவற்ற கொள்கைகளைப் படமெடுத்தாட அனுமதித்து விட்டால், சமதர்மம், புயல் நுழைந்த பூங்காவாகத்தான் தோற்றமளிக்கும்.

இந்தக் கருத்துக்களை நெஞ்சத்துச் சித்திரங்களாக்கி, நாடு வாழ, நலிவு தீர, சமுதாயக் கேடு களைய, 1967-ஆம் ஆண்டு தமிழகத்தில் அறிஞர் அண்ணா தலைமையில் பொறுப் பேற்று, தொடர்ந்து 1971-லும் மக்களின் பேராதரவோடு பயணம் நடத்தும் இந்தத் தமிழக அரசு, தேர்தல் காலத்து வாக்குறுதிகள் காற்றில் பறக்க விடப்பட வேண்டியவை என்று கருதாமல், அவைகளைக் கல்மேல் எழுத்தெனக் கொண்டு இயன்ற

வரையில் கடமை ஆற்றி வருறது.

*சென்னை ராஜ்யம் சென்றது ;
தமிழ்நாடு எனும்பெயர் வென்றது ;
*எங்கும் எதிலும் தமிழ்;
இறைவனுறையும் இடத்திலும் தமிழ்;

*சுயமரியாதைச்சீர்திருத்தத் திருமணங்கள் சட்டச் சம்மதம் பெற்றது ;

*அர்ச்சகர் நியமனம், தகுதி அடிப்படையில் அனைவர்க்கும் பொருந்துமெனக் கூறியது ;

*பின்தங்கியோர் நலக்குழு;

*பிச்சைக்காரர் மறுவாழ்வு;

*குடிசை மாற்று வாரியம் ;

*குடிநீர் வாரியம் ;

*கல்லூரிப் புகுமுக வகுப்பு வரையில் இலவசக் கல்வி ;

*நில உச்ச வரம்பும் ; விதி விலக்குகள் நீக்கமும் ;

*விவசாயத் தொழிலாளருக்குக் குடியிருப்பு மனைகள் ; நியாயக்கூலி நிர்ணயம் ;

*ஏழையெளியோர், அரிசனங்கள், பின்தங்கிய மக்களுக்கு இலட்சக் கணக்கில் நிலப்பட்டா—மனைப் பட்டா ;

*பேருந்துகள் உச்சவரம்பு—அதனைத் தொடர்ந்து நாட்டுடைமையாக்கும் திட்டம் ;

*இளைஞர் அணி வாயிலாகப் பட்டதாரி மாணவர்க்கு வேலை வாய்ப்பு ; பட்டிதொட்டி எல்லாம் சமுதாய மறுமலர்ச்சிப் பணிகள் ;

*உணவுக் கட்டுப்பாடு நீக்கம் ;



*ஊரெல்லாம் மின்னொளி மயம் ;

*மாநிலத் திட்டக் குழு ;

*நிருவாகச் சீர்திருத்தக் குழு ;

*மத்திய-மாநில உறவு பற்றி ஆராய மற்றுமோர் குழு ;

*காவலர்க்குச் சலுகைகள்;

*கைத்தறியாளர் துயர் நீக்கத் திட்டங்கள் ;

*தொழிலாளர் நலநிதி அமைப்பு ;

*ஆசிரியர்களுக்குச் சலுகைகள், வேலை வாய்ப்பு ;

* அரசு அலுவலாளர்க்கு ஊதிய உயர்வு ;

*அரசியல் விருப்பு வெறுப்பின்றி ஆறுயிரத்திற்கு மேற்பட்ட தியாகிகளுக்கு மாதாந்தர நிதி உதவி ;

இவைகளன்னியில் ஒவ்வொரு துறையின் சார்பாகவும், ஆற்றிய பணிகளை எண்ணிப் பார்த்தும், ஆற்றிட வேண்டிய பணிகளை எடுத்துரைத்தும், மேலும் சில குறிப்புகளைத் தருவதற்கு முன்பு, நமது மாநில நிதி நிலை பற்றிக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

## வரவு-செலவுத் திட்டம்

1971—72 திருத்த வரவு-செலவுத் திட்டத்தை அளித்த போது, வருவாய்க் கணக்கில் ரூபாய் 342·65 கோடி வரவு இருக்குமென்றும், ரூபாய் 358·52 கோடி செலவிருக்குமென்றும், இதன் விளைவாக வருவாய் பற்றாக்குறை ரூபாய் 15·87 கோடி இருக்குமென்றும் நாம் கருதினோம். இப்போதுள்ள நிலைமையில், வரவு ரூபாய் 377·41 கோடியாக இருக்குமென்றும், செலவு ரூபாய் 375·67 கோடியாக இருக்குமென்றும், வருவாய் உபரி ரூபாய் 1·74 கோடியாக இருக்குமென்றும் கருதப்படுகிறது.

பேரவையின்முன்வைக்கப்படும் 1972—73 வரவு-செலவுத் திட்டப்படி, வருவாய்க் கணக்கில் செலவு ரூபாய் 394·78 கோடியாகவும், வரவு ரூபாய் 397·27 கோடியாகவும் இருக்குமென்றும், இதன் விளைவாக வருவாய் உபரி ரூபாய் 2·49 கோடி கிடைக்குமென்றும் கருதியுள்ளோம்.

## கடன் சுமை

மத்திய அரசுக்கு நாம் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன் சுமையினால் நமக்கு ஏற்படுகிற இடர்ப்பாட்டினையும், இப்பேரவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1972—73-ஆம் ஆண்டில் திட்ட வகையிலும், பிற வகையிலும் மத்திய அரசிடமிருந்து நமக்குக் கிடைக்கும் கடன் தொகை ரூபாய் 45·80 கோடியாகும். ஆனால், இதே ஆண்டில் மத்திய அரசுக்கு நாம் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன் தொகை ரூபாய்



58·88 கோடியாகும். மத்தியத் அரசிடமிருந்து நாம் பெறுவதைவிட, நாம் திருப்பித் தருகிற தொகை ரூபாய் 8 கோடி கூடுதலாக இருக்கிறது. எனவே, மூலதனக் கணக்கில் வளர்ச்சிப் பணிகளுக்கான செலவு முழுவதையும் இம் மாநில அரசின் நிதியிலிருந்தே செய்ய வேண்டி வருகிறது. வட்டி வீதத்தைக் குறைத்தும், கடன் தவணைக் கால அளவை நீட்டித்தும், கடனைத் திருப்பித் தருவதற்கான நிபந்தனைகளைத் தளர்த்த வேண்டுமென்று நாம் மத்திய அரசைப் பலகாலம் வேண்டி வருகிறோம். மாநில அரசின் இந்த நியாயமான முறையீட்டுக்கு மத்திய அரசு இணங்கும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.




### திட்டச் செலவு அதிகப் பற்று

1968–69-ஆம் ஆண்டில் ரூபாய் 93·49 கோடி அளவுக்கு நாம் திட்டத்தை நிறைவேற்றியிருக்க, 1969–70-ஆம் ஆண்டில் ரூபாய் 72·00 கோடி நாம் செலவிடுவதற்கு மட்டுமே மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. இவ்வாறு குறைவான தொகை ஒதுக்கினால், வளர்ச்சி வேகம் தடைப்பட்டுப் பின்னேக்கிப் போகும் என நாம் சுட்டிக் காட்டினோம். எனினும், 1970–71-ஆம் ஆண்டுத் திட்டத்தை ரூபாய் 79·30 கோடியாகவும், 1971–72-ஆம் ஆண்டுத் திட்டத்தை ரூபாய் 80·20 கோடியாகவும் அமைக்க வேண்டுமென மத்திய அரசு நம்மை வலியுறுத்தியது. ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், ரூபாய் 575 கோடியாவது செலவிட வேண்டுமெனவும், ஆண்டொன்றுக்கு ரூபாய் 100 கோடி முதல் ரூபாய் 125 கோடி அளவிலேனும் செலவிட வேண்டுமெனவும், நாம் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டோம். இதற்காக மத்திய அரசு நமக்கு அளிக்கும் நிதி உதவியாகிய ரூபாய் 202 கோடியை ரூபாய் 250 கோடியாக உயர்த்துவது; நிதி ஆணைக்குழு நமக்கிழைத்த அநீதியைப் போக்குவது; கடன் தவணைக் கால அளவை மாற்றி அமைப்பது; இவைபற்றி நாம் விடுத்த வேண்டுகோளைப் பரிவுடன் கருதிப் பார்க்க வேண்டுமென மத்திய அரசை நாம் வேண்டினோம். இக் கோரிக்கைகள் மத்திய அரசின் ஆய்வில் இருப்பதை யொட்டித்தான், 1969–70-ஆம் ஆண்டுத் திட்டத்தை ரூபாய் 87·05 கோடி அளவிலும் 1970–71-ஆம் ஆண்டுத் திட்டத்தை ரூபாய் 97·45 கோடி அளவிலும், நிறைவேற்றி, 1971–72-ஆம் ஆண்டுத் திட்டத்தை ரூபாய் 114·98 கோடி அளவிலும் செயல்படுத்தி வருகிறோம். இதற்காக நம்மால் முடிந்தவரை கூடுதல் நிதி ஆதாரத்தைத் திரட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் நாம் எடுத்துள்ளோம். அதே நேரத்தில், திட்டத்தின் கீழ் வராத செலவினங்களை நாம் எவ்வகையிலும் உயர்த்திவிடவில்லை. ஊதிய ஆணைக்குழு பரிவுரைகளின் விளைவினை நீக்கிவிட்டுப் பார்த்தால், திட்டத்தின்கீழ் வராத செலவின் அளவு, கடந்த சில ஆண்டுகளாக, 1968–69-ஆம் ஆண்டில் இருந்ததைவிடப் பெருமளவு உயர்வு இன்றி இருப்பதை மத்திய அரசுக்கு எடுத்துக் காட்டியுள்ளோம். எனவே, செலவைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்து, நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கும் நம்மால் ஆனதைச் செய்துள்ள இந்நிலையில், இந்த அளவுத் திட்டத்தை விரைந்து நிறைவேற்றியது நியாயமேயாகும். நாம் எதிர்பார்த்த இவ்வுதவி கிட்டாத சூழ்நிலையில், திட்டச் செலவின் விளைவாகவே ரிசர்வ் வங்கியிடம் நமக்கு அதிகப்பற்று ஏற்பட்டிருக்கிறது. நடப்பாண்டு திட்ட அளவினைக் குறித்தும், நமது பொதுவான நிதிநிலைமையினைக் குறித்தும், மத்திய நிதி அமைச்சருடனும் மத்திய திட்ட அமைச்சருடனும் திட்ட ஆணைக் குழுவுடனும் கடந்த டிசம்பர்த் திங்களில் நான் கலந்து பேசினேன்; இம் மாநிலத்தின் 1972–73-ஆம் ஆண்டுத் திட்டத்தின் அளவு ரூபாய் 117 கோடியாக இருக்கவேண்டுமென்றும், நடப்பாண்டுத் திட்டச் செலவு ரூபாய் 114–115 கோடியாக இருக்கலாம் என்றும் அக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அதற்கேற்ப, உங்கள் முன் வைக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தின்படி, நடப்பாண்டில் ரூபாய் 114·98 கோடி திட்டத்திற்கும், 1972–73ஆம் ஆண்டில் ரூபாய் 116·63 கோடி திட்டத்திற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. அப் பேச்சுக்களின் அடிப்படையில், 1971–72-ஆம் ஆண்டிற்குரிய தேவையான திட்டத்திற்கு ஆகும் செலவின் விளைவாக ஏற்படும் அதிகப்பற்றைச் சரி செய்ய மத்திய அரசின் வழிவகை முன்பணமாக ரூபாய் 66·33 கோடி வரவு-செலவுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளது. இதில், ரூபாய் 1·99 கோடி இந்த ஆண்டிலேயே மத்திய அரசுக்குத் திருப்பிக் கொடுக்கப்படும். ரூபாய் 9·95 கோடி 1972–73-ல் திருப்பிக் கொடுக்கப்படும். அசல் வகையிலும் வட்டி வகையிலும் இந்திய அரசுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய இந்தத் தொகைக்காக வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

### வேளாண்மை

பார் முழுதும் ஏர் முனையில் எனினும் அதனை ஏற்றமிகு முனையாக ஆக்கப் பசுமைப் புரட்சி நடத்துகிறோம். கவின் பெறும் வசதிகளை விரிவுபடுத்தியும், பாசன வாய்ப்புகள், உரங்கள், பயிர்ப் பூச்சிக் கொல்லிகள் முதலியன எளிதாகக் கிட்டும் வண்ணம் செயல்பட்டும் வருகிறோம். மிகு பயன் தரும் பயிர் வகைகள் நடப்பாண்டில் 57 இலட்சம் ஏக்கரில் விளைவிக்கப்பட்டுள்ளன. 1972–73-ஆம் ஆண்டின் இதற்கான இலக்கு 66 இலட்சம் ஏக்கராகும். சத்துணவில் சிறப்பிடம் பெற்றுள்ளவைகளில் ஒன்றான புரதம் மிகுந்த பயறு வகைகளை 1967–70-ஆம் ஆண்டில் 11 இலட்சம் ஏக்கரில்

விளைவித்ததற்கு மாறாக, 1971–72-ஆம் ஆண்டில் 14 இலட்சம் ஏக்கரில் விளைவித்து வருகிறோம். குடுமியா மலையில் பயறு விதைப் பண்ணை ஒன்றைத் தொடங்கியுள்ளோம். பயறு உற்பத்தி பெருகுமேயானால், நமது மாநிலத்தில் அதன் விலை கட்டுப்படுத்தப்பட வழி ஏற்படும்.

### வேளாண்மையில் புதிய முறைகள்

உழவர் பிரச்சினைகளை ஆராய்ச்சியாளர்களுக்கு எடுத்துரைத்து, ஆராய்ச்சியாளர்கள் கண்ட புதிய முறைகளை உழவர்களிடம் அறிமுகப்படுத்துவதே வேளாண்மை விரைந்து முன்னேறுவதற்கான சிறந்த வழியாகும். குடுமியா மலையிலும், ஏனைய ஆராய்ச்சி நிலையங்களிலும் இந்தப் பணி தீவிரமாக்கப்படும். நெல், பருத்தி, பயறு ஆகியவற்றின் புதிய வகைகளின் மேம்பாட்டில் முனைப்புடன் பணி தொடங்கிவிட்டது. நெட்டிழைப் பருத்தியின் வளர்ச்சியில் இப் பல்கலைக் கழகம் விரைந்து கவனம் செலுத்தி அந்தப் பருத்தியின் இறக்குமதியையே நாம் பெரிதும் நம்பியிருப்பதை மட்டுப்படுத்துமெனக் கருதுகிறேன்.

### வேளாண்மைத் தொழிற் கழகம்

வேளாண்மைத் தொழிற் கழகம் ஏற்படுத்தியுள்ள பணி நிலையங்களின் வளர்ச்சி மகிழத்தக்க வகையில் அமைந்துள்ளது. இதுவரையில் டிராக்டர் பழுது பார்க்கும் நிலையங்கள் ஐந்து ஏற்படுத்தப்பட்டுள்ளன. வேளாண்மைத் தொழிற் கழகம் மூலமாக 1971–72-ல் இதுவரை 1,080 டிராக்டர்கள் கொடுக்கப்படும். பயிர்ப்பூச்சிக் கொல்லி மருந்துகள் தயாரிப்போடு மட்டுமல்லாமல், பல்வேறு வேளாண்மை பயிரிடு பொருட்கள் வழங்குவதிலும் இக் கழகம் கவனம் செலுத்தக் கருதியுள்ளது.

### வேளாண்மைக் கடன் வசதி

கூட்டுறவுத் துறையில் வேளாண்மைக்கென 1966–67-ல் ரூபாய் 31·41 கோடி



யும், 1970–71-ல் ரூபாய் 44·43 கோடியும் குறுகிய கால, மத்திய காலக்கடன்வசதி அளித்துள்ளதை ஒப்புநோக்கின், நமது சாதனையின் வெற்றி வெள்ளிடைமலையென விளங்கிடும். 1971–72-ல் ரூபாய் 50 கோடியும், 1972–73ல் ரூபாய் 61 கோடியும் கடன் வசதியளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. கூட்டுறவு இயக்கத்தின் வாயிலாக வழங்கப்பெறும் நீண்ட காலக் கடன் வசதி 1966–67-ல் ரூபாய் மூன்று கோடி அளவிலிருந்து 1968–69ல் ரூபாய் 15·48 கோடியாகவும், 1970–71-ல் ரூபாய் 22·66 கோடியாகவும் உயர்ந்தது; 1971–72-ல் ரூபாய் 29·40 கோடிக்கு உயரும். 1972–73-ல் அதற்கு மேலும் உயருமென எதிர்பார்க்கிறோம்.

### கால்நடை வளர்ப்பு

கால்நடை மருத்துவப் பணியின் சீரமைந்த ஒருங்கிணைப்புத் திட்டத்தை அரசு மேற்கொண்டுள்ளது. 1972–73-ல் பத்து புதியகால்நடை மருந்தகங்கள் உருவாகும். ஒருசில மாவட்டங்களில் கால்நடை வளர்ச்சிச் சிறப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்படும். கோழிப் பண்ணையும், பன்றி வளர்ப்பும் சீராக விரைந்து நடைபெறுகிறது. 1970–71-ல் ரூபாய் 3·06 கோடி என்று இருந்ததற்கு மாறாக, 1972–73-ல் கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பில் ரூபாய் 4·30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.



### பால் வழங்கு திட்டம்

பால் உற்பத்தித் திட்டங்களைச் செயல்படுத்தியும், பால் சேகரிப்பு, பாலைப் பதப்படுத்துதல், எடுத்துச் செல்லுதல் போன்றவற்றில் வசதிகளை ஏற்படுத்தியும் நகரங்களின் கூடுதல் பால் தேவையை நிறைவு செய்து கிராமப் பகுதிகளில் வருமானத்தைப் பெருக்கத் திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ், இந்தியப் பால் பண்ணைக் கழகம் இம் மாநிலத்தில் பால்பண்ணைச் சீரமைப்பிற்கு ரூபாய் 8·87 கோடி ஒதுக்கியுள்ளது, இது பால்பண்ணைக்குரிய இயல்பான திட்டங்களுக்கு மேற்பட்ட சிறப்புத் திட்டமாகும். 1967–68-ல் 33,000 லிட்டர் பாலை நாள் ஒன்றுக்கு உற்பத்தி செய்த மாதவரம் பால் பண்ணை, இப்போது 70,000 லிட்டர் என்ற நிலையை எய்தியுள்ளது. பால் உற்பத்திப் பெருக்குத் திட்டத்தின்கீழ், சென்னை மாநகருக்கு வழங்கும் பால் அளவு, மூன்று இலட்சம் லிட்டர்களாக ஐந்தாண்டுளில் உயர்த்தப்படும். ரூபாய் 55 இலட்சம் செலவில் சென்னையில் இரண்டாவது பால்பண்ணை அமைத்திட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பால்பண்ணைத் தொழில் விரிவடைவதன்மூலம், செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, சேலம், கோவை, நீலகிரி, மதுரை, திருச்சி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களின் பகுதிகளில் உள்ள குடியானவர்களுக்குக் கணிசமான கூடுதல் வருவாய் கிடைக்கும். இத்திட்டங்கள் செம்மையாகச் செயல்படுத்தத் தமிழ்நாடு பால் பண்ணைக் கழகம் ஒன்று நிறுவப்பட்டு வருகிறது.

### பாசன வசதி

பாசன ஏற்பாடுகளின் பராமரிப்பிற்கான நிதி ஒதுக்கீடு, 1966—67-ல் ரூபாய் 7·89 கோடியிலிருந்து 1971—72-ல் ரூபாய் 14·23 கோடிக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இது 1972—73-ல் ரூபாய் 14·28 கோடியாக அமையும். இந்த நிதியைக் கொண்டு காவேரி, அமராவதி, வைகை, தாமிரபரணி போன்ற ஆற்றுப் பாசன ஏற்பாடுகளின் பராமரிப்பு வேகமாகச் செயல்படுத்தப்படும். தற்போதுள்ள பாசன ஏற்பாடுகளைத் தக்க முறையில் மாற்றி அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை அரசு ஆய்ந்து செயல்பட்டு வருகிறது. தஞ்சைப் பாசன ஏற்பாட்டைப் புதுமைப் படுத்தும் நமது செயற்குறிப்புகளுக்கு உலக வங்கி மதிப்பீட்டுத் தூதுக் குழுவினர் ஒப்புதல் அளித்திருந்த போதிலும், மத்திய அரசு, தொழில் நுட்ப அனுமதியை வழங்கியிருந்த போதிலும், நாம் எண்ணியவாறு புதுமைப் படுத்தும் பணிகள் நடைபெற முடியாமல் தடைப்பட்டு விட்டன. வேளாண்மை உற்பத்தி நலனையும், நீர் வளத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதையும் எண்ணிப்பாராமல் இன்றியமையாத இத் திட்டத்தின் செலவை ஒதுக்கி வைப்பது, பொருளாதார வளர்ச்சிக் கண்ணோட்டத்தில் விவேகமுடையதல்ல என்பதைப் பன்முறையெடுத்துச் சொல்லியிருக்கிறோம். இத்தகைய நேரங்களில் மத்திய அரசு தலையிட்டு மாநிலங்களுக்கிடையே உள்ள தண்ணீர்த் தகராறுகளுக்கு நியாயமான தீர்வு காணவேண்டுமென்றே எவரும் விரும்புவர்.

### கங்கை-காவிரி இணைப்பு

மாநிலங்களுக் கிடையில் தண்ணீர்த் தகராறுகள் ஏற்படாமலே இருக்கவும், எழுந்த பிரச்சினைகள் எளிதில் தீர்ந்திட ஏற்ற வழியாகவும், கங்கை நதி தீரத்திலிருந்து காவிரி நதி தீரம் வரையில் வளங்கொழிக்கச் செய்யும் திட்டமாகவும், இந்தியப் பெருநாட்டின் ஒற்றுமைச் சங்கிலியாகவும், காவிரியுடன் கங்கையை இணைக்கும் மகத்தான திட்டத்தை உடனடியாகத் தொடங்க வேண்டுமென்று மாநில அரசின் சார்பில் மத்தியத்திட்ட அமைச்சருடனும், நீர்ப் பாசனத்துறை அமைச்சருனுடம், நான் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளேன். அந்த மிகப் பெரிய திட்டத்தில் கங்கை காவிரி இணைப்புக் கிடையே கோதாவரி, கிருஷ்ணா போன்ற நதிகளும் இணைக்கப்படும். முதலில் காவிரியுடன் அந்த நதிகளை இணைத்தும், அதேபோல வடக்கே மகாநதி போன்றவைகளைக்கங்கையுடன் இணைத்தும், அதன் தொடர்பாகக் கங்கை—காவிரி நதியை இணைக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டால், படிப் படியாகத் தொடர்புடைய மாநிலங்கள் பயன்பெற்று, ஓரிடத்தில் வெள்ளப்பெருக்கும் பிறிதோரிடத்தில் வறட்சியும் என்கிற ஏற்றத்தாழ்வான நிலையும் மாறிடக் கூடும். அதற்கான ஆரம்பப் பணிகளை மத்திய அரசு மேற்கொள்ளவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

### புதிய பாசனத் திட்டங்கள்

மாநிலம் முழுவதும் பாசன வசதி பெறும் பழைய ஆயக்கட்டுகளை நிலைப்படுத்தவும், புதுப் பாசனம் பெறும் ஆயக்கட்டுகளைப் பெருக்கிடவும் தொடங்கப்பட்ட சின்னாறு, பரப்பலாறு, பாலாறு—பொரந்தலாறு, தண்டரை, நந்தன் கால்வாய், கருப்பாநதி, பொன்னணியாறு, பிளவுக்கல் ஆகிய திட்டங்களுக்கு, 1772—73-ஆம் ஆண்டு ரூபாய் 3·90 கோடி செலவழிக்கப்பட இருக்கிறது; இது உட்பட பாசன வசதிகள் ஏற்படுத்த ரூபாய் 8·17 கோடி மூலதனக் கணக்கில் திட்டத்தில் செலவிடப்பட இருக்கிறது என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.




### மின் வசதி

மின்னொளி வசதி இல்லாத கிராமங்களே தமிழகத்தில் இல்லாத நிலைமையை உருவாக்குவோம் என்று இந்த அரசு மேற்கொண்ட சூளுரையின் அடிப்படையில் 1971—72-ஆம் ஆண்டு இறுதியில் மின்வசதி பெற்ற கிராமங்களின் எண்ணிக்கை 50,900 என இருக்குமென மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கொள்கிறேன். 1972—73-ஆம் ஆண்டு இறுதியில் நமது குறிக்கோள் தமிழகம் முழுவதும் பெருமளவில் நிறைவேறிவிடும்.

அதிக அளவு மின்சார உற்பத்திக்கான திட்டங்களை நாம் உடனடியாக வகுக்க வேண்டியுள்ளது. தூத்துக்குடியில் அனல் மின்நிலையம் ஒன்றை ஏற்படுத்தும் திட்டம் நம்மிடம் உள்ளது. இத் திட்டத்திற்கு விரைவில் இந்திய அரசு அனுமதி வழங்கும் என நம்புகிறோம். நெய்வேலி அனல் மின் உற்பத்தி இயந்திரச்சாலையை முழுவதும் பயன்படுத்திக்கொள்ளும் வகையில், இரண்டாவது சுரங்கம் வெட்டும் வேலை இன்றியமையாததாகிறது. கல்பாக்கம் திட்டத்தின் வேலைகளையும் இந்திய அரசு விரைவுபடுத்துமென நம்புகிறேன். நமது மின்னிணைப்பில் 100 மெகாவாட் மின் உற்பத்தியை அதிகரித்துக் கொள்ளும் வகையில் பாண்டியாறு-புன்னப்புழா திட்டத்திற்குக் காலம் தாழ்த்தாது ஒப்புதல் அளிக்குமாறு கேரள அரசை விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

### சாலைகள், போக்குவரத்து வசதி

வரும் ஆண்டில், சாலை மேம்பாட்டிற்கான புதிய செலவுக்காக ரூபாய் 3·68 கோடிக்கும், சாலைப் பராமரிப்புக்காக ரூபாய் 6·63 கோடிக்கும் வகை செய்துள்ளோம். இது தவிர, தேசிய நெடுஞ்சாலைகளுக்காக 1971—72-ல் ரூபாய் 5·44 கோடி நம் மாநிலத்தில் செலவிடப்படும். இந் நிதிநிலை அறிக்கையில் அடங்கியுள்ள அர

சின் முக்கியமான முடிவு ஒன்று 1,000 மைல் நீளமுள்ள பேருந்துகள் செல்லும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை அரசு மேற்கொள்ளுவது பற்றியதாகும். இதனை இந்த அவை வரவேற்குமென நம்புகிறேன். இந்த அவையின் முன் நான் அறிவிக்க விரும்பும் இன்னொரு முக்கியமான செய்தி, ரூ. 5·33 கோடி செலவாகும் பாம்பன் பாலத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்பதாகும். இதனையொட்டி, நெடுநாட்களாக நாம் வேண்டிவரும் சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்திற்கும் மத்திய அரசு விரைவில் ஒப்புதல் அளிக்குமென நம்புகிறேன்.



### கிராம முன்னேற்றம்

சமதர்ம அரசின் முதன்மையான பணிகளில் ஒன்று, நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் இடையேயுள்ள ஏற்றத்தாழ்வை அகற்றுவதாகும். அந்த அடிப்படையில் நமது அரசு கிராமப்புற முன்னேற்றத்தில், கிராம மக்களின் நல்வாழ்வில் தொய்வில்லாத அக்கறையைத் தொடர்ந்து காட்டிவருகிறது. எல்லாக் கிராமங்களுக்கும் மின்னொளி என்பதைப் போல, எல்லாக் கிராமங்களிலும், எல்லா வசதிகளும் இருந்திடச் செய்ய வேண்டுமென்பதே அரசின் குறிக்கோளாகும். பெரும்பாலான கிராமங்களில் இணைப்புச் சாலைகள் இல்லை. குடி நீர் வசதியில்லை. இந்தத் தொல்லை தீரப் பல்லாண்டுக் காலமாகத் தவம் கிடக்கும் பட்டிக்காட்டுப் பாமர மக்களை மகிழச் செய்ய வேண்டிய மகத்தான பொறுப்பு சாமான்ய மக்களின் பிரதிநிதிகளான நமக்குத்தான் உண்டு என்பதை நாடறியும். சிற்றூர்கள் அனைத்துக்கும் சீர்மிகு சாலைகள் அமைத்திடவும், குடிநீர் வசதி அளித்திடவும், 300 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகுமெனினும், அதனை எண்ணிப் பெருமூச்சு விட்டுக் கொண்டேயிருந்தால் அந்த நல்ல காரியத்திற்கான தொடக்க விழாவில் கூட, நம்மால் அடியெடுத்து வைக்க முடியாமல் போய்விடும். அந்தப் பயன்மிகு காரியத்தைப் படிப்படியாகச் செய்து முடித்திட வேண்டுமென உறுதி செய்து, முதற்கட்டமாக ஐந்தாண்டுக் காலத்தில் மாநிலம் முழுவதும் 1,500 மக்களும், அதற்கு மேம்பட்டவர்களும் வாழ்கின்ற கிராமங்களை முக்கியச் சாலைகளுடன் சேர்க்கும் இணைப்புச் சாலைகளை அமைப்பதென்றும், அதற்கிடையே உள்ள சிறிய கிராமங்களை இணைக்கும் திட்டத்தையும் சேர்த்து நிறைவேற்றுவதென்றும், அதற்காகும் செலவிற்கு மோட்டார் வாகன வரி மீது 10 சத வீதம் உபரி வரி விதிப்பதென்றும் முடிவு மேற்கொள்ளப்படுகிறது. இதற்காகக் கிராமச் சாலை வளர்ப்பு நிதியொன்று அமைக்கப்படுகிறது. இதற்கு மேலாக, ஒன்றியங்கள் தங்கள் பகுதியிலுள்ள சிற்றூர்களை இணைப்பதற்கான சாலைகளை அமைப்பதற்காகவும், குடிநீர் வசதியைப் பெருக்குவதற்காகவும் ஊரகத் தீர்வை மேல்வரி (Local Cess sur-charge) 1½ ரூபாய் வரை விதிக்கலாம் என்று இப்போதிருப்பதை 2½ ரூபாய் வரையில் விதிப்பதற்கு ஒன்றியங்களுக்கு அனுமதி அளிக்கப்படும். அரசுக்குள்ள நிதிப் பற்றுக்குறையின் காரணமாகவும், அதே நேரத்தில் தீவிரத் திட்டமிட்டு இணைப்புச் சாலை வசதிகளையும், குடிநீர் வசதிகளையும், எல்லாக் கிராமங்களும் பெற வேண்டுமென்பதற்காகவும் இத்தகைய ஏற்பாடு செய்யப்படுகிறது. குடிநீர் வாரியம் செயல்படுத்துகிற நகர் குடிநீர் வழங்கும் திட்டத்தில் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் உதவியைப் பெறுவது போலவே கிராமப் பகுதி குடிநீர் வழங்கு திட்டத்திற்கும், ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் உதவியை நாடியுள்ளோம்.

### மக்கள் நல்வாழ்வு

மக்கள் நலம் பேணுவதற்கும் பொதுவான புறத்தூய்மை அமைவதற்கும் இந்த அரசு எடுக்கும் முயற்சிகள் மேலும் தீவிரப்படுத்தப்படுகின்றன — பரவலாக்கப்படுகின்றன — என்பதற்கு எடுத்துக்காட்டாக 1966—67-ஆம் ஆண்டில் ரூபாய் 16·75 கோடி ஒதுக்கீடும், 1971—72-ஆம் ஆண்டில் ரூபாய் 33·38 கோடி ஒதுக்கீடும், 1972—73-ஆம் ஆண்டில் ரூபாய் 34·69 கோடி ஒதுக்கீடும் செய்யப் பட்டிருப்பதை ஒப்பு நோக்கிட வேண்டுகிறேன்.

மதுரை, கோவை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் மருத்துவக் கல்லூரி மேம்படுத்தும் புதிய ஏற்பாடுகள்—

குடந்தை, ஆத்தூர், திருப்பத்தூர், தென்காசி ஆகிய இடங்களில் 32 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைப் பிரிவுகளைக் கட்டுதல்—

தாளிப்பாடி, திட்டக்குடி, வள்ளிபுரம், காரைக்குடி, மேட்டூர் அணை ஆகிய இடங்களில் மருத்துவமனைப் படுக்கைகளை அதிகப்படுத்துதல்—

ஆகியவை இந்த ஆண்டு மேற்கொள்ளும் திட்டங்களாகும். இந்தத் துறையில் புதிய வளர்ச்சித் திட்டமொன்றை அறிவிக்க விரும்புகிறேன். மாவட்டக் கழகங்கள் ஏற்கெனவே நடத்தி, ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைத்த இருநூற்றுக்கு மேற்பட்ட மருந்தகங்களை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமென்ற ஊராட்சி ஒன்றியங்களின் நீண்டநாள் முறையீட்டை ஏற்றுக் கொண்டு, முதற்கட்டமாக 1972—73-ஆம் ஆண்டில் 45 ஒன்றிய மருந்தகங்களை இந்த அரசு எடுத்துக் கொள்ள முன்வந்துள்ளது.

### கல்வி

1967-68-ஆம் ஆண்டு 'கல்வி' என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கிய தொகை ரூபாய் 53·56 கோடியென்பதற்கு மாறாக, 1972-73-ஆம் ஆண்டு ரூபாய் 89·85 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கல்வித் துறையில் முன்னேறியுள்ள நாடுகளின்

கல்விச் செழுமையை நமது அறிவுக் கூடங்களில் மணங் கமழ்ந்து மலரச் செய்வதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில் நிபுணர் குழு ஒன்றினை அமைக்க அரசு முடிவெடுத்துள்ளது.

தமிழகத்தை விட்டு வெளியேறி வெளி நாடுகளுக்குச் சென்று அங்குள்ள பல்வேறு நிறுவனங்களில் பலர் பணி புரிகின்றனர். அவர்களில் சிலர் தமிழகத்திற்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அழைக்கப்பட்டு, அவர்கள் கற்றுள்ள புதிய மேம்பாட்டு முறைகளை இங்குள்ள நிலையங்களில் பயன்படுத்துவதற்கு ஏற்றதாக ஒரு புதிய திட்டத்தை அரசு மேற்கொள்கிறது. அத்தகையோரில் தகுதி படைத்த ஐம்பது பேருக்கு உயர்பணி உதவித்தொகை ( Fellowship ) அளிக்கப்படும். அதற்குத் தமிழ்நாடு உயர்பணி உதவித்தொகைத் திட்டம் (Tamil Nadu Fellowships Scheme) எனப் பெயர் இடப்படும். ஆறு திங்கள் முதல் ஓராண்டுக் காலம்வரை, அவர்கள் நம் நாட்டிலுள்ள கல்வி நிறுவனங்களில் பணியாற்ற இத்திட்டம் வாய்ப்பளிக்கும்.

### அரிசன, பிற்பட்ட வகுப்பினர் நலன்

அரசின் மேம்பாட்டுத் திட்டங்களிலே, அரிசன, பிற்பட்ட வகுப்பினரது நலன்களுக்கான திட்டங்கள் முக்கிய இடத்தைத் தொடர்ந்து பெற்று வருகின்றன. 1966–67-ல் ரூபாய் 3·59 கோடி மாநில அரசு ஒதுக்கியிருந்ததற்கு மாறாக, 1972–73-ஆம் ஆண்டில் ரூபாய் 8·41 கோடி அரிசன வகுப்பினர் மேம்பாட்டிற்காக மொத்தம் ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து இதற்கெனத் தனித்த நிதிஒதுக்கம் நிறுத்தப்பட்டுவிட்ட போதிலும், இந்நிதி ஒதுக்கத்தை நாம் செய்துள்ளோம். இவ்வரசு பொறுப்பேற்ற நிலையில் 2,400 அரிசனக் குடியிருப்புகள் மின் வசதி பெற்றிருந்தன ; நாம் எடுத்த தீவிர முயற்சிகளின் பயனாக, இன்று 15,600 அரிசனக் குடியிருப்புகள் மின்னொளி பெற்றுத் திகழ்வதை மகிழ்வுடன் இங்குக் குறிப்பிட விரும்புகின்றேன். பிற்பட்ட வகுப்பினர் நலன்களுக்காக 1966–67-ல் ரூபாய் 0·91 கோடி மாநில அரசு செலவிட்டதற்குப் பதிலாக, 1972–73-ல் மொத்தம் ரூபாய் 4·68 கோடி செலவிட வகை செய்யப்பட்டுள்ளது.

### கைத்தறி நெசவாளர்கள்

நமது மாநிலத்தில் கைத்தறி நெசவாளர்கள் நலன்களுக்கான திட்டநிதி ஒதுக்கம் 1966–67-ல் ரூபாய் 1·82 கோடியாக இருந்ததற்கு மாறாக, 1971-72-ல் ரூபாய் 2·03 கோடியாக உயர்த்தப் பட்டது ; 1972–73-ல் ரூபாய் 2·34 கோடியாக மேலும் உயர்த்தப்பட்டுள்ளது. கைத்தறித்தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரைகளை அரசு விரைவில் பெற்று, ஆய்ந்து முடிவுகள் எடுக்கும்.

### தொழிலாளர் நலன்

அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில வருந்தத்தக்க நிகழ்ச்சிகள் தொழிலாளர்கள் பிரச்சினையில் உருவாயிற்றெனினும், மாநிலமெங்குமுள்ள தொழிலாளர் நலனில், இந்த அரசு மிகுந்த அனுதாபத்துடன் அக்கறை காட்டி வந்துள்ளது. இந்தியாவின் வேறு பல பகுதிகளோடு ஒப்பிடும் போது, தமிழகத்தில் தொழிலாளர் பிரச்சினைகளில் அரசு கடைபிடித்து வரும் நிதானப் போக்கினை நடுநிலையாளர் உணர்ந்து பாராட்டவே செய்வர். வன்முறையாளர்களும், சமூக விரோதிகளும், சில கிளர்ச்சிகளைப் பயன்படுத்திக் கொள்ளும் போது சட்டம், ஒழுங்கினைக் காத்து அமைதி நிலவிடச் செய்யும் பொறுப்பை இந்த அரசு தட்டிக் கழித்துவிட இயலாது.




கோவையில் மூடப்பட்ட ஐந்து ஆலைகளைத் தொழிலாளர் நலனுக்காக ஏற்கெனவே இந்த அரசு திறந்ததும், அதற்கு முன்பு வேலையின்றிப் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு இரண்டு இலட்ச ரூபாய் நிவாரணத் தொகை அளித்ததும், இப்போதும் மூடப்பட்ட ஆலைகளைத் திறந்திட மத்திய அரசோடு வாதாடுவதோடு நில்லாது பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு மூன்று இலட்ச ரூபாய் நிவாரணத் தொகை அளிக்க முன் வந்ததும், ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிலாளர்களுக்கு நிவாரணத் தொகை அளித்ததும், தொழிலாளர் நலனுக்காகவே கோவை டெக்ஸ்டைல்ஸ், சதர்ன் ஸ்டரக்சரல்ஸ், லாஸ்கோ ஆகிய தொழிற் சாலைகளை அரசு பொறுப்பேற்று நடத்த முன் வந்ததும் அவர்கள்பால் அரசு கொண்டுள்ள அன்பின் அடையாளங்களேயாகும்.

பொருளாதாரக் குவியல் முறையை அகற்றிச் சமதர்ம சமுதாயத்தை நிறுவிட, கூட்டுறவுத் துறை, அரசுத் துறைகளில் தொழில் வளர்ச்சி காணவேண்டும், இந்தத் துறைகளில் நடைபெறும் தொழில்களில், தொழிலாளர்களுக்கு நிருவாகத்திலும், பங்கு மூலதனத்திலும் இடம் அளித்து நிருவாகிகளும், தொழிலாளிகளும் சேர்ந்து தொழிலை நிருவகிப்பதற்கும் வழிவகை காண்பது ஒரு புதிய கொள்கைத் திட்டமாகும். இதில் தொழில் சீருறவும், தொழிலாளர் நலன் பாதுகாக்கப்படவுமான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து பரிந்துரை செய்ய ஒரு குழு நியமிக்கப்படும்.

### தொழில் வளம்

தமிழக அரசு இடைவிடாது எடுத்துள்ள முயற்சிகளின் பயனாக மத்திய அரசு, சேலம் உருக்காலைக்கான ஆக்கப்பணிகளை விரைவு படுத்துவதற்கு இணக்கம் தெரிவித்திருப்பதற்கு நன்றி கூறுவதோடு, சேலம் திட்டத்திற்குத் தடைகளாக இடையில் வந்த சில பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விட்டதற்கும் மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்கிறேன். ஆளுநர் உரையில் மாநில அரசின் தொழிற்

கொள்கையும், தொழில் வளர்ச்சிக்கு அரசு எடுத்த நடவடிக்கைகளுக்குக் கிடைத்த வெற்றிகளும் விரிவாக இடம்பெற்றதைப் பேரவை உறுப்பினர்கள் நன்கு அறிவர். 1971-ஆம் ஆண்டில் இதுவரையில் மத்திய அரசிடமிருந்து, நமது அரசு எடுத்த நடவடிக்கைகளின் விளைவாக 40 அனுமதிக் கடிதங்களும், 45 உரிமங்களும் புதிய தொழில்கள் தொடங்குவதற்குக் கிடைத்துள்ளன.

### அரசு அலுவலாளர்கள்

அரசு எடுக்கும் முடிவுகளைச் செயல்களாகத் தொடுக்கும் அரசு அலுவலாளர்களின் வாழ்வில் நிம்மதியிருக்க வேண்டுமென்ற குன்றா விழைவுடன், இரண்டாவது ஊதியக் குழு




அமைத்து, ஆண்டொன்றுக்கு ரூபாய் 23 கோடி அளவுக்கு ஊதிய உயர்வு அளித்துள்ள இந்த அரசு, அண்மையில் அவர்களது மிக முக்கியமான முறையீடு ஒன்றை ஏற்றுக் கொண்டுள்ளது. பல்லாண்டுக் காலமாக அவர்களை அடிமை மனப்பான்மையுடன் நடத்தி வருவதாக அவர்களால் கருதப் பட்டதும், எடுத்துச் சொல்லப்பட்டதுமான இரகசியக் குறிப்பேட்டு முறையை அடியோடு ரத்து செய்து விட்டோம். பதவி உயர்வுகளுக்கு, அலுவலர்கள் மீது வெளிப்படையாகச் சாட்டப்பெற்ற குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு, அதற்கான ஆதாரக் குறிப்புகள் இருந்தால் அவைகளை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொண்டால் போதுமானது. இரகசியக் குறிப்போ, திறந்த குறிப்போ தேவையில்லை.

ஊதியக் குழுவின் பரிந்துரைகளை ஏற்று, 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல் வீட்டு வாடகைப்படி விகிதங்களை மேலும் உயர்த்த வகை செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட விரும்புகின்றேன். இதன் பயனைச் சென்னை நகரில் 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல், ஊதியத்தில் 12 சத வீதமும், கோவை, மதுரையில் 8 சத வீதமும், இரண்டாம் நிலைப் பகுதிகளில் 6 சதவீதமும், மூன்றாம் நிலைப்பகுதிகளில் 4 சதவீதமும் ஆக வீட்டு வாடகைப்படி உயர்த்தப்படுகிறது. இதன் விளைவாக ரூபாய் 1·82 கோடி ஆண்டொன்றுக்குக் கூடுதல் தொடர் செலவை அரசு மேற்கொண்டுள்ளது.

நிதி இடர்ப்பாடுகள் மிகுந்த இந் நிலையிலும் தனது அலுவலாளர்கள்பால் அரசுக் குள்ள ஆழ்ந்த அக்கறையை இம் முடிவுகள் எடுத்துக்காட்டுமென நான் நம்புகிறேன். மேலும், அரசு அலுவலாளர்களிடமிருந்தும், ஆசிரியர்களிடமிருந்தும், இரண்டாவது ஊதியக் குழுவில் தங்களுக்கேற்பட்டுள்ள முரண்பாடுகளைக் (Anomalies) களைவதற்காக இதுவரை அளிக்கப்பட்டுள்ள முறையீடுகளைப் பரிசீலித்து, ஆறு திங்களுக்குள்ளாக அரசுக்குப் பரிந்துரைகளை வழங்க அரசுத் தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்படும்.

### தமிழ்நாடு வாணிபக் கழகம்

ஏறிவரும் விலைவாசிகளுக்குக் காரணம், மக்களிடம் 'வாங்கும் சக்தி' உயர்ந்திருக்கிறது என்று கூறி நிம்மதி பெற்றுவிட முடியாது. வாங்கும் சக்தியை எட்டிப் பார்க்க முடியாத ஏழை எளிய மக்கள் ஏராளமாக, வாழ்ந்திடும் நாட்டில் இந்தப் பிரச்சினை அனைத்திந்திய அளவில் பரிசீலித்துத் தீர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். நமது தமிழகத்தைப் பொறுத்தவரையில் உணவுப் பொருள் வாங்கி வழங்கும் கழகம் (Civil Supplies Corporation) ஒன்று அண்மையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் பணி, அரிசி முதலிய ஒன்றிரண்டு பொருள்களை ஓரளவு வாங்கித் தேக்கி வைத்து, விலையேறும்போது நியாய விலையில் மக்களுக்கு வழங்குவது என்பதாகும். குறிப்பிட்ட அளவில் தொடங்கியுள்ள இந்த முயற்சியை மேலும் விரிவுபடுத்தி, மாநில ரீதியாக நம்மால் முடிந்த அளவு விலைவாசிகளைக் கட்டுப்படுத்த, தமிழ்நாடு வாணிபக் கழகத்தை நிறுவுவதற்கு விரைவான நடவடிக்கைகள் குறுகிய காலத்திற்குள்ளாக எடுக்கப்படும்.

### பிச்சைக்காரர் மறுவாழ்வு

ஏற்பது இகழ்ச்சி என்றாள் தமிழ் மூதாட்டி. இகழ்ச்சி யாருக்கு? ஏற்பவருக்கு அல்ல! அவர்கள் ஏற்பது; அதனைப் பார்த்துக்கொண்டிருக்கும் நமக்குத்தான் இகழ்ச்சி. தமிழகத்தில் அறுபதாயிரத்துக்கு மேற்பட்ட பிச்சைக்கார சகோதர சகோதரிகளும், ஆறாயிரத்துக்கு மேற்பட்ட தொழுநோய்ப் பிச்சைக்காரர்களும் நம் உடன் பிறப்புக்களே யாவார். அவர்கள் வறுமைச் சகதியில் நெளியும் புழுக்களாய் வாடிடும் கொடுமை காணச் சகியாது, இந்திய நாட்டிலேயே முதல் மாநிலமாக, நமது தமிழகத்தில் சென்ற ஆண்டு ஜூன் திங்கள் மூன்றாம்நாள் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி தொடங்கப் பெற்றது. என் பணிவான வேண்டுகோளுக்கிணங்க, கருணையுள்ளங்கொண்ட பொதுமக்கள் சில மாதங்களிலேயே ஒரு கோடி ரூபாய்க்கு அதிகமாகப் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதியினை வாரி வழங்கினர். பரனூர், உளுந்தூர்ப்பேட்டை, பருகூர் ஆகிய மூன்று இடங்களில் தொழுநோய் இரவோர்க்கான விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவர்தம் அவதி நீக்கிடும் வண்ணம் தீவிரத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, நமது மாநிலத்தில் பிச்சைக்காரரே இல்லையென்னும் புதுநிலை ஏற்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. அதற்குத் தொடர்ந்து நல்லகம் வாய்த்தோர் நிதி குவித்திட வேண்டுகிறேன். அத்துடன் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் மேலும் அமைத்திடவும், அவர்களுக்குச் சிகிச்சை அளித்திடவும், அவர்களைப் பராமரித்திடவும் அவர்களுக்குத்

தொழிற்பயிற்சி அளித்திடவும் ஆகிய செலவுகளுக்காக, அன்பளிப்பு நிதிகள் மட்டும் போதுமானவையல்ல என்ற நிலையில், குதிரைப் பந்தயவரி, பந்தயம் பிடிப்போர், பந்தயக் கணக்கு இயந்திரம் மீது 15 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாகவும், மற்றவர்கள் மீது 20 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாகவும் உயர்த்தப்படும். இதன் வாயிலாக ஆண்டுக்கு ரூபாய் ஐம்பது இலட்சத்திற்குக் குறையாமல் கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கூடுதல் வருவாய் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு அளிக்கப்படும்.

## நிலச் சீர்திருத்தம்

சமதர்ம வழியில் நடைபயிலும் இந்த அரசு, நிலப் பிரபுக்கள் முறையைக் களையெடுத்து உச்ச வரம்புச் சட்டத்தின் உண்மைப் பயனை அறுவடை செய்ய, முனைந்து முன்னேறுவதை அனைவரும் உணர்வர். 1961-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட உச்ச வரம்புச் சட்டம், விரிவான நீண்டகால எச்சரிக்கை விளம்பரத்துடன் கொண்டு வரப்பட்டதால், சட்டம் வருவதற்கு முன்னே அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான தந்திரங்களில் நிலக் குபேரர்கள் ஈடுபட்டு, பினாமி முறையிலும்—ஏராளமான தங்கு தடையற்ற விதிவிலக்கு வாய்ப்புக்களிலும் தங்கள் பரந்த நிலப்பரப்பை மறைத்துக் கொண்டு நிமிர்ந்து நின்றார்கள். சட்டமோ நாணிக் கோணித் தலை தாழ்த்திக் கொண்டது. அந்த நிலையை மாற்ற அரசு, 1970-ஆம் ஆண்டு மீண்டும் ஒரு உச்ச வரம்புச் சட்டத்தை - பதினைந்து ஸ்டாண்டர்டு ஏக்கரா என்ற அளவில் திடுமென அறிவித்து, அதன் தொடர்பாகக் கரும்பு, மேய்ச்சல் காடுகளுக்கான விதிவிலக்குகளை ரத்து செய்துள்ளது. இந்தப் புரட்சிகரச் சட்டம் பேரவையில் நிறைவேறி, குடியரசுத் தலைவரின் அங்கீகாரம் கிடைத்து அதற்கான பணிகள் நடைபெறத் தொடங்கியுள்ளன. பல்லாண்டுக் காலமாக வீட்டுமனை சொந்தமற்றிருந்த விவசாயத் தொழிலாளிகளுக்குக் குடியிருப்பு மனைகளைச் சொந்தமாக்க நாம் நிறைவேற்றிய சட்டத்திற்குக் குடியரசுத் தலைவரின் அங்கீகாரம் கிடைத்து அந்தப் புனிதப் பணியும் தஞ்சைத் தரணியில் சென்ற திங்கள் 27-ஆம் நாள் திருவையாற்றில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

நிலச் சீர்திருத்தத்தின் மற்றொரு கட்டமாகப் புதிய அறிவிப்பு ஒன்றினைச் செய்ய விரும்புகிறேன். நில உச்ச வரம்புச் சட்டத்தில் உள்ள விதிவிலக்குகளின் மூலம் ஏராளமான நிலங்கள், அரசு கையகப்படுத்த முடியாத நிலையில் உள்ளன. நமது அரசாங்கக் கொள்கையின் அடிப்படையில் ஏற்கெனவே கரும்பு, மேய்ச்சல் நில விதிவிலக்குகளை நீக்கியிருக்கிறோம். அதனைத் தொடர்ந்து, அரசியல் சட்டம் செயல்படத் தொடங்கிய 1950-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26-ஆம் நாளுக்குப் பிறகு பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளைகளில்(Trusts) கல்வி, மருத்துவம் ஆகிய பெயரால் உள்ள அறக்கட்டளைகளுக்குச் சொந்தமான நிலங்களில் அந்த அறக்கட்டளைகளுக்கென ஒரு குறிப்பிட்ட அளவு விதிவிலக்கு அளித்துவிட்டு, 1950—ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26 ஆம் நாளுக்குப் பிறகு பதிவு செய்யப்பட்ட ஏனைய அறக்கட்டளைகளுக்குள்ள நிலங்களுக்கான விதிவிலக்குகள் அனைத்தும் அறவே நீக்கப்படும் என்றும் இந்த மாமன்றத்தில் அறிவிக்கிறேன். இதற்குரிய சட்டம் இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வரப்படும்.

இஃதன்னியில் ஒரு குடும்பத்துக்கு அதிக அளவு 60 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை வைத்திருக்கலாம் என்ற அளவை, 40 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றும் இன்று முதல் மாற்றியமைக்க, வேண்டிய திருத்தங்கள் சட்டத்தில் செய்யப்படும்.

## கடன் நிவாரணச் சட்டம்

நாட்டுப் பொருளாதார வளர்ச்சி யெனும் தருவுக்கு, கிராமப் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படைதான் வளமூட்டும் வேர்களாகத் திகழ்கின்றன. நிலத்தை நம்பி வயிற்றைக் காக்கும் எண்ணிறந்த ஏழை விவசாயப் பெருங்குடி மக்களை, கடன் சுமை கழுத்தை அழுத்திக் கொண்டிருக்கிறது. அவர்கள் அதிக வட்டிக்குத் தனிப்பட்டோரிடம் கடன்கள் பெறுவதும், அந்த வட்டியே முதலைவிட அதிகமாகப் பெருகிப் பயமுறுத்துவதும், திருப்பிச் செலுத்த முடியாமல் திண்டாடுவதும் நம் கண்ணெதிரே காணும் காட்சியாகும். அதே போல் குறைந்த வருமானமுள்ள தொழிலாளர்கள், உழைப்பாளிகள், அரசு அலுவலர்கள், தனிப்பட்டோரிடம் கடன்கள் பெற்றுத் தாங்கவொண்ணா வட்டி விகிதத்தால் கடன் பளு தலைக்கேறத் தவித்திடுகின்றனர்.

இந்த அவல நிலை போக்குவதற்கு, 1938-ஆம் ஆண்டு விவசாயிகள் நிவாரணச் சட்டத்தின் அடிப்படையில் கடன்



நிவாரணங்களை விவசாயிகளுக்கு அளிக்கப் புதியசட்டம் கொண்டு வரப்படுவதோடு, மேலும் குறைந்த வருவாயுள்ள தொழிலாளர்கள், உழைப்பாளிகள், அரசு அலுவலாளர்கள் ஆகியோருக்கும் நிவாரணம் வழங்குகிற வகையில் அவர்களது கடன் சுமையைக் குறைக்கவும், சட்டம் கொண்டு வரப்படுமென்பதைக் களிப்புப் பொங்கிட அறிவிக்கிறேன்.

இது தவிர, நிலக் குத்தகைதாரர்கள், நில உடைமையாளர்களுக்குத் தர வேண்டிய பழைய நிலுவையை நான்கு ஆண்டுகளில், ஆண்டுக்கொரு தவணையாகச் செலுத்திட வேண்டு

மென்று, குத்தகைக்காரர்களுக்கு வசதியாக 1968—ஆம் ஆண்டில் சட்டம் இயற்றியுள்ளோம். இந்தத்தவணைக் காலச் சலுகை கிடைத்தும் கூடக் குத்தகைதாரர்கள் நில உடைமையாளர்களுக்குச் செலுத்திட வேண்டிய பழைய நிலுவைகளை முழுதும் செலுத்த முடியாமல் இடர்ப்படுவதால் அவர்கள் துயரைத் துடைக்கும் வகையில், இந்த நடப்புப் பசலிக்குத் தர வேண்டிய குத்தகையைப் பாக்கியின்றித் தந்திருப்பவர்களாக இருப்பார்களேயானால் அவர்கள் 1971-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாள் முடிய (1380 வது பசலி முடிய) செலுத்த வேண்டிய பழைய குத்தகை நிலுவை அனைத்தும் ரத்து செய்யப்படுவதற்கான சட்டம் இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும் என்பதை மிக்க மகிழ்வுடன் அறிவிக்கின்றேன்.

## மாநில சுயாட்சி

ஏழை நடுத்தர வர்க்கத்தினரின் நல் வாழ்வினையே மையமாகக் கொண்டு, அந்தச் சாமானிய மக்களின் பிரதிநிதிகளாக ஆளும் பொறுப்பிலிருந்து, எத்தனையோ எதிர்ப்புக்கிடையேயும், உயர் மட்டத்திலிருப்போரின் உறுமல்களுக்கிடையேயும், ''இதுகள் ஆள்வதா?'' என்ற ஏகடியங்களுக்கிடையேயும்—மக்கள் தொண்டே மகேசன் தொண்டு எனக் கொண்டு, பழைய அந்தஸ்துக்கள், குடும்பப் பெருமைகள், குலப்பெருமைகள் எதுவுமற்ற பராரிகளின் தோழர்களாய், அரசுக்கடமையாற்றி, இருக்கின்ற அதிகாரங்கள், வசதிகள், வாய்ப்புக்களை அடிப்படையாக வைத்துச் சமுதாயத்தின் அடித்தளத்தில் அழுந்திக் கிடக்கும் மனித தெய்வங்களை ஆராதனைக்குரியவர்களாக ஆக்க, இந்நிதிநிலை அறிக்கை வாயிலாகவும், இதற்கு முன்பு வெளியிடப்பட்ட நிதிநிலை அறிக்கைகள், திட்டங்கள் வாயிலாகவும் பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை எங்களைத் தாழ்வாகக் கருதிடினும், எங்கள் முற்போக்கு எண்ணங்களைத் தாழ்வாகக் கருதிடாதவர்கள், காய்தல் உவத்தலின்றிச் சிந்தித்திடுவர் என நம்புகிறேன்.

நமதரசுக்குள்ள அதிகார வரம்புகளுக்கேற்றவாறு, பின்னடைந்தோர், தாழ்த்தப்பட்டோர், தவித்து நிற்போர் நெஞ்சுயர்த்த ஆவன செய்துள்ளோமெனினும், உடனடியாகச் சந்தித்துத் தீர்வு காண வேண்டிய பல்வேறு பிரச்சினைகளுக்கு அதிகாரமோ, நிதியாதாரமோ, குறைந்த பட்ச உரிமைகளோ கூட இல்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறோம்.

இதற்குத் தலையாய காரணம் இந்திய அரசமைப்பு, கூட்டாட்சி என்று கூறப்பட்ட போதிலும், 'ஒன்றியம்' என்ற சொல்லே அரசமைப்புச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டு, அதன் தொடர்பாக 'கூட்டாட்சி' கோட்பாடுகளுக்கு முரணான பல வகையுரைகள் சேர்க்கப்பட்டுவிட்டன. ஒன்றியம் என்பது பெயரளவுக்காகி, ஒற்றையாட்சிப் போக்கு மிகுந்து விட்டதென்பதை யாரும் மறுக்க இயலாது. அதிகாரப் பிரிவில் மத்திய அரசின் பக்கம் தான் தராசுத்தட்டு தாழ்ந்து நிற்கிறது. உயர்ந்து நிற்கும் தராசுத் தட்டை அண்ணாந்து பார்த்துப் பெருமூச்சு விடும் நிலைதான் மாநிலங்களுக்கு !




''மாநில விவகாரங்களில் மைய அரசு தலையிடப் பெருமளவு வாய்ப்புக்கள் காண்கின்றன. இதன் மூலம் மாநிலங்களின் சுயாட்சி உரிமை பாதிக்கப்படுகின்றது.''

என்று இராஜமன்னார் குழுவினர் அறுதியிட்டுக் கூறியுள்ளனர்.

இப்போதுள்ள அமைப்பில் மாநிலங்களில் சட்ட மன்றங்கள் இருப்பதும், முதலமைச்சர், மற்றும் அமைச்சர்கள் இருப்பதும் சுயாட்சிதானே என வாதிடுவோர் உண்டு. தனக்குத் தேவையற்ற அதிகாரங்கள் பலவற்றை மத்திய அரசு மாநில அரசிடமிருந்து பறித்துக் கொண்டும்—மாநில அரசுகளுக்குத் தேவையான பல அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்காமலும் இருக்கின்ற நிலை சுயாட்சித் தத்துவத்தின் முழுமையைக் காட்டுவதாகாது. கால தாமதமின்றி மக்கள் தேவைகளை நிறைவு செய்திடவும், நிதிக் கூறுகளை விரிவாக்கி மாநிலங்களின் வளம் பெருக்கிடவும், அந்தந்த மாநில மக்களின் உணர்வுகளுக் கேற்பச் செயல்படவும், மத்திய அரசு எஜமானனாகவும், மாநில அரசுகள் ஏவல் கேட்போராகவும் மாறுகிற நிலையொழிந்து தோழமை உணர்வு வலுப் பெற்றிடவும், மாநிலங்களுக்கு முழு சுயாட்சி வேண்டுமென்று கருதுகிறோம். இந்தியாவின் பாதுகாப்பு, மத்திய அரசு வலிமையுடன் இருந்திட வேண்டுமென்பதில்தான் உள்ளதென்பதில் இரு கருத்துக்களுக்கு இடமே இல்லை.

விழுதுகள் வலிவடைவதால், ஆலின் அடிமரம் வலிவிழந்துவிடுவதில்லை. விழுதுகளும் சேர்ந்துதான் ஆல மரத்திற்குப் பெருமை—அழகு !

'' மாநிலத்தில் சுயாட்சி—மத்தியில் கூட்டாட்சி '' என்பது பிரிவினை வாதமல்ல; 'கூட்டாட்சி' என்பதற்குப் பதிலாக 'ஒன்றியம்' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருப்பதாகவும்; ஒன்றியம் என்ற சொல்லைப் பயன் படுத்தியிருந்தாலும் நமது அரசியல் அமைப்பு, கூட்டாட்சி முறையில்தான் அமைந்திருக்கிறதென்றும் அரசமைப்புச் சட்டமியற்றியவர்களில் தலைமையானவராகத் திகழ்ந்த டாக்டர் அம்பேத்கார் அவர்களே கூறியிருக்கிறார். அந்தக் கூட்டாட்சியும், சுயாட்சிகளும் சொல் அளவில்தான் இருக்கின்றன. அவை முழுமைபெற வேண்டும்—உண்மையான சுயாட்சியாக மலர்ந்து, இந்தியக் கூட்டாட்சி மணம்பரப்ப வேண்டுமென்றால், அப்படிச் சொல்கிறவர்கள் தோட்டத்துக்கே விரோதிகள் என்று கூறுவது பொருத்தமாகாது. 1947—ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 22—ஆம் நாளன்று அரசமைப்புச் சட்ட மன்றத்தின் முன் வைத்த பண்டித ஜவகர்லால் நேரு




அவர்களின் வரலாற்றுப் புகழ் மிக்க தீர்மானத்தில் ; "சுதந்தர இந்தியாவில் அமைந்திடும் மாநிலங்களும், பிற ஆட்சிப் பகுதிகளும் சுயாட்சி ( Autonomy ) உரிமை பெற்று, மாநிலங்கட்கும் மத்திய அரசுக்கும் எனக் குறிப்பிட்ட அதிகாரங்கள் நீங்கலான எஞ்சிய அதிகாரங்களுடன் ( Residuary Powers ) அமைந்து செயல்படும்" என்று கூறியிருக்கும் கருத்தினை உற்று நோக்கின் மாநில சுயாட்சி என்பது நாட்டு ஒற்றுமைக்கு விரோதமான கோரிக்கையல்ல என்பது தெளிவாகும்.

மாநில சுயாட்சி என்பது அதிகார உரிமைகளை மாநிலங்கள் பெறுவது என்பது மட்டுமல்ல ! தங்குதடையின்றி வளமிகு திட்டங்களை மாநிலங்களில் நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதி வாயில்களை, மத்திய அரசிடமிருந்து பெற்றிட வேண்டுமென்பதும் இன்றியமையாத ஒன்றாகும். எடுத்துக்காட்டாக, நிறுவனங்கள் மீது விதிக்கப்படும் வருமான வரி (Corporation Tax) மற்ற வருமான வரிகளைப்போல் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப் படவில்லை. பொது வருமான வரி மீது மத்திய அரசு விதித்த உபரி வரியும் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவில்லை. தேசியமயமாக்கப் பட்ட வங்கிகள் மீது மாநிலங்களுக்கு நிருவாகப் பொறுப்பில் பங்கு சிறிதளவு கூட இல்லை. இவைகள் ஒன்றிரண்டு உதாரணங்கள். இந்த நிலைமைகளில் மாநிலங்கள் முழுப்பயன் அடையத்தக்க மாறுதல்கள் தேவையென்பதை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

"உரிமைக்குக் குரல் கொடுப்போர் மாநில அரசிலும், உறவுக்குக் கைகொடுப்போர் மத்திய அரசிலும் இருந்திடும் இந்தக் காலத்திலேயே, தமிழகத்தின்

கப் படுகின்றனவென்றால், தயவுக்குத் தவம் கிடப்போர் மாநிலத்திலும்— தாராள சிந்தையற்றோர் மத்திய அரசிலும் இருந்திட்டால் மாநிலத்தின் வேண்டுகோள்கள் விழலுக்கிறைத்த நீராகும்", என்று நான் சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையின் போது எடுத்துக் கூறியதை இப்போதும் நினைவூட்டுகிறேன்.

ஆகவே, மத்தியிலும்— மாநிலங்களிலும் ஆளுகிறவர்களைப் பொறுத்து இல்லாமல் மத்திய மாநில உறவுகள் அரசமைப்புச் சட்ட அடிப்படையிலேயே நிலைபெறவும், வலுப்பெறவும் வேண்டும். அதற்கு அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட்டாக வேண்டும்.

இந்த வேண்டுகோளை மத்திய அரசு ஏற்றிடும் என்ற நம்பிக்கையுடன், இந்த அரசு தன்னுயர்வு தகவுறு திட்டங்களைத் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்குத் திட்டியுள்ளது.

[மார்ச் முதல் நாளன்று தமிழ்நாடு முதல்வர் கலைஞர் அவர்கள் சட்ட மன்றப் பேரவையில் அறிவித்த 1972–1973-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை.]

## வெண்பாப் போட்டி-31

ஈற்றடி :

கலையுயர்த்தும் திட்டமிது காண்

முடிவுத் தேதி 1-4-1972

பரிசு : ஓராண்டு "தமிழரசு" அன்பளிப்பு

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
'தமிழரசு' அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-2.

குறிப்பு : அஞ்சலட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.



# ரப்பர்த் தோட்டங்களிலே......!

தமிழ்நாட்டில் நீண்ட நாளாக ரப்பர் பயிரிடப்பட்டு, ரப்பர் தோட்டங்கள் அதிகமாக உள்ள மாவட்டம், குமரி மாவட்டம் ஒன்றே.

கடந்த ஆண்டில் மட்டும் குமரி மாவட்டத்தில் 247·60 ஹெக்டேர் நிலப்பரப்பில் ரப்பர் செடி நடப்பட்டது. மொத்தம் இந்த மாவட்டத்தில் 2,548·40 ஹெக்டேர் நிலப் பரப்பில் ரப்பர் பயிரிடப்பட்டுள்ளன. 1972–73-ஆம் ஆண்டில் மட்டும் ஏறத்தாழ 500 ஹெக்டேரில் ரப்பர் புதிதாகப் பயிரிடப்படும்.

புதிய ரப்பர்த் தோட்டங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பகுதிகளில் காடு வெட்டுதல், தளப்படுத்துதல் ஆகிய முன் வேலைகள் நடைபெறுகின்றன. இங்கு நடுவதற்கு வேண்டிய ரப்பர்ச் செடிகள் 1971-ஆம் ஆண்டிலிருந்து நாற்றங்காலில் வளர்க்கப்பட்டு வருகின்றன.

இதற்கு முன்னர் நடப்பட்டுள்ள ரப்பர்த் தோட்டங்களில் களையெடுத்தல், ரப்பர் மரங்களுக்குக் உரமிடுதல், சிறுதைகளுக்குக் கூடை வைத்து நிழல் கொடுத்தல் ஆகிய வேலைகள் நடைபெற்றன.

ரப்பர்த் தோட்டத் தொழிலாளர்களுக்கான வீடுகள் மற்றும் கண்காணிப்பாளர்கள், நடத்துநர்கள், களப் பணியாளருக்கான வீடுகள், சிற்றூர், மணலோடை, காளிதேசம், கீரிப்பாறை, பரளியாறு பகுதிகளில் கட்டப்பட்டு வருகின்றன.

1960-ஆம் ஆண்டு முதல் 1964-ஆம் ஆண்டு வரை உள்ள ரப்பர்த் தோட்டங்களிலிருந்து சுமார் 430·60 ஹெக்டேர் பரப்பில் ரப்பர் பால் சேகரிக்கப்படுகின்றது. சேகரிக்கப்பட்ட ரப்பர்ப் பால் கீரிப்பாறை கோட்டத் தொழிற்சாலையில் பதனிடப்பட்டுக் கச்சா ரப்பர் விரிப்புகளாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

1–4–1971 முதல் 31–1–1972 முடிய உள்ள இடைக்காலத்தில் விற்பனை செய்யப்பட்ட பலரகக் கச்சா ரப்பரின் எடை 87,250 கிலோ கிராம். இதன் மூலம் அரசுக்குக் கிடைத்த வருமானம் ரூ. 4,43,085.

1966-ஆம் ஆண்டு ரப்பர்த் தோட்டங்களிலிருந்து பால் சேகரிப்பதற்கான முன் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

குமரி மாவட்டத்தில் ரப்பர்த் தோட்டங்கள் நிறுவுவதோடு இலங்கையிலிருந்து வரும் தாயகம் குடி பெயர்ந்தோருக்குப் புகலிடம் அளிக்க வேண்டிய வேலை வாய்ப்பு உண்டாகும் நோக்கோடு சுமார் 800 ஹெக்டேர் பரப்பில் ரப்பர்த்தோட்டம் நிறுவும் திட்டமும் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் 1970–71-ஆம் ஆண்டுகளில் பயிரிடப்பட்ட 272·60 ஹெக்டேர் பரப்பும் மொத்தப் பரப்பான 2,548·60 ஹெக்டேரில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்படி 333 தாயகம் குடி பெயர்ந்தோர் குடும்பங்கட்குப் புகலிடம் அளிக்கப்படும். இது மத்திய அரசின் கடனுதவியுடன் செயலாக்கப்படும் திட்டமாகும். ஏறத்தாழ 125 இலட்சம் ரூபாய் இத்திட்டத்தின் கீழ் செலவிடப்படவிருக்கிறது. இதுவரை 62 இலங்கை அகதிகளுக்குப் பல தரப்பட்ட வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.




கன்னியாகுமரியில் மிகப் புகழ் வாய்ந்த பழ ஆராய்ச்சிப் பண்ணை ஒன்று உள்ளது.

முதன் முதலில் இது பழப் பண்ணையாகத் தொடங்கப்பட்டது. 1922-ஆம் ஆண்டில் திருவிதாங்கூர் மன்னரால் தொடங்கப்பட்ட இந்தப் பண்ணை, 1956-ஆம் ஆண்டில் குமரி மாவட்டப் பகுதிகள் தமிழகத்துடன் இணைந்த பொழுது இப்பண்ணையும் இணைந்தது.

1960-ஆம் ஆண்டில் இப் பழப் பண்ணை பழ ஆராய்ச்சி நிலையமாக மாற்றி அமைக்கப் பட்டது. தொடங்கப்பட்ட பொழுது இதன் பரப்பளவு 31·64 ஏக்கர்தான். ஆனால், 14·22 ஏக்கர் நிலம் 1964-ஆம் ஆண்டில் சேர்த்துக் கொள்ளப் பட்டது.

இந்தப் பழப் பண்ணை பழ ஆராய்ச்சி நிலையமாக மாற்றப் பட்டது ஏன் தெரியுமா ?

ஆண்டு முழுவதும் இந்தப் பழப் பண்ணையில் மாங்கனிகள் குலுங்கும்.

எல்லாப் பருவங்களிலும் இங்கே மாங்காய் கிடைக்கும். இங்குள்ள தட்பவெப்ப நிலை காரணமாகவே இப்படிக் காய்க்கின்றது என்று சொல்கிறார்கள். இந்தப் பழ ஆராய்ச்சிப் பண்ணையில் மாங்கனிகள் தவிர கொய்யா, திராட்சை, எலுமிச்சை மற்றும் பல்வகையான பழங்கள் பயிரிடப்பட்டுள்ளன.

1960-ஆம் ஆண்டில் இந்தப் பழப் பண்ணையில் 29 வகையான மாங்கனிகள் பயிர் செய்யப் பட்டன. ஆனால், இப்பொழுது ஏராளமான மா வகைகள் பயிராகின்றன.

இங்குப் பயிராகும் மாங்கனிகள் விவரம் வருமாறு :

நீலம், பங்களூரா, ருமானி, ஸ்பரி, தில்பஸந்த், அலிபஸந்த், சூரங்குடி, மல்கோவா, அதிமதுரம், சொர்ணரேகா, கோடூர், ரஸம், ரவுலி, சின்னக் கொத்துக்காய், சொர்ண ஜகாங்கீர், பாதிரி, ஓலூர், பாபக்காய் கலாபாணி, அல்பான்ஸே, கல்லுக்காய்ச்சி, சேலம், பெங்களூரா, காடன், கல்கண்டு, குதாதாத், கிருஷ்ல்வாபேட், சிறுமணி, அம்மிணி, கே. ஓ. 5/5, பங்கணப்பள்ளி, பீத்தர் பஸந்த், இமாயூதின், கே. ஓ. 9/7, கே. ஓ. 4/3, கன்னியா குமரி செலக்ஷன், பஞ்சசதுர கலசம், பேனட் அல்பன்ஸோ, செறுக்குரசம், கிரி பச்சரி, ஆலந்தூர் பெனேஷான், பஞ்சவர்ணம், மோகன்தாஸ், கே.ஓ. 2/16, கே. ஓ. 3/1, லாங்ரா, ஜெயிலடார், பட்டாளம், முண்டப்பா, கே.ஓ. 11, கே.ஓ. 8, ராஸ், பில்போ ரஜுமானு. இப்படி 60-க்கு மேற்பட்ட பழங்கள் இங்கே பயிரிடப்படுகின்றன.



புதிய

# MF காம்ப்ளெக்ஸ் 17-17-17

## அமோக விளைச்சலுக்கு அருமையான உரங்கள்

புதிய MF காம்ப்ளெக்ஸ் 17-17-17 நெற் பயிருக்கு மிகவும் உகந்தது. உயர் விளைச்சல் ரகமானாலும் சரி, மற்ற சாதாரண உள்ளூர் ரகமானாலும் சரி.

புதிய MF காம்ப்ளெக்ஸ் 17-17-17 ஒரே சீரான குருணை வடிவில் உள்ளது. அதில் உள்ள பயிருணவுகள் நீரில் கரைந்து, பயிர்களுக்கு உடனடியாக கிடைக்கின்றன.

புதிய MF காம்ப்ளெக்ஸ் 17-17-17 மற்ற பயிர்களான கரும்பு, பருத்தி, வாழை, சிறுதானியங்கள், மற்றும் மிளகாய் இவற்றிற்கும் சால உகந்தது.

MF காம்ப்ளெக்ஸ் உரங்களும் பூச்சிமருந்தும் கிடைக்கும் இடங்கள்:

- ஷாவாலஸ் & கம்பெனி லிமிடெட்
- E.I.D.-பாரி லிமிடெட் ஆகியோரின் உர வியாபாரிகள்
- கூட்டுறவுச் சங்கங்கள்

*மண் செழித்து, பொன் விளைய – MF காம்ப்ளெக்ஸ் 17-17-17*

மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட், மணலி, சென்னை - 68



MFL.6770

"முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" என்பதற்கோர் எடுத்துக்காட்டாக விளங்குபவர், 'ரெவரெண்ட் பாதர் டி. ஜேம்ஸ்'. "முயற்சி திருவினை ஆக்கும்" என்பதற்கோர் சான்ருக இலங்குவது 'இந்திய-பெல்ஜிய மீனளத் திட்டம்.'

ஐக்கிய நாடுகள் சபையின் துணை நிறுவனமான உணவு,

## நீலப் புரட்சிக்கு வித்திட

## முட்டத்தில் ஒரு திட்டம்

வேளாண்மை நிறுவனம் (F.A.O.), கட்டு மரங்களின் மேலே இயந்திரங்களைப் பொருத்தி, கட்டு மரங்களைக் கொண்டு மீன் பிடிக்கும் தொழிலை இயந்திர மயமாக்கும் திட்டத்தை 1964-ஆம் ஆண்டில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் செயல் படுத்தியது. ஆனல், அந்தத் திட்டம் தோல்வியுற்றது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சமுதாய மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் கோட்டார் சமுதாயப் பணிக்கழகம் ( Kettar Social Society ) கட்டுமரங்களின் மேல் இயந்திரத்தைப் பொருத்தும் திட்டத்தைப் புதுப்பிக்க முயற்சி செய்தது. தோல்வி கண்டு துவண்டு விடாத ரெவரண்ட் பாதர் டி. ஜேம்ஸ் அவர்கள் அக்கழகத்தின் நிருவாக இயக்குநர். அவர் டெல்லியிலுள்ள கத்தோலிக்க அறக்கட்டளை நிறுவனம், ஆஸ்டிரியாவிலுள்ள காரிடாஸ் ( Caritas of Austria ), மிசெரீர் (Miserere), ஆக்ஸ்பாம் (Oxfam) முதலிய அறக்கட்டளை நிறுவனங்களின் உதவியை நாடி, இத்திட்டத்திற்குரிய கட்டடம் கட்டுவதற்கும் கருவிகள் வாங்குவதற்கும் நிதி உதவி பெற்ருர். அதனல் ஏற்பட்டதே இந்திய-பெல்ஜிய மீனளத் திட்டம். தென் இந்தியாவில் கட்டு மரங்களின் மேலே அமைக்கும் இயந்திரங்களை அறிமுகப்படுத்தியது இத்திட்டமே என்பது குறிப்பிடத்தக்கதாகும். இத் திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள முட்டம் கிராமத்தில் நடைபெற்று வருகிறது.

இந்திய-பெல்ஜிய மீனளத் திட்டத்தின்கீழ், திட்டமிடுதல், செயல்படுத்துதல் ஆகியவை ஒருமைப் படுத்தும் குழு ( Co-ordination Committee ) ஒன்றின் நேரடிப் பார்வையில் நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு மீனளத்துறை இயக்குநர் அவர்கள் ஒருமைப்படுத்தும் குழுவின் தலைவராக விளங்குகிருர். அக் குழுவில், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர், கோட்டார் சமுதாயப் பணிக் கழகத்தின் நிருவாக இயக்குநர் ரெவரெண்ட் பாதர் டி. ஜேம்ஸ், இத்திட்டத்தின் மேலா



# கட்டுமரத்தில் எஞ்சின்

## எங்கும் காணக் கிடைக்கும்!

ளர் கேப்டன் எஸ். ஜோவாகிம் பெர்ஞண்டோ, முட்டம் கிராமத்திலுள்ள ஒரு மீனவரும், கன்னியாகுமரி மாவட்ட மீனளக் - கூட்டுறவு ஒன்றியத்தின் தலைவருமான வி. லீன் அலெக்சாண்டர் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக, முட்டம் கிராமத்தில் 100 கட்டு மரங்களின் மேல் இயந்திரங்களைப் பொருத்தி மீன் பிடிக்கும் சோதனை நடத்திப் பார்க்கவும், அதன் பயன்களை விளக்கிடவும் திட்டமிடப்பட்டது. ரெவரெண்ட் பாதர் ஜேம்ஸ் அவர்கள் தன்னுடைய தாய் நாடான பெல்ஜியம் நாட்டின் உதவியை வேண்டினர். அந்த நாட்டினரின் ஒத்துழைப்பையும், உதவியையும் பெறுவதில் அவர் வெற்றி பெற்ருர். பெல்ஜியம் காரிட்டாஸ் (Belgium Caritas) நிறுவனம் முதற் கட்டப் பணிக்குரிய துவக்க நிதியை அளித்ததுடன், 100 இயந்திரங்களையும், (Cut-Board Engines) தேவையான உதிரிப் பொருள்களையும் (Spare Parts) இலவசமாகவே கொடுத்து உதவியது. ஆனல், இறமாக வந்த அந்த இயந்திரங்களுக்குச் சுங்கவரி விதிக்கப்பட்டது. கோட்டார் சமுதாயப் பணிக்கழகம், முதல் 50 இயந்திரங்களுக்குரிய சுங்க வரியைக் கட்டியது. பின்பு அவ்வியந்திரங்களை நன்கொடையாக அளித்த நிறுவனங்களே, சுங்க வரித் தொகையையும் கொடுத்து விட்டன.

இந்தியப் பசிப்பிணி விடுதலை இயக்கம் (Indian Freedom From Hunger Compaign ) இரண்டாம் தடவையாக வரப்பெற்ற 50 இயந்திரங்களுக்குரிய சுங்க வரியைச் செலுத்துவதற்குக் கடன் கொடுத்து உதவ முன் வந்தது. அக்கடன் தொகையை மீனவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் திருப்பிச் செலுத்தி வருகின்றனர்.

கட்டுமரங்களை இயந்திர மயமாக்குவதன் மூலம், மீன் பிடிப்பை உயர்த்துவதே இத்திட்டத்தில் முக்கிய நோக்கமாகும். பெல்ஜியத்திலிருந்து பெறப்பட்ட 100 இயந்திரங்களில், 92 இயந்திரங்கள் மீனவர்களுக்கு வழங்கப்பட்டன. இரண்டு இயந்திரங்கள் இத்திட்டத்தின் கீழ் மீட்பு வேலைகளுக்காகவும், கட்டு மரங்களில் அமைக்கப்பட்டுள்ள இயந்திரங்கள் பழுதுபட்டால் அவைகளைக் கடலிலேயே பழுது பார்த்துச் செப்பனிடும் பணியை மேற்கொள்வதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. 6 இயந்திரங்கள் பழுது பார்க்க முடியாத அளவுக்குப் பாழடைந்து விட்டன.

கட்டு மரங்களை இயந்திர மயமாக்கியதனுல் முட்டம்




கிராம மீனவர் வாழ்வின் பல்வேறு கூறுகளில் ஏற்பட்டுள்ள பயன்களை அறிய 1969 ஜுலை முதல் 1970 டிசம்பர் வரை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன் முடிவுகள் நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளன. இயந்திர மயமாக்கப்பட்ட கட்டு மரங்களைப் பயன்படுத்திய மீனவர்கள் குறிப்பிடத் தகுந்த அளவுக்கு நன்மை பெற்றுள்ளனர் என்பது ஆய்வின் மூலம் தெரிய வருகிறது.

இயந்திர மயமாக்கப்பட்ட கட்டு மரங்கள் காற்றையும், நீரோட்டத்தையும் எதிர்த்துச் செல்லக் கூடியவை. அவை காற்றை நம்பியிருக்கத் தேவையில்லை. இயந்திரம் பொருத்தப்பட்ட மரங்களில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களின் பயண நேரம் குறைந்துவிட்டது. அவைகளில் செல்லும்போது, துடுப்பைப் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லையாதலின், மீனவர்கள் களைப்படையாமல் அதிக அளவு மீன்களைப் பிடிக்க முடிகிறது. ஐயத்திற் கிடமின்றி அதிக அளவு மீன்களைப் பிடிக்க, இயந்திர மயமாக்கப்பட்ட கட்டு மரங்கள் உதவி வருவதால், இத்திட்டத்தின் இலட்சியம் வெற்றிகரமாக நிறைவேறி விட்டது எனலாம்.

இந்திய-பெல்ஜிய மீனளத் திட்டத்தின் அடுத்த நோக்கமாகப் பல்வேறு உருவ அமைப்புக் கொண்ட கட்டு மரங்களில், இயந்திரத்தை அமைத்துப் பயன்படுத்திப் பார்க்கப்பட்டது. உணவு வேளாண்மை நிறுவனக் கப்பல் நிர்மாணகர்த்தரால் கொடுக்கப்பட்ட வடிவ அமைப்புப்படி, அலைகளைத் தாண்டிச் செல்லும் படகு ஒன்று ஒட்டுப் பலகையினுல் (Plywood) கொச்சியில் அமைக்கப்பட்டது. அப்படகில் அலைகளைத் தாண்டிச் செல்வதற்குரிய சாதனம் பொருத்தப்பட்டுள்ளதனுல், பருவ மழைக் காலங்களில் தோன்றும் பேரலைகளைத் தாண்டிச் செல்வதற்கு ஏற்றதாக இருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது

கண்ணுடி இழைகளினுல் செய்யப்பட்டுள்ள படகு ஒன்றும் வாங்கப்பட்டு, அதில் இயந்திரம் பொருத்திக் கடலில் செலுத்தப்பட்டது. அப்படகு 2 பேர்களுடன் விரைந்து செல்கிறது. கட்டு மரங்களில் பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்களுக்கு ஆகும் எரிபொருள்களை விடக் குறைவாகவே கண்ணுடி இழைப் படகுகளுக்கு ஆகிறது.

இயந்திரங்களை அவ்வப்பொழுது, தூய்மைப்படுத்துவதற்காகக் கீழ் முட்டத்தில் ஒன்றும், மேல் முட்டத்தில் ஒன்றுமாக, 2 பணிமனைகள் இத்திட்டத்தின் கீழ் செயல்படுகின்றன. மீன்பிடிக்கச் சென்று திரும்பி வந்தவுடன் ஒவ்வொரு

முறையும் மீனவர்கள் இயந்திரத்தைப் பணி மனைக்குக் கொண்டு வரவேண்டும். கடல் நீர் பட்டதனால் ஏற்பட்டுள்ள உப்புகளை அகற்றப் பணிமனைகளில் நல்ல தண்ணீர் கொண்டு, இயந்திரங்கள் தூய்மைப்படுத்தப் படுகின்றன. அதன்பின் இயந்திரங்களுக்கு எண்ணெய், கிரீஸ் முதலியன இடப்பட்டுப் பணிமனையில் வைக்கப்படுகின்றன. இயந்திரத்துக்கு உரியவர் மீன் பிடிக்கச் செல்லும்போது, இயந்திரத்தை எடுத்துச் செல்லலாம். இயந்திரம் பழுதடைந்தபொழுது மீனவர்கள் திட்டக் கிடங்கிலிருந்து தேவையான உதிரிப் பொருள்களைப் பெற்று, பணிமனையில் இயந்திரத்தைப் பழுது பார்த்துக் கொள்ளலாம்.

மீன் பிடிப்பவர்களுக்கு திருந்திய 'கியர்' (Improved gear) கொடுக்கப்படுகிறது. நைலான் நூல் இலாப நோக்கமில்லா அடிப்படையில் விற்கப் படுகிறது. சென்ற ஆண்டு மட்டும் சுமார் ஒரு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நைலான் நூல் வாங்கப்பட்டு, விற்பனை செய்யப் பட்டுள்ளது. மீன் பிடிக்கும் வலை பின்னும் நிலையங்களில் நைலான் வலைகள் பின்னப்படுகின்றன. அந்நிலையங்கள் பன்னூறு மீனவப் பெண்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குகின்றன. முட்டம், கடையப்பட்டினம், கன்னியாகுமரி, மேல மணக்குடி, குளச்சல், அலாஞ்ஜி, மிடாலம், ஏனயம், தூத்தூர் ஆகிய இடங்களில், வலைபின்னும் நிலையங்கள் உள்ளன. இந்த நிலையங்கள் மீனவப் பெண்களின் பண்பாட்டுக் கூடமாகவும், அவர்களை மேம்படுத்தும் நிலையமாகவும் இயங்கி வருகின்றன.

இத்திட்டம் மீனவ இளைஞர்களுக்கு, இயந்திரத்தை எண்ணெய் விட்டுத் தூய்மைப் படுத்தல், தேவையான பொருள்களைச் செய்தல் போன்றவைகளில் பயிற்சி அளிக்கிறது. இதுவரை சுமார் 100 பேர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

இந்தியப் பசிப்பிணி விடுநலை இயக்கத்தின் கூடுதல் செயலாளரான திரு ஜே. சி. மத்தூர், ஐ.சி.எஸ். அவர்கள் கூறியபடி, சில மாதங்கள்வரை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மீனவர்களின் கூட்டம் நடத்தப் பெற்றது. அந்தக் கூட்டத்தில் கடற்பயணம் மேற்கொள்ளுதல், மீன் பிடிக்கும் நவீன முறைகள் ஆகியவை பற்றிய வகுப்பு நடத்தப்பெற்றதுடன், ஒழுக்கத்தின் உயர்வு பற்றியும் போதிக்கப்பட்டன.

நைலான் மூலம் 'கியர்' மேம்படுத்தப்பட்டதனால், அதிக அளவு மீன்கள் கிடைத்து வருகின்றன. கட்டுமரத்தை இயந்திரத்தின் மூலம் இயக்குவதால், வீணாக விரயமான காலம் குறைந்து விட்டது.

அதிக இடவசதியுள்ளதும், பாதுகாப்பு மிகுந்ததுமான சிறு படகுகளைப் பயன்படுத்தி, கட்டுமரங்களை வழக்கொழியச் செய்வதே அடுத்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையாகும். டீசல் இயந்திரங்கள் (Vala Penta) பொருத்தப்பட்ட 4 பிரான்சு நாட்டு டோரி (Dory) படகுகள் வாங்கப் பட்டுப் பரிசோதனைகள் செய்யப் பட்டு வருகின்றன. 'டோரி' படகுக்கு எரிபொருள் மிகவும் குறைவாகவே தேவைப்படுகிறது. மீன் பிடிப்பதற்கு 'டோரி' படகு மிகவும் ஏற்றதாக இருக்கிறது. மீன்பிடித்த பிறகு அப்படகில் இணைக்கப் பட்டுள்ள சாதனத்தைப் பயன் படுத்தி 'புரபெல்லரை' படகுக்கு உள்ளே உயர்த்திவிட்டுப் படகுகளை நாள்தோறும் கடற்கரைக்குக் கொண்டு வந்து விடலாம். மீன்பிடிக்கச் செல்லும்போது படகில் 'புரபெல்லரைத்' தாழ்த்தி விட்டு விட வேண்டும்.

கட்டுமரங்களுடன் ஒப்பிடும் போது, 'டோரி' படகுகளின் மூலம் அதிக மீன்கள் கிடைப்பதால், மீனவர்களிடையே 'டோரி' படகுகள் புகழ் பெற்று வருவதுடன், மிகுந்த தேவையும் பெற்றுள்ளன. அந்த 4 படகுகளில், 3 படகுகள் வாடகைக்கு விடும் திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மீனவர்கள் அவைகளுக்குரிய விலையை 7 ஆண்டுகளில் சுலபத் தவணைகளில் செலுத்த வேண்டும். நான்காவது படகு இந்தியாவின் மேலைக் கடலில் சோதனை மீன்பிடிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. காலநிலை சாதகமாக இல்லாத நிலையிலும் அப்படகின் மூலம் 3 மாத காலத்திற்குள் 2,403 ரூபாய் நிகர இலாபம் கிடைத்துள்ளது.

பிரான்சு நாட்டு 'டோரி' படகுகளைப் போல் நம்நாட்டு இயந்திரங்கள் இணைக்கப் பெற்ற 50 படகுகளைக் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. ரஸ்டன் இயந்திரம் பொருத்தப் பெற்ற ஒரு படகு தூத்துக்குடியில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அண்மையில் இரண்டு



# மனோன்மணீயத்திலே நாஞ்சில் நாடு

வஞ்சிநா டதனில் நன்செய் நாடெனச்
செந்தமிழ் வழங்கும் தேய
அந்தமில் பெருவளம் அறிபார் யாரே
மருதமும் நெய்தலும் மயங்கியெங் கெங்கும்
புரையறு செல்வம் நிலைபெற வளரும்
வேயென சொரிந்த சாய்குலைச் சாலியில்
உப்பார் பஃறி ஒருநிரை பிணிப்பர்
இப்பெருந் தேயத்து எங்கும் இராப்பகல்
தப்பினும் மாரி தன்கடன் தவறு"

கண்ணுடி நூலிழைப் படகுகள் வாங்கப்பட்டுள்ளன.

கட்டு மரங்களையும், சிறு படகுகளையும் இயந்திரமய மாக்கிய பின்பு, ஆழ்கடல் மீன் பிடிப்புக்கு வழிவகை காணுவதே அடுத்த கட்டப் பணியாகும். 'முட்டத்திலிருந்து தெற்கே 35 மைலில் 'வாட்ஜ் பாங்க்' (Wadge Bank) எனப்படும் மீன் பிடிப்பதற்குச் சிறந்த இடம் இருக்கிறது. அப்பகுதியைத் தற்பொழுது ஜப்பானிய மற்றும் இலங்கை இழுவைப் படகுகள் (Trambers) பயன்படுத்திக் கொள்கின்றன. திரு ஜே. சி. மத்தூர், ஐ.சி.எஸ். அவர்கள் கூறியதற்கிணங்க, தமிழ்நாடு மீன்துறை இயக்குநர் அவர்கள் 43 அடி நீளமுள்ள இழுவைப் படகை 'வாட்ஜ் பேங்க்' என்னும் பகுதியில் சோதனை மீன்பிடிப்பு செய்வதற்காக, சென்ற ஆண்டு ஏப்ரல் மாதம் வழங்கினர். பெரிய படகின் இயந்திரம் தொல்லை கொடுத்தால், குளச்சலில் கட்டு மரங்களுடன் இணைத்துச் செல்வதற்காகவும் மற்றுமொரு 32 அடி நீள முள்ள அரசாங்க படகு கொடுக்கப்பட்டது. 4 கட்டு மரங்கள், ஒரு 'கண்ணுடி இழைப்படகு, ஒரு டோரி' படகு ஆகியவைகள் 32 அடி படகுடன் இணைக்கப்பட்டு வாட்ஜ் பேங்க்' பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டன. இழுவைப் படகிலும் இயந்திரத் தொல்லை ஏற்பட்டது. அதில் கியர் இல்லாததாலும், குடிப்பதற்குத் தேவையான தண்ணீர் தேக்கி வைப்பதற்குரிய தொட்டி இல்லாததாலும், ஒரு நாளைக்கு மேல் அங்கு மீன் பிடிக்க இயலவில்லை. 'வாட்ஜ் பேங்க்' பகுதியின் முழுப்பயனையும் அடைய இயலவில்லை. இழுவைப்படகைப் பயன்படுத்த அங்குப் பெரும் இடம் இருப்பினும், அதை அங்குப் பயன்படுத்த முடியவில்லை.

தற்பொழுது காலநிலை வாய்ப்பாக அமையவில்லை யாதலின் மீனவர்கள் பெரும் தொல்லையடைந்து வருகின்றனர். எனவே, இந்த ஆண்டில் 'வாட்ஜ் பேங்க்' பகுதியில் மற்ருெரு முயற்சி மேற்கொள்ள எல்லா வசதிகளும் அடங்கிய இழுவைப்படகு ஒன்று அளிக்குமாறு தமிழ்நாடு மீன்துறை இயக்குநர் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் எழுதப்பட்டுள்ளது.

இத்திட்டம் ஒரு இழுவைப் படகைக் கட்டுவதற்கும் திட்டமிட்டுள்ளது. அதற்காகும் செலவில் 50 சத அளவைத் தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொள்ளும். திட்டமிடப்பட்டுள்ள பெரோசி மெண்ட் இழுவைப் படகைச் சென்னையிலுள்ள அரசினர் படகு கட்டும் நிலையத்தில் கட்டப்படவிருக்கிறது. அதில் அமைப்பதற்குரிய இயந்திரத்தை இந்திய-பெல்ஜிய திட்டம் வழங்கும். அரசுடன் இதற்கான ஒப்பந்தம் ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கிறது. அத்தகைய இழுவைப் படகின் உதவியுடன் கட்டுமரங்களை இணைத்துப் பிழைப்புக்கு வழியற்ற காலத்தில் 'வாட்ஜ்பேங்க்' பகுதியில் மீன் பிடிக்க இயலும்.

முட்டம் கிராமத்தில் நடத்தப்பெற்ற சோதனையின் பயனைக் கடலோரக் கிராமங்களில் உள்ள மீனவர்கள் புத்துணர்வு பெற்றுள்ளனர். அவர்கள் தங்கள் கட்டு மரங்களில், இயந்திரங்களைப் பொருத்துவதற்கு மிகவும் ஆர்வத்துடன் உள்ளனர். எனவே, இயந்திரங்கள் வேண்டி ஏராளமான மனுக்கள் மீனவர்களிடமிருந்து வரப்பெற்றுள்ளன. மீனவர்களின் வாழ்வை மேம்படுத்துவதில் பேரார்வம் காட்டி வரும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஏ. பி. முத்துசாமி, ஐ.ஏ.எஸ். அவர்கள் பல கூட்டுறவுத் திட்டங்களையும், வங்கிகளையும் ஏற்பவத்தி அவைகளின் மூலம் இயந்திரங்களை வாங்கி, மீனவர்களுக்கு வழங்க ஆவன செய்துள்ளார். அவ்வியந்திரங்களின் விலையைச் சுலபத் தவணைகளில் மீனவர்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

இத் திட்டம் பெல்ஜியம், இந்தியா ஆகிய இரு நாடுகளின் பசிப்பிணி விடுதலை இயக்கத்தின் உதவியுடனும், இந்திய அரசு, தமிழ்நாடு அரசு, ஆகியவைகளின் உதவியுடன் நடைபெறுகிறது. கோட்டார் பிஷப்பின் கீழ் பணியாற்றும் கோட்டார் சமூகப் பணிக் கழக நிருவாக இயக்குநர் உதவியுடன், இத் திட்டத்தின் மேலாளர் மீனவர்களின் நீண்ட நாள் தேவைகளை நிறைவேற்ற அவரால் ஆன உதவிகளைச் செய்கிருர். எனவே, கன்னியாகுமரி மீனவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் காத்திருக்கிறது என்று நம்பப்படுகிறது.

கோட்டார் சமூகப் பணிக் கழகக் கட்டுப்பாட்டின் கீழ் பல முனைப் படிப்புப் பிரிவுகள் கொண்ட ஒரு உயர்நிலைப் பள்ளியை இத் திட்டம் துவக்கவிருக்கிறது. மாணவர்கள் விருப்பப் பாடத்தின் கீழ் அப்படிப்புகளைப் பயிலலாம். ஒன்பதாம் வகுப்பிலிருந்து பதினொன்றும் வகுப்பு வரை, பாடத்திட்டத்தில் கண்ட படிப்புகளுடன்கூட, கப்பலோட்டுதல், மாலுமிகள் பற்றிய பயிற்சியும், மீன் பிடிக்கும் தொழில் நுட்பப் படிப்பும், வலை பின்னுதல், படகு மற்றும் வலைகளுடன் மீன் பிடித்தல், பொறியியல் ஆகியவற்றில் பயிற்சியும் மாணவர்களுக்கு அளிக்கப்படுகின்றன. மீன் பிடிக்கும் தொழில் வளர்ச்சியுறவும், மீன் பிடிக்கும் அளவு பெருகவும் இவை வழிவகுக்கும்.

சுருக்கமாகச் சொல்லவேண்டுமாஞல், இந்திய-பெல்ஜிய மீனளத் திட்டம் தமிழ் நாட்டில் நீலப் புரட்சி (Blue Revolution) தோன்றுவதற்கு வித்திட்டுள்ளது என்பது உண்மை.

# குமரி மாவட்டத்தில் பிற்பட்ட மக்களுக்கு அரசு அளிக்கும் சலுகைகள்!





குமரி மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏராளமான சலுகைகளை அரசு அளித்து வருகிறது.

குமரி மாவட்டத்தில் காணிகர்கள் என்ற மலைவாழ் மக்களும் வாழ்கின்றனர். அவர்களுக்கும் அரசு ஏராளமான சலுகைகளை அளித்து வருகிறது. கடந்த ஓராண்டில் அளித்துள்ள சலுகைகள் கீழே தரப்பட்டுள்ளன.

உயர்நிலைப் பள்ளிகளில் பயின்று வரும் அரிசன மாணவ, மாணவிகளுக்கு 1971-72-ல் உதவிச் சம்பளம் வழங்க ரூ. 3,91,000 ஒதுக்கப்பட்டதில் 31—1—1972 வரை ரூ.3,58,350 செலவிடப்பட்டுள்ளது. மொத்தம் 29,079 மனுக்கள் வரப் பெற்றதில் முழுவதும் தீர்வு செய்யப்பட்டு உதவிச் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

கல்லூரியில் பயின்று வரும் அரிசன மாண்வ, மாணவிகளுக்கு உதவிச் சம்பளம் வழங்க நடப்பு ஆண்டில் ரூ.1,82,000 ஒதுக்கீடு செய்யப்பட்டதில் 31—1—1972 வரையில் ரூ. 72,887-25 செலவிடப் பட்டுள்ளது கல்லூரிப் படிப்புக்கான உதவிச் சம்பளம் கோரி மொத்தம் வரப்பெற்ற 677 மனுக்களில் முழுவதும் தீர்வு செய்யப்பட்டு உபகாரச் சம்பளம் வழங்கப் பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் கல்லூரியில் பயிலும் அரிசன மற்றும் மலை ஜாதி மாணவ, மாணவிகளுக்கு உதவிச் சம்பளம் வழங்க இந்திய அரசினல் அனுமதிக்கப்பட்ட தொகை மொத்தம் ரூ. 2,64,500 ஒதுக்கப் பட்டுள்ளது. இந்திய அரசு உதவிப் பணம் கோரி மொத்தம் வரப்பெற்ற 483 மனுக்களையும் தீர்வு செய்யப் பட்டு ரூ. 94,537·50 வழங்கப் பட்டுள்ளது.

பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த உயர்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு உதவிச் சம்பளம் வழங்க நடப்பு ஆண்டில் மொத்தம் ரூ. 1,43,900 ஒதுக்கப் பட்டுள்ளது. 6,768 மனுக்களுக்கு ரூ. 1,42,890 வழங்கப் பட்டது.

கல்லூரியில் பயின்று வரும் பின் தங்கிய மாணவ, மாணவிகளுக்கு உதவிச் சம்பளம் வழங்க நடப்பு ஆண்டில் மொத்தம் ரூ. 5,46,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் 4,103 மாணவ, மாணவிகளுக்கு மொத்தம் ரூ. 4,62,075 வழங்கப்பட்டுள்ளது.

குற்றப் பரம்பரையைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கு உதவிச் சம்பளம் வழங்க மொத்தம் ரூ. 25,200 ஒதுக்கப் பட்டதில் ரூ. 18,054 செலவு செய்யப்பட்டது. மொத்தம் 66 மனுக்கள் வரப் பெற்று முழுவதும் தீர்வு செய்யப்பட்டு உதவிச் சம்பளம் வழங்கப் பட்டுவிட்டது.

குமரி மாவட்டத்தில் அரிசன மாணவ, மாணவியரின் நலனுக்காகக் கீழ்க்காணும் விடுதிகள் அரிசன நலத் துறையின் பொறுப்பில் நடத்தப்படுகின்றன.

1. மாணவர் விடுதி, நாகர்கோவில்.
2. மாணவர் விடுதி, பூதப்பாண்டி.
3. மாணவர் விடுதி, தக்கலை.
4. மாணவர் விடுதி, குழித்துறை.
5. மாணவியர் விடுதி, மார்த்தாண்டம்.
6. மாணவியர் விடுதி, கன்னியாகுமரி.
7. மாணவியர் விடுதி நாகர்கோவில்.

8. தொழிற் பயிற்சி மாணவர் விடுதி, நாகர்கோவில்.

9. கல்லூரி மாணவர் விடுதி, நாகர்கோவில்.

தவிர மலைஜாதியினர் நலனுக்காகப் பத்துக்காணியில் மாணவியர் இல்லம் ஒன்று 1-7-1971-ல் துவக்கப்பட்டது.

இந்த விடுதிகள் பராமரிப்புச் செலவுக்காக ரூபாய் 1,29,000 ஒதுக்கப்பட்டதில் இன்றுவரை ரூ.1,26,450 செலவு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியாண்டுக்கு மேலும் ரூபாய் 34,200 அதிகப்படியாகக் கேட்கப்பட்டுள்ளது.

### கடந்த ஆண்டில் புதிய விடுதி

இவைகள் மட்டுமல்ல, கல்லூரியில் படிக்கும் பிற்பட்டோர் மாணவியர் விடுதி ஒன்று 27—10—1971 அன்று நாகர்கோவிலில் தொடங்கப்பட்டுள்ளது. இதற்கான செலவைப் பிற்பட்டோர் நலத்துறை ஏற்றுள்ளது.

### பள்ளிக்கூடங்கள்

மலைஜாதியினர் குழந்தைகள் படிப்பு வசதிக்காகப் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி என்ற இடங்களில் இரண்டு தங்கிப் பயிலும் பள்ளிகளும் பத்துக்காணியில் ஒரு தொடக்கப் பள்ளியும் செயல்பட்டு வருகின்றன. இவைகள் பராமரிப்புக்காக ரூ. 35,950 ஒதுக்கப்பட்டு, ரூ. 48,800 செலவிடப்பட்டுள்ளது. மேலும் ரூபாய் 14,400 அதிகமாகக் கோரப்பட்டுள்ளது.

கல்வியறிவில்லாத அரிசனங்களுக்கு எழுத்தறிவூட்ட ஒன்பது இரவுப் பள்ளிகளும் 23 நூல் நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. இதற்கென இந்த நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு ரூபாய் 7,000. இன்று வரை ரூபாய் 5,000 செலவிடப்பட்டுள்ளது.

கற்காடு, தாழக்குடி ஆகிய இடங்களில் சமுதாய நல விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இதற்கு ரூபாய் 13,879 செலவிடப்பட்டுள்ளது. தீபாவளிக்கும், பொங்கலுக்கும் இங்குள்ள குழந்தைகளுக்குத் துணிகள் வழங்கப்படுகிறது. இந்நிதியாண்டுக்கு மேலும் ரூபாய் 4,800 அதிகமாகக் கேட்கப்பட்டுள்ளது.

### தொழிற்பயிற்சி நிலையங்கள்

குமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறையில் ஒரு தையல் நிலையமும், ஒரு நெசவுப் பயிற்சி நிலையமும், மலைவாழ் மக்கள் நன்மைக்காக அரிசன நலத் துறையின் பொறுப்பில் நடத்தப்பட்டு வருகின்றன. இதற்காக ரூபாய் 10,450 செலவிடப்பட்டுள்ளது. மேலும் ரூபாய் 3,400 அதிகமாகக் கேட்கப்பட்டுள்ளது. பின் தங்கிய வகுப்பனரின் நலனுக்காகப் பாகோட்டில் ஒரு தும்புப் பயிற்சி நிலையமும், ஒரு பிரம்புப் பயிற்சி நிலையமும், பிற்பட்டோர் நலத்துறை பொறுப்பில் இயங்கி வருகின்றன. இதற்காக ரூபாய் 25,150 செலவிடப்பட்டுள்ளது.

தொழிற் கருவிகள் வாங்க இந்த நிதியாண்டில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்காக ரூபாய் 8,000-ம், பின் தங்கிய வகுப்பினருக்கு ரூபாய் 15,190-ம், மலைஜாதியினருக்கு ரூபாய் 5,100-ம் ஒதுக்கப் பட்டுள்ளது. தகுதியோர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு



கீழ்க் குறிப்பிடும் கருவிகள் விரைவில் வழங்கப்பட இருக்கின்றன.

தையல் இயந்திரம்—24.

சவரத் தொழிற் கருவி—163.

சலவைத் தொழிற் கருவி—62.

தோல் தைக்கும் கருவி—1.

தச்சுத் தொழிற் கருவி—1.

அரிசன விவசாயிகளுக்கு இலவசமாக உழவு மாடுகள் வழங்க இந்நிதியாண்டில் ரூ. 6,000-ம், மலைவாழ் பகுதியைச் சேர்ந்த விவசாயிகளுக்கு ரூ. 8,400-ம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் 18 மலைஜாதியினருக்கும், 13 அரிசனங்களைச் சேர்ந்தவர்களுக்கும் உழவுமாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

விவசாயத்திற்குக் கிணறு வெட்ட மானியம் கேட்டு வரப்பெற்ற மனுக்களுக்கு ரூபாய் 2,000 அளிக்கப் பட்டுள்ளது.

இந்த நிதியாண்டில் அரிசனங்கள் நலனுக்காகக் குடிதண்ணீர் கிணறுகள் வெட்ட ரூ. 57,000-ம், மலைவாழ் மக்கள் நலனுக்காக ரூ. 3,000-ம் ஒதுக்கப் பட்டுள்ளது. 26 அரிசனக் குடியிருப்புகளில் கிணறுகள்வெட்டும் வேலை நடந்து வருகின்றன. 31 — 1 — 1972-ல் ரூ. 31,649 செலவு செய்யப் பட்டுள்ளது. மலைவாழ் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் பத்துக் காணியில் ரூ, 3,000 மதிப்பீடு உள்ள தொகையில் ஒரு குடிதண்ணீர்க் கிணறு தோண்டப்படுகிறது.

இந்த நிதியாண்டில் வேலைக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 32,000-ல், இதுவரை ரூ. 26,700 செலவிடப்பட்டுள்ளது. இத் தலைப்பின் கீழ் முட்டைக்காடு குடியிருப்புக்கு ஒரு சாலையும், நெட்டாங்கோடு, பத்தரை முதலிய குடியிருப்புகளில் உள்ள சாலைகளில் பழுது பார்த்தல் முதலிய வேலைகள் செய்து முடிக்கப் பட்டன. தவிர சாலை அமைத்தல் தடுப்புச் சுவர் கட்டுதல், வடிகால் கட்டுதல், பாலம் கட்டுதல் ஆகிய 9 வேலைகள் நடைபெற்று வருகின்றன.

## மண்டபங்கள்

செண்பகராமன் மண்டபம், வீரபாண்டியன் மணிமண்டபம் உதய மார்த்தாண்ட மண்டபம், இடபமண்டபம்-இம்மண்டபங்கள் எங்கே உள்ளன? சுசிந்திரம் ஆலயத்தில்தான்.

## கம்பன் காவியம்

வால்மீகி இராமாயணத்தில் அசுவமேத யாகமும், சீதையை இராவணன் கரங்களால் தூக்கிச் செல்வதும் குறிக்கப் படுகின்றன அல்லவா? ஆனால், சுசிந்திரம் ஆலயத்தேயுள்ள சிற்பங்களில் இராமாயணக் கதை காட்டப்படுகிறது; அதில் அசுவமேத யாகத்தைக் காட்டும் சிற்பங்கள் இல்லை. சீதையை இராவணன் தேரில் வைத்துச் செல்லும் சிற்பமே காணப் படுகிறது; இது 'மண்ணொடும் அகழ்ந்து சென்றான்' என்ற கம்பன் தமிழ்ப் பண்பில் செதுக்கப்பட்ட சிற்பம் என்பது புலனாகிறதல்லவா?

### குமரிக் கடற்கரையில் காந்தி மண்டபம்

கன்னியா குமரிக் கடற்கரையில் காந்தியடிகளின் நினைவு மண்டபம் பொலிவுடன் காட்சி தருகிறது.

காந்தியடிகளின் எலும்பில் ஒரு பகுதி குமரிக் கடலில் கரைப்பதற்காகக் கொண்டு வரப்பட்டு, மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்த இடம் தான் - நினைவு மண்டபமாக உருவாக்கப்பட்டிருக்கிறது.

மண்டபத்தின் முகப்பில் காந்தியடிகளின் கோட்பாடுகள் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன.

வாய்மை, இன்னா செய்யாமை, அமைதி, இவைதான் அங்கு எழுதிவைக்கப் பட்டுள்ள கோட்பாடுகள்.

இந்நிதியாண்டில் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் அரிசனங்களுக்குப் பயன்படும் சாலை, பாசனம் ஆகிய வேலைகளுக்கு மானியம் கொடுப்பதற்கு ரூபாய் 6,000- அனுமதிக்கப் பட்டு முழுத் தொகையும் வழங்கப் பட்டது.

வீடுகள் கட்ட நிலம் உள்ள ஏழை அரிசனங்களுக்கு மானியமாக வழங்குவதற்கு ரூ. 8280 கடன் அளிக்க ரூ. 3,000-மும் ஒதுக்கப்பட்டுள்ளது. 12 பயனடைவோர்களைத் தேர்ந்தெடுத்து ரூ.250-ம் மேற்படி பன்னிரண்டு நபர்களுக்கும் வழங்கப் பட்டுள்ளது . மீதி மானியத் தொகை தலா ரூ. 190-ம் வீடுகள் கட்டி முடித்ததும் அவர்களுக்கு வழங்கப்படும்.

தீண்டாமை ஒழிப்பதில் முன்னணியில் நிற்கும் கிராமங்களுக்குப் பரிசளிக்க ரூபாய் 1,500 ஒதுக்கப்பட்டுள்ளது. முதல் பரிசு ரூ. 1000-ம்; இரண்டாம் பரிசு ரூ. 500-ம் கொடுக்கப்படவேண்டும். கல்குளம் வட்டத்தில் செம்பொன்காரை என்ற கிராமம் தீண்டாமை ஒழிப்பதில் முதலாவதாகவும், அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் பாதிரிகோடு கிராமம் இரண்டாவதாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வட்டத்திலும் சுத்தமாக வைத்திருக்கும் குடிலுக்கு ஒவ்வொரு வானொலிப் பெட்டி வழங்க ரூ. 900 ஒதுக்கப்பட்டுள்ளது. குடியிருப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு வானொலிப் பெட்டி வழங்க நடவடிக்கையில் உள்ளது.

இந்த நிதியாண்டில் நாகர்கோவில், மார்த்தாண்டம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் உள்ள மாணவியர் விடுதிகளில் தங்கிப் படிக்கும் 238 மாணவியர்களுக்குத் தீபாவளி, பொங்கல் திருநாட்களையொட்டி ரூ. 4,000 சீருடைகள் அளிக்கப் பட்டன.

மலைவாழ் மக்களுக்காக உள்ள பேச்சிப் பாறை, பெருஞ்சாணி, பத்துக்காணி பாடசாலைகளில் பயின்று வரும் மலைவாழ் மக்களின் மாணவ மாணவிகளுக்குச் சீருடைகள், புத்தகம் முதலியவை வாங்கி அளித்த வகையில்

# உறுதியான கட்டடங்கள்: நகரங்களில் -2

SANKAR IC CEMENT



மலிவு விலை
நகர்ப்புற வீடு

SANKAR IC CEMENT

உறுதியானது, நிலையானது ஆனாலும் மலிவானது

# சங்கர் சிமெண்ட்

IS:269 ISI

பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது

ISI மார்க்குடன் உத்தரவாதம் உள்ளது

IS:269 ISI

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், தன் பில்டிங், சென்னை-2

25 ஆண்டுகள் நிலைத்து — இன்னும் வளர்ந்துகொண்டே போகிறது!

இலவச தொழில் நுட்ப ஆலோசனைக்கு: சிமெண்ட் சர்வீஸ் பீரோ, 'குரோவ்', சென்னை-18

FDSIC-1444TM R




ரூ. 4,025 செலவிடப் பட்டுள்ளது.

தவிர அரிசன நலத்துறைப் பொறுப்பிலும், மற்றுமுள்ள பல துறைகளின் பொறுப்பிலும் பல திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அவைகளின் விவரங்கள் கீழ் வருமாறு :—

கண்ணன்சேரி கைக்காகித உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்.

சாமித் தோப்பு சுண்ணும்பு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்.

செண்பகராமன்புதூர் செங்கல் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்.

தும்பவிளை செங்கல் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

செம்முதல் சுண்ணும்பு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்.

கிராத்தூர் சுண்ணும்பு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்.

ஆறுமுகபுரம் பால் விநியோகக் கூட்டுறவுச் சங்கம்.

அரசர்கோணம் பால் விநியோகக் கூட்டுறவுச் சங்கம்.

கோட்டூர் கோணம் பால் விநியோகக் கூட்டுறவுச் சங்கம்.

குரல் பயிற்சி தொழில் நிலையம், கரியமாணிக்கபுரம்.

தையல் பயிற்சி நிலையம், அண்டூர்.

தையல் பயிற்சி நிலையம், மருங்கூர்.

பனை ஓலைப் பொருள் உற்பத்தி நிலையம், இடைக்கோடு.

## மணல் ஏற்றுமதி

இந்தியாவிலேயே சிறந்த கிராமம் என்று குமரி மாவட்டத்திலுள்ள மணவாளக் குறிச்சியைத் தேர்ந்தெடுத்துப் பரிசளித்துள்ளது மைய அரசு. குருத்தங்கோடு ஒன்றியத்திலுள்ள மணவாளக் குறிச்சியில் மணல் ஆலை ஒன்று இயங்கிவருகிறது. இந்த ஆலையில் 1,500 தொழிலாளிகள் வேலை செய்கின்றனர். கடற்கரையைச் சுற்றியுள்ள சுமார் இரண்டு மைல் தொலைவுள்ள கடல் மணலை எடுத்து அந்த மண்ணில் இருந்து இல்மனைட், மோனேசைட், சர்க்கனைட், ருட்டைல், பார்னட் ஆகிய உலோகப் பொருட்கள் பிரித்து எடுக்கப்படுகின்றன. இல்மனைட்டிலிருந்து டைட்டேனியம் டி ஆக்சைடு தயாரிக்கப்படுகின்றது. இப்பொருள் பெயின்ட், ரப்பர் சாமான்கள், டெரிலின் துணிகள் போன்றவைகள் தயாரிக்கத் தேவைப்படுகிறது. டைட்டானியம் உலோகமும் தயாரிக்கப்படுகிறது. இந்த உலோகம் மிகச் சக்தி வாய்ந்ததாகும்.

மோனேசைட் அணுசக்தி உற்பத்திக்கும், கார்னெட் மேன்டில் தயாரிக்கவும் பயன்படுத்தப் படுகிறது. மின்சார அடுப்புகள் தயாரிக்கச் சார்க்கனைட் பயன்படுத்தப்படுகிறது. தேய்ப்புத்தூள், உப்புத்தூள் தயாரிக்கக் கார்னட்டும் பிளேட் பாலிஸ் செய்ய இல்மனைட்டும் உபயோகிக்கப்படுகிறது.

இந்த மணல் வகைகள் மணவாளக் குறிச்சியில் மிக அண்மையில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க குளச்சல் துறைமுகத்திலிருந்து அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அந்நியச் செலாவணி பெறப்படுகிறது.





# சீரணியின் மாபெரும் சாதனை

# மடிச்சல் கால்வாய்

குமரி மாவட்டத்தில் விளவங்கோடு வட்டத்திலுள்ளது மேல்புரம் ஊராட்சி ஒன்றியம்.

மேல்புறம் ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,01,859 ஆகும். ஆனால், இவ்வொன்றியத்தில் முக்கால் பகுதி மலைகள் நிறைந்ததாக உள்ளது, இந்த வட்டாரத்தின் தென் பகுதி நெய்யாற்றின் இடக்கரைக் கால்வாயின் மூலம் பாசன வசதி பெற்றுள்ளது.

ஆனால், 'களியக்காவிளை முதல் மடிச்சல் பகுதி வரையில் 431 ஏக்கர் பாசன வசதிபெற ஒரு தனிக்கால்வாய் வெட்ட வேண்டும்' என்ற திட்டம் நெடுநாளாக இருந்தது. ஆனால், நிதி நிலை காரணமாக இந்தத் திட்டம் நிறைவேறாமல் இருந்தது.

நெய்யாறு இடக்கரைக்கால்வாயிலிருந்து வெட்டப்படவேண்டிய மடிச்சல் கிளைக்கால்வாய்க்கு ரூபாய் 4.25 இலட்சம் செலவாகும் என்று பொதுப் பணித் துறையினர் மதிப்பிட்டுள்ளனர். ஆறு, ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் பொதுப்பணித் துறையினர் கொடுத்திருந்த இந்தச் செலவு இன்று மேலும் அதிகமாகும் சூழ்நிலைதான்.

ஆனால், இந்தத் திட்டத்தைச் சீரணியினர் தங்கள் அரும்பணியால் நிறைவேற்றி வருகின்றனர்.

சீரணியின் மாபெரும் பணியால் உருவாகியுள்ள மடிச்சல் கால்வாயைக் காணும் எவரும் வியக்காமல் இருக்கமுடியாது.

நெய்யாறு இடக்கரைக் கால்வாயிலிருந்து வெட்டப்படும் மடிச்சல் கிளைக் கால்வாயின் நீளம் இரண்டரை மைல் ஆகும். இடத்தின் தன்மையைப் பொறுத்து இக் கால்வாயின் ஆழம் அமைந்துள்ளது. சில இடங்களில் ஆறு அடி ஆழம் உள்ள மடிச்சல் கிளைக்கால்வாயில் 35 அடி ஆழம் வரை வெட்டப்பட்டுள்ளது.

முப்பத்தைந்து அடிவரை ஆழமுள்ள இடங்களைக் காணும் பொழுது பாறைகளில் குறுக்கே கால்வாய் வெட்டப்பட்டிருப்பதைப் பார்க்கும் பொழுதும் இக்கால்வாயை வெட்டியுள்ளவர்களை மனமாரப் பாராட்டத் தோன்றும்.

சீரணியின் திட்டத்தில் உருவாகியுள்ள மடிச்சல் கிளைக் கால்வாய் இதுவரை பெறப்பட்டுள்ள அரசின் உதவித் தொகை ரூ. 11,337 ஆகும். இதன் மூலம் ஒரு மைல் ஆறு பர்லாங் நீளத்திற்குக் கால்வாய் வெட்டப்பட்டுள்ளது. இக் கால்வாயில் இப்பொழுதே ஒரு மைல் ஐந்து பர்லாங் தொலைவுக்குத் தண்ணீர் விடப்பட்டுள்ளது.

கால்வாய் நீளமான இரண்டரை மைலில் வெட்டி முடிக்கப்பட்டுள்ள ஒரு மைல் ஆறு பர்லாங் தவிர மற்றப் பகுதிகளை வெட்ட அரசு இப்பொழுது ரூபாய் 52,600 உதவி வழங்க முன்வந்துள்ளது. கடுமையான பாறைப் பகுதிகளையும், மேடான பகுதிகளையும் வெட்ட வேண்டியிருப்பதால் மீதியுள்ள பகுதிகளை வெட்ட முன்னர்ச் செலவிட்டதை விடச் சிறிது அதிகமாக ஆகும். எப்படிப் பார்த்தாலும் சீரணித் திட்டத்தில் உருவாகியுள்ள இந்தக் கால்வாய் பெருமைக்குரியதும் பிரும்மாண்டமானதுமாகும்.

இக் கால்வாயை வெட்டச் சீரணியினருடன் ஒத்துழைத்த பொது மக்களும் பெரும் பாராட்டுக் குரியவர்கள் ஆவார்கள்.

விளவங்கோடு வட்டத்தில் வறட்சி நிறைந்த இடமாகக் காணப்பட்ட 431 ஏக்கர் நிலங்களும் பசுமை குலுங்கும் இடமாக மாறி வருகிறது.

சீரணித் திட்டத்தில் உருவான மடிச்சல் கிளைக்கால்வாயே இதற்குக் காரணம் என்று மேல்புறம் ஒன்றியத்தின் தென் பகுதி மக்கள் அனைவரும் நன்றியறிதலோடு சொல்லுகின்றனர்.

---

இது நாஞ்சில் நாட்டில் இருக்கிறது எனும்போது வியப்பு ஏற்படுகிறதல்லவா? இங்கு ஏழு நிலைகளையுடைய வானளாவிய கோபுரம் உண்டு; சிற்பக்கலை சிறந்த ஆலயம் உண்டு; ஏழிசை காட்டும் கற்றூண்கள் இருக்கின்றன. பேருருவம் படைத்த அனுமன் உருவமும் இங்குக் காணலாம். இது எந்த ஊர்? இதுதான் சுசீந்திரம் என வழங்கப்படும் அழகிய சிற்றூர். இங்குள்ள ஆலயப் பணிகளில் சோழ, பாண்டிய, கேரள, விசயநகர மன்னர்கள் பலரும் பங்கு கொண்டுள்ளனர்; ஏறக்குறைய நூற்றுக்கு மேற்பட்ட கல் வெட்டுக்கள் இக்கோவிலின் சுவரிலும், மதிற்புறத்திலும், காறைகளிலும் காணப்படுகின்றன. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாறன்சடையன் காலத்திய கல்வெட்டே மிகப்

## சுந்தரசோழ சதுர்வேதி மங்கலம்

பழமையானதெனக் கருதப்படுகிறது. கி.பி. 906–ல் அரசுக் கட்டிலேறிய ஆதித்தன் புதல்வனாகிய முதற் பராந்தகன் கல்வெட்டும் இங்கு உள்ளது. கி.பி. 985–ல் அரசேறிய முதல் இராச இராசனின் ஆட்சியிலும் இவ்வூர் இருந்தது. ஆனால், பன்னிரண்டாம் நூற்றாண்டில் இடைப்பகுதியில் பாண்டியர் ஆட்சியில் இது வந்தது. பாண்டியன் மாறவர்மன் இதனை ஆண்டான். எனவே, சுந்தரபாண்டிய சதுர்வேதி மங்கலம் என்னும் பெயரால் இவ்வூர் அழைக்கப்பட்டது.

சுசீந்திரம் கோவிலுக்குள் பல மன்னர்களின் சிலைகள் உள்ளன; திருமலை நாயக்கரின் சிற்பத்திறன் அமைந்த இரு சிலைகளும், விசயநகர மன்னர்களின் சிலைகளும் கண்கவரும் வகையில் அமைந்துள்ளன.

## பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு அரசு அளிக்கும் கல்விச் சலுகை

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் படிக்கும் பின் தங்கிய வகுப்பு மாணவர்களுக்குப் பின் தங்கிய வகுப்பினர் நலத்துறை உதவித் தொகை வழங்கி வருகிறது. இவர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகை இருவகைப்படும். ஒன்று 'உண்டி-உறையுள் உதவித் தொகை' (Residential Scholarship) மற்றொன்று 'சம்பள உதவித் தொகை' (Non-Residential Scholarship) ஆகும்.

இச்சலுகைகள் 40 விழுக்காடு மதிப்பெண் பெற்று ஆண்டு வருமானம் ரூ. 2,000-க்கு மேற்படாத குடும்பத்தைச் சேர்ந்த பின் தங்கிய வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் உண்டு.

உண்டி-உறையுள் சலுகை பின்தங்கிய வகுப்பினருக்கு கல்லூரிப் படிப்புக்கு மட்டும் கொடுக்கப்படும். 9, 10,11-ஆம் வகுப்புகளில் படிக்கும் பின்தங்கிய மாணவர்களுக்குக் கட்டணங்கள் (fees) புத்தகச் செலவு, தனிக் கட்டணங்கள் (Special fees) முதலியவை ஈடு செய்யப்படுகின்றன. இவர்களுக்கு உண்டி, உறையுள் சலுகை கிடையாது.

ரூ. 1,500-க்கு உட்பட்ட வருமானமுள்ள பின் தங்கிய வகுப்பு மாணவர்களுக்குக் கல்வித் துறையினர் அரைச் சம்பளச் சலுகை அளிக்கின்றனர். மீதியுள்ள அரைச் சம்பளத்தைப் பின் தங்கிய வகுப்பினர் துறை அளிக்கிறது. ரூ. 1,500-க்கு மேல் ரூ. 2,000 வரை வருமானமுள்ள பின்தங்கிய மாணவர்களுக்குப் பிற்பட்ட வகுப்பினர் நலத் துறை அரைச் சம்பளச் சலுகை அளிக்கிறது. குறிப்பிட்ட சில டெக்னலஜிக்கல் (Technological) படிப்புகளுக்கு முழுச் சம்பளச் சலுகை அளிக்கப்படுகிறது.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பயின்று வரும் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்குக் கல்வித் துறையினரால் கொடுக்கப்படும் உதவித் தொகை (Stipend) போகப் பிற்பட்ட வகுப்பினர் நலத்துறையும் கீழ்க் கண்டவாறு உதவி அளித்து வருகிறது.

Elementary Grade Junior Rs. 15 per annum, Senior Rs. 18 per annum; Secondary Grade Junior Rs. 35 per annum, Senior Rs. 25 per annum. அல்லது B. T. அல்லது B. Ed. பயிலும் மாணவர்களுக்கு உண்டி-உறையுள் (Residential) உதவித்தொகையும், அது அல்லாத உதவித் தொகையும் அளிக்கப்படுகிறது. பின்தங்கிய வகுப்பு மாணவர்களின் கல்விக்கு உதவித் தொகை அளிக்க நடப்பு ஆண்டில் ரூ. 275.96 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பின்தங்கியவகுப்பு மாணவர்கள் தங்கிப் படிக்க 28 விடுதிகள் அரசினரால் நடத்தப்படுகின்றன. 1971-72-ஆம் ஆண்டில் 50 விடுதிகள் திறக்க ஆணையிடப்பட்டுள்ளது. அதில் உறையும் மாணவர்களுக்கு உணவுக்கு மாதம் ஒன்றுக்குத் தலைக்கு ரூ. 25 வீதம் செலவிடப்படுகிறது.

மேற்சொன்ன அரசினர் விடுதிகளைத் தவிரத் தனியாரால் நடத்தப்படும் அங்கீகரிக்கப்பட்ட விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாதமொன்றுக்குத் தலைக்கு ரூ. 20 வீதம் மானியமாக அளிக்கப்படுகிறது.

**(சட்டப்பேரவையில் வெளியிடப்பட்ட அறிக்கை)**

## சுசீந்திரம் கைமுக்து

இது என்ன மூக்கா? முக்கா? அன்று; நீதி வழங்கிய பழைய முறை.

பிழைபிழைத்த நம்பூதிரியினத்தார்க்கு நீதி சுசீந்திரத்தில் வழங்கப் பட்டு வந்தது; செண்பகராமன் மண்டபத்தில் மேலே ஒரு சதுர வெளி ஒன்று உள்ளது. அதன் வழியாகக் கதிரவன் தலைக்கு மேல் வந்த நடுப்பகலை அறியலாம். அங்குக் கதிரவனைச் சாட்சியாகக் கொண்டு, குற்றமிழைத்தோர் சோதனை செய்யப்படுவர்; அகன்ற பெரிய பாத்திரத்தில் நெய் நன்றாகக் காய்ச்சப்படும்; ஒருவிதப் பச்சிலை கொண்டு அந்நெய்யின் சூட்டை அறிந்து கொள்வர்; பின்னர் அந்நெய்யிலே பொன்னால் ஆக்கப்பட்ட நந்தியை இடுவர்; குற்றவாளி என ஐயுறப்பட்டவர் அவையோர் முன்னிலையில் கொதிக்கும் அந்நெய்யில் கையிட்டு அதனை எடுப்பர்; நெய்யால் கை வெந்து போகவில்லையானால் அவர் குற்றமற்றவரெனக் கருதப்படுவராம். இதுதான் சுசீந்திரம் கைமுக்காகும்.

## ஆலயமும் ஆண்டவனும்

ஏழைகளின் சிரிப்பில் இறைவன் இருக்கிறான். ஆண்டவன் பழனியில், மதுரையில், காஞ்சியில் இருக்கலாம். ஆனால், உண்மையாக இருக்கும் இடம், ஏழையர் இல்லத்தில் தீபத்தை ஏற்றிவைக்கப் பாடுபடுகிறவன் உள்ளத்திலும், உணர்விலுமே!

* * *

தொண்டுதான் பக்தி யென்றால், நாங்களும் பக்தர்களே! நான் செல்லும் ஆலயம், பிச்சைக்கார விடுதிகள். நான் வணங்கும் தெய்வங்கள் பிணியாளர்கள்.

—முதல்வர் கலைஞர்


சுற்றுலாவுக்கு
ஒரு மாவட்டம்

# விவேகானந்தர் நினைவு மண்டபம்

தமிழ் நாட்டில் சுற்றுலாவுக்கு ஒரு மாவட்டம் நீலகிரி மாவட்டம் தானே என்கிறீர்களா? இப்பொழுது தமிழ் நாட்டில் அந்தப் பெருமையைப் பெற்று வரும் இன்னொரு மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம்.

இந்திய பூபாகத்தின் தென்கோடியில் முக்கடலும் முத்தமிட அமைந்துள்ள குமரிமுனை, சமயப் பெருமைகளுடன் வரலாற்றுச் சிறப்புகளும் மிக்கதாக விளங்கியதால் இந்தியாவில் உள்நாட்டில் சுற்றுப் பயணம் செய்பவர்களுக்கு ஒரு முக்கிய இடமாகத் திகழ்ந்தது. அந்நிலை இன்று மேலும் வளர்ந்துள்ளது.

உள்நாட்டுச் சுற்றுலாக்காரர்களையும் வெளிநாட்டுச் சுற்றுலாக்காரர்களையும் இன்று கன்னியாகுமரி பெருமளவில் கவரும் இடமாக வளர்ந்துள்ளது. இதன் முக்கிய காரணங்களில் ஒன்று—



கனடா நாட்டிலிருந்து கன்னியாகுமரிக்கு வந்திருந்த வெளிநாட்டுக்காரர் ஒருவர் சொன்னார், "நான் இந்தியாவுக்கு வரும்பொழுது தாஜ் மகாலைப் பார்க்காவிட்டாலும் விவேகானந்தர் நினைவு மண்டபத்தைப் பார்க்க வேண்டும் என்ற துடிப்புடன் வந்தேன். இந்த நாட்டுக்கு வரும் ஒவ்வொரு வெளிநாட்டவரும் பார்க்க வேண்டிய இடம் விவேகானந்தர் நினைவு மண்டபம்" என்று.

இந்த அளவுக்கு அயல்நாட்டவர் மனத்தையெல்லாம் கவர்ந்துள்ளது விவேகானந்தர் நினைவுப் பாறையில் கட்டப்பட்டுள்ள நினைவு மண்டபம். 1892 - ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 25-ஆம் நாள் அன்று கன்னியாகுமரிக் கரையிலிருந்து 1600 அடி தொலைவிலுள்ள ஸ்ரீபாத பாறையை நோக்கி நீந்திச் சென்று அங்கு அமர்ந்து தியானத்தில் இருந்தார் விவேகானந்தர்.

இதனைக் "கன்னியாகுமரி பகவதியம்மன் கோவிலில் இந்தியாவின் கடைசித் துண்டுப் பாறையில் இருந்தபோது என்னுள்ளத்தினுள் ஒரு திட்டம் தோன்றியது" என்று விவேகானந்தர் அவர்களே கூறியுள்ளார்கள்.

அந்தத் திட்டத்தால் உலகு அறிஞர் பெருமக்களில் ஒளிச் சுடராய்த் திகழ்ந்தார் விவேகானந்தர். அந்த அறிஞர் பெருமகன் அருளொளி பெற்ற பாறையில் நினைவு மண்டபம் எழுப்ப 1964 - ஆம் ஆண்டு தமிழக அரசிடமிருந்து அனுமதி பெறப்பட்டு நினைவு மண்டபம் கட்டத் தொடங்கினர்கள்.

நினைவு மண்டபம் கட்டி முடிக்கப்பட்டு 1970-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் இரண்டாம் நாளன்று தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் இந்தியக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி திறந்து வைத்தார்கள்.



என்பது லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இந்த நினைவு மண்டபம் திராவிடக் கட்டடக் கலைக்கு ஓர் எடுத்துக் காட்டாகவும் பேளூரில் உள்ள ராமகிருஷ்ண ஆலயம் போன்றும் அமைக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் இந்தியக் கலைகள் அனைத்தும் ஒருங்கே இணைக்கப் பட்டுள்ளன.

தேசியர் சின்னமான இந்த நினைவு மண்டபத்திற்கு எல்லா மாநில அரசுகளும் ஏராளமான உதவிகளை அளித்துள்ளன. தமிழ்நாடு அரசு பெருமளவில் உதவி அளித்துள்ளது.

மூன்று ஏக்கர் பரப்பளவும் கடல் மட்டத்துக்கு மேல் 55 அடி உயரமுமுள்ள இப்பாறையில் கட்டப்பட்டிருக்கும் நினைவு மண்டபம் தமிழகக் கட்டடக்கலை வல்லுநர்களின் கலைத்திறனுக்குச் சீரிய எடுத்துக்காட்டாகும்.

மழையினால் கிடைக்கும் நீரைத் தேக்கி வைக்கப் பெரிய நீர்த்தொட்டிகளும் ஹெலிகாப்டர் விமானம் இறங்குவதற்குத் தளமும் இப்பாறையிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நினைவு மண்டபத்தில் அமைக்கப்பட்டிருக்கும் எட்டடி உயரமுள்ள விவேகானந்தர் வெண்கலச் சிலையின் கம்பீரம் காண்பவர் அனைவரையும் கவரும் தன்மை உடையது.

மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோவில் உப்பங்காற்றால் பொரிந்து பொரிந்து காணப்படுகிறதே, அது போன்ற நிலை விவேகானந்தர் நினைவு மண்டபத்துக்கு ஏற்படாதவாறு மண்டபம் அமைந்திருக்கும் வண்ணத்தில் ஆறு திங்களுக்கு ஒருமுறை இரசாயனப் பூச்சுப் பூசுகிறார்கள்.

விவேகானந்தர் நினைவு மண்டபத்தில் காணப்படும் துப்புரவு எல்லா ஆலயங்களுக்கும் வழிகாட்டியாக உள்ளது.

காலை முதல் மாலைவரை எல்லா இந்திய மொழிகளிலுமுள்ள பாடல்களையும் ஒலிபரப்புகிறார்கள்.

கரையிலிருந்து விசைப்படகு மூலம் நினைவு மண்டபத்துக்கு அழைத்துச் செல்கிறார்கள். கட்டணம் கிடையாது. ஆனால் மண்டபத்திற்குச் செல்பவர்கள் எத்தனை பேராக இருந்தாலும் அவர்களால் முடிந்த தொகையைப் படகுப் போக்குவரத்துக்கு ஆகும் செலவுகளுக்காக நன்கொடை தருகிறார்கள். யாரிடமும் குறிப்பிட்ட அளவில் கட்டணம் வசூலிப்பதில்லை!

விவேகானந்தரின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சியை விளக்கும் படங்கள் கொண்ட கண்காட்சியையும் விவேகானந்தர் நினைவு மண்டபக் குழுவினர் வைத்துள்ளனர். இக்கண்காட்சியை நிரந்தரமாக அமைத்தால் அனைவருக்கும் பயனளிக்கும் என்று தமிழகக் கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் கூறியதற்கிணங்க இக்கண்காட்சியை நிரந்தரமாக வைத்துள்ளனர்.

விவேகானந்தர் பாறையைக்காண வருபவர்களின் வசதிக்காக விவேகானந்தர்புரம் என்ற அழகிய குடியிருப்புகளையும் அமைத்துள்ளனர். இங்குத் தங்கக் குறைந்த கட்டணமே வசூலிக்கப்படுகிறது.

விவேகானந்த புரத்திலுள்ள தென்னஞ் சோலைகளிலே அமர்ந்து விவேகானந்தர் மண்டபத்தைக் காணும் காட்சி மிக அருமையான காட்சியாகும்.

விவேகானந்தர் நினைவு மண்டபத்தின் தென் கோடியில் நின்று தென் திசையை நோக்கினால் கண்ணில் தெரியும் நீர்ப்பரப்பில் பூமிப்பந்தின் தெற்குக் கோடிவரை நிலப்பரப்பே இல்லையாம். ஆமாம் பதினைந்தாயிரம் மைல் தொலைவு வரை-குமரி முனைக்கு நேராக வேறு நிலப்பரப்புக் கிடையாது.

இந்தப் பெருமைகளோடு குமரி முனைக்குரிய பழம்பெருமை மிக்க ஆலயமும் சுற்றுலாக்காரர்களை ஈர்க்கின்றது.




பத்மநாபபுரம்
அரண்மனே



186 ஏக்கர் பரப்பளவில் கல்குளம் கோட்டை கி. பி. 1601 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. அதற்கு முன்னரே அங்கு அரண்மனை கட்டப் பட்டிருந்தது என்று அறிகிறோம்.

குன்றுகளுக்கும் ஆறுகளுக்கு மிடையே அமைந்த கல்குளம் கோட்டையின் மையத்தில் அரண்மனை கட்டப்பட்டுள்ளது.

கள்ளிக்கோட்டையிலிருந்து இளவரசர்கள் அகதிகளாக வந்து திருவனந்தபுரத்தில் தங்கியதால், இங்கிருந்து தலைநகரைத் திருவனந்தபுரத்துக்கு வேணாட்டு அரசர் மார்த்தாண்ட வர்மா 1744 ஆம் ஆண்டில் மாற்றிய பொழுது கல்குளம் கோட்டையையும் அரண்மனையையும் அனந்தைத் திருமால் பத்மநாப சுவாமிக்கு அர்ப்பணித்துவிட்டாராம். அன்று முதல் கல்குளம் பத்மநாபபுரமாகிவிட்டது.

64 மூலிகை மரங்களாலான கட்டில் இது அரண்மனையில் உள்ளது!

நாகர்கோவிலிலிருந்து வடக்கே பத்துமைல் தொலைவில் உள்ளது பத்மநாபபுரம்.

1744-ஆம் ஆண்டுவரை இவ்வூர் கல்குளம் என்றே அழைக்கப்பட்டதாகக் கல் வெட்டுகள் கூறுகின்றன.

ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகட்கு முன்பே கட்டப்பட்ட அரண்மனை இங்கு உள்ளது. வேணாடு என்று அழைக்கப்படும் முன்னாள் திருவிதாங்கூர் இராச்சியத்தின் தலைநகராக கல்குளம் கி. பி. 1550 ஆம் ஆண்டிலிருந்து பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிவரை விளங்கியுள்ளது.

பத்மநாபபுரம் பல மாட மாளிகைகளோடு சிறப்புற விளங்கியதாக 'சாதக சந்தேசம்' என்ற வடமொழி நூல் கூறுகிறது. "கிழக்கிந்தியத் தீவுகளுக்கு ஒரு பயணம்" என்னும் நூலை எழுதிய பாலினோ பார்த்தலோமியோ எனும் பாதிரியார் 1783-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 23-ஆம் நாளிலிருந்து பதினாறு நாட்களுக்குப் பத்மநாபபுரம் அரண்மனையில் விருந்தினராகத் தங்கியிருந்தாராம்.



ஊறுகாய்ப்பானை!



அரண்மனை முன்னேயுள்ள அழகிய பூந்தோட்டத்தில் இருக்கும் மணிக்கூண்டு இந்தியாவிலேயே மிகவும் பழமையான மணிக்கூண்டுகளில் ஒன்றாகும்.

மணிக்கூண்டிலுள்ள கடிகாரம் ஒரு கிராமத் தொழிலாளியால் செய்யப் பட்டது. இது ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்கு முன் செய்யப் பட்டது. இதன் ஓடும் சக்தி தொங்க விடப்பட்டுள்ள இரு கற்களினின்றும் பெறப்படுகின்றது. இக் கற்கள் உள் சக்கரத்திலிருந்து சுமார் 9 மீட்டர் நீளமுள்ள சங்கிலியால் தொங்கவிடப்பட்டுள்ளன. வாரந் தோறும் தூக்கப்படுகின்ற பளுவினாலும் ஐந்து அங்குலமுள்ள பெண்டுலத்தினாலும் இக்கடிகாரம் ஓடுகிறது. பெரிய மணியோடு அதன் நாக்கு மோதுவதால் ஏற்படும் ஓசை மூன்று கிலோ மீட்டர் தொலைவு வரை கேட்குமாம்.



பழமையான ஆயுதங்களும் 1741-ஆம் ஆண்டிலிருந்து குளச்சல் துறைமுகத்திலே டச்சுக்காரர்களைப் போரிலே வெற்றி பெற்று அவர்களிடமிருந்து கவர்ந்த மேனாட்டு ஆயுதங்களும், குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு அக்காலத்தில் பயன்படுத்தப் பட்ட ஆயுதங்களும் உள்ளன.

வழிபாட்டு அறையிலுள்ள தீபம் ஆண்டாண்டுக்காலமாக அணையாமல் பாதுகாக்கப்படுகிறது. சுவர் முழுதும் சித்திரங்களால் அழகுப் படுத்தப்பட்டுள்ளன.

முழுதும் மரங்களால் ஆகிய அறைகள், கூடங்கள் இந்த அரண்மனைக்கு அழகூட்டுவனவாக அமைந்துள்ளன.



உப்பரிகை மாளிகைக்கு மேற்கே யுள்ள நவராத்திரி மண்டபம் ஒரு விசாலமான அறையாகும். இதி லுள்ள மிக அழகிய கற்றூண்களும் அவைகளின் பூமுனைகளும் நாயக்கர் காலத்துக் கட்டடப் பாணியை நினை வூட்டுகின்றன.

வேணாட்டு மன்னர்கள் நாள் தோறும் 2000 பேர்களுக்கு இலவச மாக உணவு அளிப்பார்களாம். இந்த அரண்மனையில் அடுக்கி வைக் கப்பட்டுள்ள ஆளுயர ஊறுகாய் ஜாடிகளைப் பார்த்தாலே தெரியும், ஒவ்வொரு நாளும் இந்த அரண் மனையில் உணவுக்காக எவ்வளவு செலவழிக்கப்பட்டது என்பது.

நாள்தோறும் தமிழகத்திலிருந்து செல்லும் ஏராளமான சுற்றுலாக் காரர்களின் முற்றுகைக்கு ஆளாகும் இந்த அரண்மனை தமிழகத்திலுள்ள குமரி மாவட்டத்தில் இருந்தாலும், கேரள அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் பொறுப்பில் இருக்கின்றது.

## இவைமட்டுமல்ல...

பெருஞ்சாணி, பேச்சிப்பாறை அணை கள் கோதையாறு மின்சாரத் திட்டங் கள் போன்றவையும் குமரி மாவட்டத்தில் காணவேண்டியவை களாகும்.

திற்பரப்பு என்று இப்பொழுது சொல்லப்படும் திருப்பரப்பு அருவி யும் அதன் அருகிலுள்ள மகாதேவர் ஆலயமும் காணவேண்டியவைகளா கும்.

மற்றும் இம்மாவட்டத்தில் புகழ் வாய்ந்த ஆலயங்கள் பல உண்டு. தாணு, மால், அயன் மூவருக்கும் சேர்ந்து அமைந்துள்ள சுசீந்திரம் ஆலயம் முதலியவையும் காண வேண்டிய இடங்களே.

## மருந்துவாழ் மலை.

மேற்குத் தொடர்ச்சி மலையின் தெற்கு முனை, குமரி மாவட்டத்தில் தான் உள்ளது. இந்த இடம் இப்பொழுது மருந்து வாழ் மலை என்று அழைக்கப்படுகிறது.

அனுமான் சஞ்சீவி பர்வதத்தை எடுத்து வந்த பொழுது சிதறிய துண்டு இது என்று கதை சொல்லு பவர்களும் உண்டு. மருந்து வாழ் மலை பாறை போன்று காட்சியளித் தாலும் இங்கு இன்றும் ஏராளமான மூலிகைகள் உள்ளன.





# என் இந்தக் காதல்?

அ. மறைமலையான்

## 17. சர்க்கரைப் பொங்கலா?

தனிமையே தணலாக எரிக்க, அதிலே சாம்பலாகக் கருகிக் கொண்டிருந்தாள் அந்தத் தளிர்க் கொடி.

சுவர்க் கடிகாரம் 'டண் டணார் டண் டணார்' —என்று இரண்டு தடவை ஓலமிட்டு விட்டது.

அகிலம் முழுவதுமே ஆழ்ந்த உறக்கக் கடலில் அமிழ்ந்த வண்ணம் இருக்கும் அந்த வேளையிலும், தனக்கு மாலையிட்ட மணாளன் வந்துவிட மாட்டானா என்றே அவள் எதிர்பார்த்தாள்—ஏங்கித் துடித்தாள்.

காலிலே பலமான அடிதான் என்றாலும், தன் தமக்கையை மருத்துவர்கள் கவனித்துக் கொள்ள மாட்டார்களா என்கிற மனத்தெளிவு வேண்டாமா மாதவனுக்கு? தன் தாய் தங்கியிருப்பது போதாதென்று தானும் ஏன் மருத்துவ மனையிலேயே குடியாய்க் கிடக்க வேண்டும்?

தனக்காக ஒரு பெண்புறா தவியாய்த் தவித்துக் கிடப்பதை உணர்ந்து தெளிந்து அவன் மட்டும் அந்த மாடி அறையினுள் இப்போது அடி வைக்கட்டுமே! உடனே ஓடிப்போய் அவனுடைய கால்களில் விழுந்து, கைகளில் பிணைந்து, மார்பினில் புதைந்து, மவுனத்தில் நெளிந்து தன்னைத் தானே அவனுக்குக் காணிக்கையாகத் தந்துவிட மாட்டாளா தேன்மொழி?

ஆனால், அவன் எங்கே அந்த நள்ளிரவுக்குப் பிறகு வந்து அவளை அள்ளிக் கொள்ளப் போகிறான் ஆசையோடு?

'உம்..எதற்குமே கொடுத்து வைத்திருக்க வேண்டாமா?'

—பெரு மூச்சுக்களைச் சிதற விட்டு என்னதான் தன்னைத் தானே தேற்றிக் கொள்ள முயன்றாலும்—தலைவிதியின் மீது பாரம் பழியைப் போட்டாலும் —மழைவிழுந்த மணல்மேடா மனக்கூடு,—பதப்பட்டு அடங்கிப்போக?

அந்தப் பொருமலில்—புழுக்கத்தில்—எரிச்சலில்— ஏமாற்றத்தில்—இதயமே விண்டு வெடித்துவிடும் போல் இருக்கிறது தேன்மொழிக்கு?

அவளால் படுக்கையில் கிடக்கவே முடியவில்லை; அது நெருப்பாகவே சுடுகிறது.

அவளால் இமைக் கதவை மூடவே முடியவில்லை; இரும்பு லாடமாகவே அது அழுத்துகிறது.

ஊதுவத்தியின் நறுமணத்தோடு போட்டியிடும் மல்லிகை மலர்கள் வெண்பட்டுக் கம்பளமாக அந்த வெல்வெட்டு மெத்தையிலே எவ்வளவுதான் விரிந்து கிடந்தென்ன? இறைந்து சிரித்தென்ன? அவற்றிலே தன் பூவினும் மெல்லிய மேனியை எவ்வளவு நேரந்தான் புரட்டி எடுப்பது? முகத்தைப் புதைப்பது?''

உண்மையில் உள்ளப் புழுக்கத்தைத் தாங்க முடியாமல் அவளுடைய உடம்பு முழுவதும் இப்போது வெப்பக் கூடாகவே வெலவெலத்துப் போய்விட்டது.

அறைப் புழுக்கத்தைப் போக்க மின்விசிறியைச் சுழலவிட்டால் போதும்.

ஆனால், மனப் புழுக்கத்தைப் போக்க எந்த விசிறியால் இயலும் —மாதவனின் மதுர முகம் ஒன்றைத் தவிர?

கட்டிலை விட்டு இறங்கினாள் தேன்மொழி. திருமணத்திற்காக வந்து அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்கும் தங்கள் உற்றார் உறவினரையெல்லாம் தாண்டிக் கொண்டு, தங்கள் மாளிகை இல்லத்தின் மொட்டை மாடிக்குச் சென்றாள்.

அங்கே பூந்தொட்டிகளைத் தாங்கிய கட்டைச் சுவர் மீது குப்புறப் படுக்காத குறையாகக் கால்களை முட்டுக் கொடுத்த வண்ணம் சாய்ந்து நின்றாள் அவள். வலக்கரத்தால் மோவாயைத் தாங்கியவாறு தலையைச் சற்றே நிமிர்த்தி, வானக் கூடாரத்தின் மேல் தன் பார்வையைப் படரவிட்டாள்.

அங்கோ, விண்வெளியின் குத்துவிளக்கான நிலவுத் தலைவியைக் காணவில்லை; அகல் விளக்குகளான தாரகைத் தோழிகளே கண் சிமிட்டின.

மனித வாழ்க்கையே முழுநிலவாக வளர்வதற்கு— ஒளிர்வதற்கு— ஆசைப்பட்டுக் கடைசியில் வெறும் நட்சத்திரமாக நலிந்து, மெலிந்து— அதுவும் எரி நட்சத்திரமாகவே உதிர்ந்து அழிந்து போவது தானே?

கீழே தெருப்பக்கத்தில் மனிதக் குரல்களின் சலசலப்பு.

அப்போதுதான் கடைசி ஆட்டத் திரைப்படம் முடிந்திருக்கும் போலும். 'அவற்றைப் பார்த்துவிட்டுத் திரும்பிய உற்சாகத்தில் 'இளசுகள்' சில சீட்டியடிப்பதும் பாட்டுப் பாடுவதும் கேட்டன. அவற்றையும் மீறிக்கொண்டு திரைப்படத்தைப் பற்றிய திறனாய்வுகள்; தேவையில்லாத விவாதங்கள். நடுநடுவே, கைவளையல்களின் குலுங்கல்; 'களுக்' என்னும் சிரிப்பு; யாராவது புதிதாக மணமானவர்கள் இடித்துக் கொண்டு—

சிரித்துக் கொண்டு— செல்வார்களோ ?

தேன்மொழியின் நெஞ்சம் விம்மித் தாழ்கிறது.

அவளுடைய கனவுகள்—கற்பனைகள்—எப்படியெல்லாம் கருச்சிதைவு அடைந்து விட்டன !

சட்டென்று அவளது பார்வை நெட்டிலிங்க மரங்களையும், தென்னை மரங்களையும் ஊடுருவிக் கொண்டு அடுத்த தெருவிலுள்ள ஒரு வீட்டுப் பக்கம் நீள்கிறது. காரணம், அங்கே பளிச்சென்று தெறித்த வெளிச்சந்தான்.

அந்த வீட்டுக்கு ஒரேயொரு மாடி அடுக்கு ; அதனால், தங்கள் இல்லத்தின் மூன்றாவது அடுக்கிலே நிற்கும் தேன்மொழிக்கு அங்கே நடப்பவையெல்லாம் தெளிவாகவே தெரிய முடியும்.

அங்கே குடியிருப்பவர்களும், அப்போதுதான் திரைப்படம் பார்த்துவிட்டுத் திரும்பியிருப்பார்களோ, என்னவோ ? இல்லையென்றால், அந்த நள்ளிரவில் தெளிந்த முகத்தோடு பளபளக்கும் உடைகளோடு அவர்கள் அப்படி நடமாடத் தேவை இல்லையே !

சற்றைக் கெல்லாம், தலை நிறைய மலர்களைச் சூடிய இளம் பெண்ணொருத்தி படுக்கையை விரித்துப் போடுகிறாள் சட்டையைக் கழற்றிக் கொடியிலே மாட்டிவிட்டுப் பனியனும், வேட்டியும் அணிந்த அவளது கணவன் அந்தச் செப்புச் சிலையின் பின்னால் செல்கிறான். நீலச் சேலை உடுத்துக்கொண்டிருந்த அவளது செழுமையான தோளைத் தொடுகிறான் ; முறுவலை வழியவிட்டவாறே அவளும் முகத்தைத் திருப்பி அவனை நிமிர்ந்து நோக்குகிறாள் தீர்க்கமாக ....

தன் மனத்துக்கினிய மாதவனும் இப்படித் தன் முதுகுப்புறம் வந்து— தோள்களைத் தொட்டு —தன் முகத்தை அப்படியே தன் இரு உள்ளங்கைகளாலும் ஏந்திக் கொண்டு ........

விழிகள் குளமாகின்றன தேன்மொழிக்கு.

எங்கோ நாய்கள் அழுகின்றன ஊளையிட்டு.

* * *

மாதவனின் தமக்கை வள்ளியம்மைக்கு மறுபடியும் அப்படியொரு சோதனை வந்திருக்க வேண்டாம்.

அவளுடைய அங்கங்கள் அடைந்திருந்த சிதைவுகள்—செல்லரிப்புகள்— போதாது என்று அவளுடைய கால்களுள் ஒன்றையும் முழங்கால் வரை எடுத்தே ஆகவேண்டும் என்று முடிவு கூறிவிட்டனர் டாக்டர்கள்.

அந்த முடிவினைக் கேட்டு மாதவனும் அவன் தாயும்

குமுறிய குமுறல், கதறிய கதறல் கொஞ்ச நஞ்சமல்ல.

### தொலைபேசியில் கம்ப்யூட்டர்

ஒரே நேரத்தில் 18,000 தொலைபேசித் தொடர்புகளைக் கையாளக்கூடிய தொலைபேசித் தொடர்பகம் ஒன்று இலண்டன் நடுவில் அமைக்கப்படுகிறது. உலகிலேயே மிகப் பெரிதாக அமையும் இந்தத் தொடர்பகம் உருவாக 10 மிலியன் பவுன்கள் செலவாகும்.

ஆறு கம்ப்யூட்டர்களும் இந்தத் தொடர்பகத்தில் இருக்கும். இவை தொலைபேசி அழைப்புகளை அனுப்பிவைத்து இணைப்பு ஏற்படுத்தித் தருவதோடு, கட்டணங்களையும் சரியாகக் கணக்கு வைத்துக் கொள்கிறது. அனைத்துலகத் தொலைபேசித் தொடர்பில் வினாடி வழுவாமல் நேரப்படி கட்டணத்தைக் கணக்கிட்டுத் தருவது இதன் சிறப்பு.

இரும்பு நெஞ்சம் படைத்தவர் என்று பெயர் எடுத்த பேரின்பமுத்துவினாலேயே தம் கண்கள் கலங்குவதைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

தம்முடைய மகளின் திருமணத்தை முன்னிட்டுத்தான் சிங்கப்பூரில் தம்மை முற்றுகையிட்டிருந்த பல்வேறு அலுவல்களையும் அப்படி அப்படியே போட்டு விட்டு அவர் தமிழகத்திற்கு ஓடோடி வந்தார் ; என்றாலும், அவருடைய வருகையால் மிகவும் பயன் பெற்றவள் வள்ளியம்மையே.

தன் தமக்கைக்கு ஏற்பட்ட விபத்தினைக் கண்டு, மாதவன் மனம் இடிந்து போய்விட்ட நிலையில், பேரின்பமுத்துவின் அயராத முயற்சியும் அளவில்லாத செல்வாக்குமே அவளது உயிரைக் காப்பாற்றியது எனக் கூறலாம்.

அவர் இல்லையென்றால், மருத்துவத் துறையில் மாபெரும் புலிகளாகத் திகழும் அவ்வளவு உயர்ந்த டாக்டர்கள் எல்லாரும் வந்து அவளுக்குச் சிகிச்சையளிக்க முற்பட்டிருப்பார்களா ?

ஆனால், நீண்ட நாட்கள் பேரின்பமுத்துவினால் தமிழகத்திலேயே தங்கியிருக்க முடியவில்லை. வள்ளியம்மையின் கால் எடுக்கப்பட்ட பிறகு, அவளது உயிருக்கு ஊறு வராது என்று உறுதியாகத் தெரிந்த உடனேயே மீண்டும் சிங்கப்பூருக்குச் சிட்டாய்ப் பறந்து விட்டார் அவர்.

தேன்மொழியைக் கவனித்து வழி நடத்த வேண்டிய பொறுப்பைப் பூங்கொடியின் தலையிலேயே சுமத்தி விடவும் அவர் தவறவில்லை.

* * *

திருமண விழா நிகழ்ந்த பிறகு, மாதவனின் தமக்கையின் மீதே தானும் தனிக் கவனம் செலுத்த வேண்டியிருந்ததால், தேன்மொழியின் வீட்டுக்கு வந்து முன்போல ஆர அமரப் பேசிக் கொண்டிருக்கவே நேரங் கிட்டவில்லை பூங்கொடிக்கு.

இதற்கிடையில், சிங்கப்பூர் திரும்பிச் சென்ற பேரின்பமுத்து, அவளுக்கு முக்கியமான கடிதம் ஒன்றை வரைந்திருந்தார். அதைப்பற்றிக் கலந்து பேசுவதற்காக ஒரு நாள் பிற்பகல் தன் அலுவல்களையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டுத் தேன்மொழியைத் தேடி வந்தாள் டாக்டர்.

அப்போது சமையற்காரி சண்பகம் மட்டுந்தான் அவளை வரவேற்றாள்.

'' தேன்மொழி எங்கே ?'' —என்று கேட்டதற்கு,

'' டேபிள் டென்னிஸ் ஆடுறதுக்காகத் தங்கப்பன் வந்து அழைச்சுக்கிட்டுப் போனார்.''
—என்றாள் சண்பகம்.

'' தங்கப்பனா? யார் அது?''
—திகைப்புடன் வினவினாள் பூங்கொடி.

'' என்ன டாக்டரம்மா, அதுக்குள்ளே அவரை மறந்திட்டீங்க? அன்னிக்குச் சின்னய்யாவோட அக்கா மோட்டார் சைக்கிளிலே அடிப்பட்டு விழுந்தப்போ 'நான் பாத்துக்கிறேன்; நீ போய்த் தாலியைக் கட்டு'ன்னு சொல்லிட்டு உங்களோடேயே ஆஸ்பத்திரிக்கும் வந்தாரே, ஞாபகம் இல்லையா?''

'' ஓ!...... அவரா?''

'' ஆமா, அவரேதான். இப்ப ஏதோ பெரிய போட்டி நடக்குதாம். கல்கத்தா, பம்பாய், டில்லி—இன்னும் எங்கெங்கேயிருந்தோ எல்லாம் ஆட்டக்காரங்க வந்திருக்காங்களாம். அவங்களோட விளையாடத்தான் சின்னம்மாவும் தங்கப்பனும் போயிருக்காங்க.''

'' ஏன், மாதவன் ஆடவில்லையா?''

'' தன் அக்கா அடிபட்டுக் கிடக்கிறப்போ அவராலே எப்படிக் கவலை இல்லாமே விளையாட முடியும்?''

'' அவருடைய அக்காளுக்குத்தான் ஆபத்தான கட்டம் எல்லாம் எப்போதோ தாண்டிவிட்டதே! இன்னுங் கொஞ்ச நாளில் மருத்துவ மனையை விட்டே கூட வந்துவிடலாமே?''

'' அது என்னமோ அம்மா! தன் அக்கா மேலே உள்ள பாசத்தினாலே, டேபிள் டென்னிசை மட்டும் இல்லே, நம்ம தேன்மொழி அம்மாவையே அவர் மறந்திட்டாக் கூட நான் ஆச்சரியப்படமாட்டேன்.''

'' ஆமா, மாதவன் இங்கே தானே தங்கியிருக்கிறார்?''

'' அவர் ஏம்மா இங்கே வந்து தங்குறாரு? வழக்கம் போல அவர் அந்த வாடகை வீட்டிலே தான் குடியிருக்கிறாரு; அங்கே தான் அவரோட அம்மாவும் இருக்கிறாங்க; அங்கே இருந்து தான் அவர் அக்காவுக்குச் சோறும் போவுது ஆஸ்பத்திரிக்கு.''

'' நீ சொல்வதற்கும் சிங்கப்பூரிலிருந்து கடிதம் வந்திருப்பதற்கும் அப்படியே சரியாக இருக்கிறதே!''



'' பெரியய்யா கடிதாசி போட்டிருக்காங்களா? என்னம்மா எழுதியிருக்காங்க?''

—ஆர்வம் கொப்புளிக்கக் கேட்டாள் சமையற்காரி.

'' மாதவனுடைய குணத்தைப் பற்றி அப்படியே படம் பிடித்த மாதிரி எழுதி இருக்கிறார். சின்ன வய்தாக இருந்தாலும் மனப்பக்குவம் மிகுந்தவராம் அவர்; மற்றவர்கள் பொருளுக்கு இச்சைப்படவே மாட்டாராம். தன்மான உணர்வும் உள்ளவராம். அதனாலே மாமனார், வீட்டிலே போய் மருமகன் குடியிருப்பதா என்று இங்கே வந்து அவர் தங்க மறுக்கலாமாம். அதே சமயம் தேன்மொழியாலும் வசதி குறைவான இப்போதுள்ள வாடகை வீட்டிலே அவரோடு வாழ்வதற்கும் கடினமாக இருக்குமாம். ஆகையால், ஒரு நல்ல வீடாக வாடகைக்கே எடுத்து அவர்களுக்குத்

தனிக்குடித்தனம் அமைத்துக் கொடுக்கணும் என்று எழுதியிருக்கிறார். ''

'' அப்போ இந்த விடு என்னம்மா ஆகிறது ? ''

'' இதை வாடகைக்கு விட்டு விட வேண்டியதுதான். ''

'' அய்யோ, இதை விட்டுப் பிரியறதுக்குச் சின்னம்மாவுக்கு மனசே வராதே ! எனக்கென்னமோ இப்போதைக்கு இந்த வீடு மாத்துற சேதியை அவங்க காதிலே போடுறது அவ்வளவு நல்லது இல்லேன்னு தான் எனக்குப் படுது. இப்பவே அவங்க ஏதோ விரக்தியா வெறுப்பா நடந்துக்கிறாங்க. அதிலே இந்த வீட்டையும் விடணும்னு அவங்க நெஞ்சே வெடிச்சுப் போகும். ''

'' அப்படியா சொல்றே ? ''

''ஆமாம்மா, அப்புறம் இன்ன ஒண்ணைச்சொன்னுக் கோவிச்சுக்க மாட்டீங்களே ? ''

'' அதெல்லாம் கோபிக்கமாட்டேன், சும்மா சொல் ''

'' போன தடவை பொங்கலுக்கு இங்கே நீங்க விருந்து சாப்பிட வந்தப்போ, என்ன சொன்னீங்கன்னு ஞாபகம் இருக்கா ? ''

'' என்ன சொன்னேன் ? ''

'' உங்களுக்கு அது மறந்துதான் போயிருக்கும் ; ஆனு, நான் அதை மறக்கலே : ' அடுத்த பொங்கலுக்குள்ளே நம்ம தேன்மொழிக்குத் திருமணம் நடந்திடும் ; அவங்க வாழ்க்கை சர்க்கரைப் பொங்கல் மாதிரி எப்போதும் தித்திச்சுக்கிட்டே இருக்கணும் ''—— அப்படின்னு வாழ்த்துனீங்க ! ''

'' ஓ, ஆமா......! ''

'' அந்த மாதிரிச் சக்கரைப் பொங்கலாத்தான் சின்னம்மாவோட வாழ்க்கை இனிச்சுக்கிட்டு இருக்கிறதா நீங்க நினைக்கிறீங்களா, டாக்டரம்மா?''

'' நீ என்ன சொல்றே, சண்பகம் ? ''

——திகைப்புத் தெறித்தது டாக்டரின் கேள்வியில்.

'' நான் என்ன சொல்ல வந்தேன்னு, பொங்கல் பானைக் கழுத்திலே மஞ்சள் கொத்தைக் கட்டினு மட்டும் போதுமா ? காலா காலத்திலே பானையை அடுப்பிலே ஏத்த வேணுமா ? அரிசியைப் போட வேணுமா ? வெல்லம், பால், திராட்சை, முந்திரிப் பருப்பு எல்லாத்தையும் அதிலே கொட்டவேணுமா? இவ்வளவும் செய்யாமே வெறும் பானையாப் போட்டுட்டு வாழ்க்கை சர்க்கரைப் பொங்கலா இனிக்கணும் சர்க்கரைப் பொங்கலா இனிக்கணும் அப்படின்னு வாழ்த்தினு மட்டும் இனிச்சிடுமா ? ''

——சமையற்காரியின் இந்த வார்த்தைகளைக் கேட்டு அப்படியே வாயடைத்துப் போனுள் டாக்டர் பூங்கொடி.

'' நான் எதுக்குச் சொல்ல வந்தேன்னு, அது அது அந்த அந்தக் காலத்திலே கனியலேன்னு அப்புறம் ரெண்டு பேருக்குமே ஒட்டோ, உறவோ எப்படிம்மா இருக்கும் ? நான் உங்க மாதிரிப் படிச்சவ இல்லே ; அதனுலேதான், நான் சொல்றது உங்களுக்கு அருவருப்பா பிடிக்காமே கூட இருக்கலாம். ஆனு, அந்த வள்ளியம்மா அடிபட்டு விழுந்ததையே ஒரு சறுக்கா வச்சுக்கிட்டு இந்தப் புதுப் பொண்ணைப் புறக்கணிக்கிறது ரொம்பத் தப்பு இல்லையா ? எத்தனை நாளைக்குத்தான் சின்னம்மாவும் பேச்சுத் துணைக்குக் கூட ஆள் இல்லாமே வீட்டுக்குள்ளேயே அடைஞ்சு கிடப்பாங்க ? அதனுலேதான், அந்தத் தகப்பனே, இல்லே, வேறே பித்தனை அப்பனே——யார் வந்து அழைச்சாலும் ' டேபிள் டென்னிஸ்' ஆட வெளியே கிளம்பிடுறாங்க''.

'' ஆமா, மாதவன் இங்கே வருகிறுரா இல்லையா ? ''

'' ஓ, வாராறே——ஆடிக்கு ஒரு தரம், அமாவாசைக்கு ஒரு தரம்! அப்படியே வந்தாலும் ஒரு அரை மணி நேரமாச்சும் தங்குவாரா ? மாட்டாரே ! எனக்கென்னமோ டாக்டரம்மா ரொம்ப ரொம்ப பயமா இருக்கு! இந்தக் காலமோ, பொல்லாத காலம் ! படிச்ச பொண்ணுங்க-- அதுவும் பணக்கார வீட்டுப் பொண்ணுங்க——நாகரிகம் என்கிற பேராலே பயம் தெளிஞ்சு தாங்க நினைக்கிறபடியெல்லாம் நடக்கிற காலமாவும் போச்சு ! நம்ம சின்னம்மாவைப் பொறுத்து இந்த விநாடி வரைக்கும் ஒரு அப்பழுக்குச் சொல்ல முடியாதுதான். ஆனு, பள்ளம் படுகுழியிலே நாமாத்தான் கண்ணை மூடிக்கிட்டு விழணும்னு இல்லையே! மத்தவங்க திருட்டுத்தனமா தள்ளி விட்டும் விழலாம் இல்லையா ? ''

——சண்பகத்தின் சொற்களைக் கேட்டுத் ' திகீர் ' என்று ஓர் அதிர்ச்சியே உண்டாயிற்று பூங்கொடியின் இதயத்தில்.

சமையற்காரியே மேலும் தொடர்ந்தாள் :

'' ஏம்மா, நாம இப்படி ஒரு ஏற்பாடு செஞ்சா என்ன ? ''

'' என்ன ஏற்பாடு ?''

(வளரும்)

### தமிழ் நீட்டலளவு முறை

பழந்தமிழகத்தில் பழக்கத்திலிருந்த நீட்டலளவு வாய்பாடு கீழே தரப்பட்டுள்ளது. காதம் அல்லது காவதம் என்று வழங்கப்பட்ட இந்த அளவு தற்காலத்திய ஆங்கிலேய முறையான மைல் அளவு போன்று காணப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 12 விரல் | .. | 1 சாண் |
| 2 சாண் | ... | 1 முழம் |
| 4 முழம் | .. | 1 கோல் |
| 500 கோல் | .. | 1 கூப்பீடு |
| 4 கூப்பீடு | .. | 1 காவதம் |
| 8,000 முழம் | | 1 காவதம் |

# வெண்பாப் போட்டி

## 28. மையை மறவாமை மாண்பு

கையைப் பிசைந்து கருவிழியில் நீர்வடித்து
மெய்யாய் விரைவில் திரும்புகஎன்—ஐயத்தால்
பைய மொழிந்தனளே பாவை, அவளாற்று
மையை மறவாமை மாண்பு.

—சிவ. நடராசன், மாமல்லபுரம்.

செய்கையிலும் வாக்காலும் சிந்தையிலும் மூச்சாலும்
மெய்வருந்தும் நந்தமிழர் மேன்மையுறச்—செய்துவரும்
ஐயன் கலைஞன் அருந்தமிழ வேள்தலை
மையை மறவாமை மாண்பு

—பா. மன்றோ சாமுவேல், அமராவதி நகர்.

வங்கக் கடலோரம் வன்மைத் தமிழ்பாடும்
பொங்கு புனலாடும் பூமகன்—தங்காய் நீ
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தான், தமிழ்ப்புல
மையை மறவாமை மாண்பு.

—பாரதி சங்குப்பிள்ளை, அமராவதி நகர்.

அசைபார்த்துச் சீராக்கி அல்லுபகல் எண்ணி
நகையுடனே நாமெழுதும் வெண்பா—மிசை, நல்லோ
சையைப் பொருளைத் தவழும் விதிமுறை
மையை மறவாமை மாண்பு.

—பொன். அபிலன், பி.எஸ்சி., பி.டி., குருவிக்குளம்.

கண்ணழகுக் காளைதன் கைப்பிடித்த நாள்தொட்டு
மண்ணுலகில் இன்னுயிர்தான் மாயுமட்டும்—
திண்ணமாய்க்
கையை நொடிக்காமல் கண்மூடாப் பேணும்தாய்
மையை மறவாமை மாண்பு.

—புலவர் சினி. கருப்பையா, திங்களூர்.

புண்ணியராய் வாழ்ந்த புனிதராம் காந்தியாரும்
கண்ணியத்தைக் காத்துக் கடன்புரிந்த — அண்ணாவும்
செய்திட்ட நேர்மைச் செயலளிக்கும் சீர்பெரு
மையை மறவாமை மாண்பு.

—புலவர் கு. மங்கையர்க்கரசி, திருச்செங்கோடு.

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:

திரு. சிவ. நடராசன்,
அரசினர் சிற்பக் கல்லூரி,
மாமல்லபுரம்—செங்கை மாவட்டம்.

பாராளு மாங்கிலமும் பைந்தமிழு மேயிளைஞர்
தாராள மாய்பயிலச் சட்டஞ்செய் — சீராளர்
கையை வலிவுபெறக் காண்போம் அவர்திற
மையை மறவாமை மாண்பு.

—கே. எஸ். ஆறுமுகம்பிள்ளை, கோயம்புத்தூர்-1.

உண்ணக் கனிகொடுப்பேன் உற்ற நிழல்கொடுப்பேன்
எண்ண மதிலுதவி ஏற்பேனோ ? — மண்ணிலென்கொள்
கையை மனிதன்கைப் பற்றினால் அன்னவர்தன்
மையை மறவாமை மாண்பு.

—கலைப்பிரியன் மு. நாராயணன், சத்திரப்பட்டி.

நற்கருத்து சொற்செறிவு நல்லோசை பெற்றிலங்கும்
அற்புதவெண் பாக்களையே ஆய்ந்தெடுத்து—நற்கவிமேன்
மையைப் பரப்பும் ' தமிழரசே ' உன்திற
மையை மறவாமை மாண்பு.

—இராஜாமணி, ஆரூர்.

போரிலே ஆண்மையை, பூவையர் பெண்மையை,
ஊரிலே எந்நாளும் ஒற்றுமையைப்—பாரில்நேர்
மையை மனத்தில்உண் மையை வளரும்தாய்
மையை மறவாமை மாண்பு.

—ஜே. திலகவதி, சென்னை-13.

மாற்றானின் தோட்டத்து மல்லிகையே யானாலும்
ஏற்றிடும் நன்மணமே என்றிவண்—போற்றும்நேர்
மையை நமக்களித்த மாமேதை சொன்னஉண்
மையை மறவாமை மாண்பு.

—மௌனி"கோ" சிலம்பகம்.

கல்லெடுத்துப் போட்டவரின் காதினிலே கற்கண்டாய்ச்
சொல்லெடுத்துப் போட்டுச் சிரித்திட்ட—நல்'அண்ணன்'
கையை விரல்கொண்ட பேனா எழுதிவிட்ட
மையை மறவாமை மாண்பு.

—அ. சு. முருகேசன், கொடிங்கியம்.

துன்பத்தைக் கண்டு துயருற்று மாளாதே
இன்பமும் ஓர்நாள் எதிர்வருமே—என்னும்உண்
மையை உறுதியுடன் பற்றுக; நாளும்வாய்
மையை மறவாமை மாண்பு.

—ச. காளியப்பன், மத்தியச் சிறை, எண். 7483, சென்னை-3.

பெற்று வளர்த்துப் பெயரிட்டு நற்றமிழைக்
கற்றுக் கவிபாடக் காண்பித்தே—உற்றநன்
மையைப் பெருக்கி வளமளித்த தாயாமம்
மையை மறவாமை மாண்பு.

—புலவர் முத்துசண்முகன், பி.ஏ., மதுரை.

பற்றொழிலால் வையம் பயனளிக்க முந்தினுமோர்
நற்றொழிலின் றென்றால் நடக்குமோதான் ?—பெற்றசீர்
மையை யுவந்தளிக்கும் மாசில் திருவேளாண்
மையை மறவாமை மாண்பு.

—குருசிதம்பரம், நெடுங்குளம்.

கண்ணகி மாதவி கன்னித் திலகவதி
எண்ணரும் பெண்டிர் எழில்சேர்த்தார்—மண்ணுலகில்
தையல்நல் வாழ்வு தழைத்தோங்கக் கற்பாம்பெண்
மையை மறவாமை மாண்பு.

—மு, ஆவுடையப்பன், பழையூர்.

உள்ளும் புறமும் ஒன்றாகி உள்ளிருக்கும்
கள்ளத்தை மாய்த்தே கனிவோடு—சொல்லினி
மையைக் கடைப்பிடித்து வாழ்வினில் நாளும்வாய்
மையை மறவாமை மாண்பு.

—ப. அ. இசுமாயில், கல்கத்தா.

செம்மை இனிமை செழுந்தண்மை சேர்ந்தமொழி
எம்மை யுலகத்தும் யார்கண்டார்—நம்முயிரே
மெய்யை மறந்தாலும் மேலாம் தமிழ்மொழித்தொன்
மையை மறவாமை மாண்பு.

—சிவ. கிருட்டிணன், கணியூர்.

யாரே உரைகேளார் யார்யார்தான் பின்வாரார்
பாரே தொழில்கேட்கும், பண்பாளா ! — தேருங்கால்
கையசைக்க நாடசையும் காண்அண்ணா நின்தலை
மையை மறவாமை மாண்பு.

—உ. சி. சுந்தரவரதாச்சாரி, சென்னை-23.

தாயகத்தின் தொல்பேர் 'தமிழ்நா' டெனச்சூட்டி,
ஆயகலை ஆட்சிமொழி அஃதாக்கித்—தேயதமிழ்
வையத்தை நன்காண்ட மாமேதை அண்ணாமேன்
மையை மறவாமை மாண்பு.

—சு. பொன்னுடு, வடவள்ளி.

ஓங்கு புகழும் உயர்ந்த பதவிகளும்
தாங்குந் திரவியந் தழைத்தாலும்—ஏங்கியே
வையத்தில் நித்தம் வதைபடும் ஏழைவறு
மையை மறவாமை மாண்பு.

—என். ஜி. கே. மணிமேகலை, சென்னை-56.

வெண்பாக்கள் நானெழுதி அச்சேறு மென்றிருந்தும்
என்பா தமிழரசார் ஏற்றிலரே—இன்னும்நான்
கையை எழுதுகின்ற காகிதத்தை என்பேனா
மையை மறவாமை மாண்பு.

—சு. கிருட்டிணன், திருப்பூர்—1.

ஈன்றாள் பசித்திருக்க ஏப்பமெழ உண்ணுபவன்
நான்காப்பேன் நாட்டையெனில் நம்புவரோ—வான்மழைபோல்
வையம் புரப்போரே வாழ்வளிப்பர் என்றவுண்
மையை மறவாமை மாண்பு

—புலவர் க. முத்துக்கருப்பன், நகரம்.

அண்மை நடந்தபோர் ஆண்மை புகழ்ந்தபோர்
பெண்மை யதுவாழ்த்தப் பெற்றபோர்—உண்மையினை
வைய மறியும்அவ் வாழ்த்துதலைப் பெற்றகட
மையை மறவாமை மாண்பு

—ந. தெய்வசிகாமணி, கோவை-12.

மாரியும் பொய்யாகப் போனதனால் மக்களெல்லாம்
நீரின்றிப் பட்டணத்தில் நிற்கையில்—பேரரசு
ஓய்வின்றி வீதியெல்லாம் ஊற்றுக் குழாய்கொடுத்த
மையை மறவாமை மாண்பு.

—த. உலகம்மாள், பறக்கை.

பொய்யும் புனைச்சுருட்டும் புல்லறிவோர் பண்பாகும்
செய்யும் வினைப்பாட்டில் சீர்த்திபல—எய்துவரோ
வையத்தார் உள்ளத்துள் வாழ்வதற்(கு) என்றும்வாய்
மையை மறவாமை மாண்பு.

—ப. அறவாழி, தளவாய்ப்பட்டணம்.

எண்ணறிந்தும் ஏனை எழுத்தறிந்தும் எத்தொழிலுந்
திண்மையுடன் செய்யுந் திறமையதை—நண்ணிடினும்
நையு மிடைமாதர் நாணமெனும் பெண்மையின்நீர்
மையை மறவாமை மாண்பு.

—கு. ப. தாயுமானசாமி, குகை.

முந்தி எழுதி முடித்தபல வெண்பாக்கள்
எந்த இதழிலும் இன்றுவரை—வந்ததில்லை
ஐயகோ! என்செய்வேன்! அன்பன்யான்; என்நிலை
மையை மறவாமை மாண்பு.

—அத்தி ஆதி அரசமணி, அத்திவெட்டி.

தாய்மை பிறவிதரத் தந்தை அறிவுதரத்
தூய்மை வழிநடத்த வையத்தில்—வாய்மைநேர்
மையைக் கடமையைக் காலத்தால் செய்தநன்
மையை மறவாமை மாண்பு.

—சு. ப. சங்கர நாராயணன், பி.ஏ., ஆத்தூர்.

உள்ளம் உணர்வதுவே உண்மையாம் நம்செயலிற்
கள்ளம் கலவாமை மென்மையாம்—கள்ளமின்
மையை உரைப்பதுவே வாய்மையாம் என்றுமித்தூய்
மையை மறவாமை மாண்பு.

—க. கிருட்டிணமூர்த்தி, அரிமளம்.

குன்றெனச் செல்வம் குவித்திடும் நோக்குடன்
என்னரும் தோழரே ஈயத்தைப்—பொன்னென்றும்,
காயைக் கனியென்றும் காட்டாதீர் என்றும்நேர்
மையை மறவாமை மாண்பு.

—சு. தருமர், மேலாண்மறைநாடு.

தென்றலாய்த், தண்ணிலவாய்த், தெள்ளமுதாய்ச், செந்தேனாய்க்
கன்னலாய்த், தீங்கனியாய்க், கற்கண்டாய்,—அன்னையாய்த்
தையல் தரும்சுகமாய்த் தோன்றும் தமிழினி
மையை மறவாமை மாண்பு.

—எழில்வேந்தன். சென்னை-28.

தீயதைச் செய்தாரும் சிந்தை திருந்திடவே
ஆயதைச் செய்திடுதல் அன்புடைய—தூயவர்கள்
வையம் துலங்கிடத்தம் வாழ்நாளில் செய்திடும்நன்
மையை மறவாமை மாண்பு.

—புலவர் சோ. கருப்பசாமி, புளியம்பட்டி.

பூவை மறவாமை பொன்வண்டின் பண்பாடு!
சாவை மறவாமை சால்பாகும்—நாவரசர்
வையமுணர் அண்ணாவின் மேன்மை வழியுடை
மையை மறவாமை மாண்பு

—புலவர் முத்துவேங்கடேசன், திருமயம்.

வாட்டுந் துயரிலும் வாட்டாமுரு நம்கலைஞர்
நாட்டுத் துயர்களைய நாட்டமுற்றுத்—தீட்டினார்
ஐயமிலாத் திட்டங்கள் ஆயிரம்; அப்பெரு
மையை மறவாமை மாண்பு.

—ஆ. இராசரத்தினம், பி.எஸ்சி., பி.டி., தாமரங்கோட்டை.

கற்பை மறவாமை காசினியில் என்றென்றும்
பொற்புடை மாதர்க்குப் புண்ணியமாம்—அற்புதஞ்சேர்
வையத் தினைஞரெல்லாம் துய்யமனத் தோடுதாய்
மையை மறவாமை மாண்பு.

—ப. வே. இராமசாமி, மானாமதுரை.

ஞாயிறுதிங் கள்செவ்வாய் நல்லபுதன் பின்வியாழன்
போய்வெள்ளி யும்சனியும் பூவுலகில்—வாய்த்தவொரு
வையத்தின் நாள்ஏழாய் வைத்தநம்முன் னோர்சான்றாண்
மையை மறவாமை மாண்பு.

—நெல்லை ஆ. கணபதி, சென்னை-15.

செந்தமிழ்ப் போர்காக்கச் சேர்தண்ட வாளத்தும்
நொந்ததமிழ்ப் பாவலர்க்கும் தந்தலயைத்—தந்தவண்
மையை யுடையாரை யெண்ணியவர் பேராண்
மையை மறவாமை மாண்பு.

—புலவர் சி. முத்து, கீடையம்.





வளமான வளர்ச்சிக்கும்
அதிக உற்பத்திக்கும் சிறந்தவை

# ரோவிமிக்ஸ்

டிரேட் மார்க்

மற்றும்

# ரோவிஸால் ஓரல்

டிரேட் மார்க்





**ரோவிமிக்ஸ்—சாதாரணமாகத் தேவைப்படும் விடமின்களுக்கு:**

உங்கள் கால்நடைகளுக்கு சாதாரணமாகத் தேவைப்படும் விடமின்களை சுலபமாகவும் குறைந்த செலவிலும் அளிக்க கனிஜங்களால் கெடாத ரோவிமிக்ஸ் விடமின் பவுடர் வகைகளில் ஒன்றைத் தீனியுடன் கலக்கவும்.

**ரோவிஸால் ஓரல்—அதிகப்படியான விடமின்களுக்கு:**

ஒட்டுண்ணிகள் அல்லது தொற்று நோய் பற்றுதல், மருந்து ஊட்டுதல், அதிகச் சூடு, அதிகக் குளிர்ச்சி, ஈரம் அல்லது வரட்சி, சிறகுகளை உதிர்த்தல், துரிதமான வளர்ச்சி, ஓர் இடத்திலிருந்து மறு இடத்திற்குக் கொண்டு போதல் ஆகிய காலங்களில், பிராணிகளின் விடமின் தேவை சாதாரண அளவைவிட இரு மடங்குக்கும் அதிகமாகக் கூடும். எனவே, விடமின் அளவை அதிகரிக்க, தேவைக்கேற்ப, பிராணிகளுக்கு ரோவிஸால் ஓரல் கொடுக்கவும்.

தயாரிப்பாளர்கள்:

ROCHE ரோஷ் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்
28, தார்தேவ் ரோட், பம்பாய்-34 WB.

# மேலே கால்வாய்

# கீழே சாலை...!





தமிழ்நாட்டில் வேறு எந்த மாவட்டத்திலும் காண முடியாத காட்சிகளைக் குமரி மாவட்டத்தில் காணலாம். அதிலே ஒன்றுதான்—

கீழே சாலை—

மேலே கால்வாய்!

இந்தக் காட்சி, பார்க்கும் நமக்கு அதிசயமாக உள்ளது. ஆனால், குமரி மாவட்டத்தில் இது சாதாரணக் காட்சியாக உள்ளது. நான்கைந்து இடங்களில் இதுபோன்று பார்க்கலாம்.

படத்தில் நீங்கள் பார்க்குமிடம் நாகர்கோவிலிலிருந்து திருவனந்தபுரம் செல்லும் நெடுஞ்சாலையில் உள்ள வில்லுக்குறி என்ற ஊரில் உள்ள பாலமாகும்.

வில்லுக்குறியை வில்லுக்கிறி என்றும் சொல்கிறார்கள்.

சாலையின் குறுக்கே செல்லும் பாலத்தில் கால்வாய் ஓடுகிறது. அதில் மக்கள் குளிக்கும் காட்சியையும் பார்க்கிறீர்கள்.

பேச்சிப் பாறை, பெருஞ்சாணி அணைக்கட்டுப் பகுதிகளிலிருந்து வரும் கால்வாய்கள் இப்படி ஓடிவருகின்றன. மலைப்பாங்கான பகுதிகள் இருப்பதால் இதுபோன்று கால்வாய்கள் ஓடுகின்றன.

சில இடங்களில் சாலையை ஒட்டிப் பக்கத்திலேயே சாலையைவிட இருபது அடி, முப்பது அடி உயரத்தில் கால்வாய்கள் ஓடுவதும் இங்கே சாதாரணக் காட்சிதான்!



# குமரி மாவட்டத்திற்குத்



# தமிழக அரசின் பரிசு!

கோதையாறு நீர் மின்திட்டம் தமிழ்நாட்டில் மின்சார வாரியத்தினால் சுமார் 14·81 கோடி ரூபாய் செலவில் நிருமாணிக்கப்பட்ட ஒன்பதாவது நீர்மின் திட்டமாகும். இத்திட்டம் குமரி மாவட்டத்திற்குப் பெருமளவு பயன்படும். கோதையாறு முத்துக் குழிவயல் பீடபூமிக்குத் தென் சரிவில் உற்பத்தியாகிப் பேச்சிப்பாறை அணையில் போய்ச் சேர்ந்து கொண்டு இருக்கிறது. இந்த ஆற்றுநீரின் இடையே 2 அணைகள் கட்டித் தேக்கி ஒரு இலட்சம் கிலோ வாட் மின் சாரத்தை உற்பத்தி செய்து விட்டு, மறுபடியும் முன்போல் பேச்சிப்பாறை நீர்த் தேக்கத்தில் தண்ணீர் சேர்த்து விடப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் நிருமாணிக்கப்பட்ட, மணிக்கு 60 ஆயிரம் கிலோவாட் மின்சார உற்பத்தி செய்யவல்ல முதல் மின்நிலையம் ஏற்கெனவே செயல்படத் தொடங்கிச் சுமார் 8 கோடி யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்துள்ளது.

மணிக்கு 40 ஆயிரம் கிலோ வாட் மின்சாரம் உற்பத்தி செய்யவல்ல இரண்டாம் மின் நிலையம் 17—11—1971 முதல் செயல்படத் தொடங்கியுள்ளது.

நீலகிரி மாவட்டத்திலுள்ள பைகாரா மின் நிலையத்தைக் காட்டிலும், 100 அடி உயர நீர் வீழ்ச்சியைக் கொண்டு மின் உற்பத்திசெய்யும் முதல் மின்நிலையம் இதுதான். ஆசியாவிலேயே அதிகஉயரமுள்ள நீர் வீழ்ச்சியைப் பயன்படுத்தும் மின் நிலையமும் இதுவேயாகும்.

இத்திட்ட மின் நிலையங்கள் நாகர்கோவிலிலிருந்து சுமார் 65 கி.மீ. தூரத்தில் நிருமாணிக்கப்பட்டுள்ளது.

இத்திட்ட வேலைகள் மும்முரமாக நடந்து கொண்டு இருக்கும் போது சுமார் 10,000 தொழிலாளர்களும், 200-க்கு மேற்பட்ட ஒப்பந்ததாரர்களும் மேல் கோதையாற்றிலும், கீழ்க் கோதையாற்றிலும் இத்திட்டத்தில் பங்கு கொண்டுள்ளனர்.

இத்திட்டத்தினால் ஆண்டு ஒன்றுக்குச் சராசரி 39 கோடி யூனிட் மின்சாரம் உற்பத்தியாகும்.

## கோதையாறு மேல்அணை

கோதையாறு மேல் அணை குமரி மாவட்டத்தில் முத்துக் குழி அரண்மனைக்குப் பக்கத்தில், கடல் மட்டத்திற்கு மேல் 4,200 அடி உயரத்தில் கட்டப்பட்டுள்ளது.

இவ்வணை சுமார் 275 அடி உயரமும், உச்சியில் 600 அடி நீளமும், 4,300 மில்லியன் கன அடி கொள்ளளவும் உடையது. இத்தேக்கம் சுமார் 11·25 சதுர மைல் பரப்பளவில் பெய்யும் மழைநீரைத் தேக்க வல்லது.

## நீர்ச்சுரங்கம் 1

மேல் அணையிலிருந்து தண்ணீர் 7 அடி விட்டமும் 11,000 அடி நீளமும் வினாடிக்கு 290 கனஅடி தண்ணீர் பாய்ச்சக் கூடியதான சுரங்கப் பாறையைக் குடைந்து அமைக்கப் பட்டுள்ளது. இச்சுரங்கம் 20 அடி விட்டமும் 440 அடி ஆழமும் உள்ள தேக்கக் கிணற்றில் முடிகிறது.

## நீர் அழுத்தக்குழாய்(பென்ஸ்டாக்) 1

நீர்த்தேக்கக் கிணற்றிலிருந்து சுமார் 7,100 அடி நீளமுள்ள நீர் அழுத்த எஃகுக் குழாய் மூலமாக 3,192 அடி ஆழத்திற்குத் தண்ணீர் முதலாவது மின் நிலையத்திற்குக் கொண்டு வரப்படுகிறது.

இந்த எஃகுக் குழாய் ரஷ்யாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்ட எஃகுத் தகடுகளினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது

எஃகு தகடுகளைக் குழாய்களாகக் கொச்சியில் உள்ள பின்னிகம்பெனியால் செய்யப்பட்டுக் கோதையாற்றில் நிருமாணிக்கப்பட்டது.

### முதல் மின்நிலையம்

இந்த மின் நிலையத்தில் ஒரு மின் உற்பத்தி இயந்திரம் "ஜெனரேட்டர்" நிறுவப் பட்டுள்ளது. சுவிட்சர்லாந்து "லெனி" இஞ்ஜினியரிங் நிறுவனத்தாரால் டர்பைனும், பிரான்சு தேசத்து "ஆலுஸ் தாம்" நிறுவனத்தாரால் ஜெனரேட்டரும் நிருமாணிக்கப் பட்டுள்ளன.

இது மணிக்கு 60 ஆயிரம் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்ய வல்லது.

இந்த மின் நிலையம் சுமார் 1,180 அடி கடல் மட்டத்திற்கு மேல் அமைக்கப்பட்டுள்ளது.

### கோதையாறு கீழ்அணை

முதல் மின் நிலையத்திலிருந்து மின் உற்பத்தி செய்த பின் வெளிவரும் தண்ணீரையும், கீழ்க் கோதையாற்றுப் படுகையில் சுமார் 11 சதுர மைல் பரப்பிலுள்ள மழை நீரையும் தேக்கி, இரண்டாவது மின் நிலையத்தில் மின் உற்பத்தி செய்வதற்காக "மீன்முட்டிக்கு" அருகாமையில் கோதையாற்றுக்கு குறுக்கே கட்டப்பட்டுள்ளது.

இதன் உயரம் சுமார் 200அடி; நீளம் 500 அடி; கொள்ளளவு 31 மில்லியன் கன அடி.

இது சுமார் 1,000 அடி கடல் மட்டத்திற்கு மேல் அமைக்கப் பட்டுள்ளது.

### நீர்ச்சுரங்கம் 2

கீழ்க்கோதையாற்றுநீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் 9 அடி விட்டமும் 8,000 அடி நீளமும் விநாடிக்கு 690 கன அடி தண்ணீரைப் பாய்ச்சும் சுரங்கம், பாறையைக் குடைந்து அமைக்கப் பட்டிருக்கிறது.

இச்சுரங்கம் 20அடி விட்டமும், சுமார் 400 அடி ஆழமும் உள்ள நீர்தேக்கக் கிணற்றில் முடிகிறது.









நீர்அழுத்தக் குழாய் (பென்ஸ்டாக்) 2

நீர்த் தேக்கக் கிணற்றிலிருந்து சுமார் 1,000 அடி நீளமுள்ள நீர் அழுத்த எஃகுக் குழாய் மூலமாக 840 அடி ஆழத்திற்குத் தண்ணீரை இரண்டாவது மின் நிலையத்திற்குக் கொண்டு வரப்படுகிறது.

## சிந்தைகவர் சிற்பங்கள்!

சுசிந்திரம் கோவிலில் உள்ள சிற்பங்களில் நாயக்க மன்னர்களின் சிலைகள் அற்புதமான சிற்ப வேலைப்பாடுகளுடையன. முத்துக்கோவைகள் தொங்கும் இச்சிற்பங்கள் வழுவழுப்பானவை; கருநிறம் வாய்ந்தவை. இரும்பினால் ஆக்கப்பட்டதெனத் தோற்றமளிக்கும் கடாரியும், தூக்கிய வாளும் அச்சமூட்டுவன. சிலையின் மூக்கின் இடப்பக்கம் மெல்லிய குச்சியை விடின் அது வலப்பக்கக் காது வழியாக வரும்; வலப்பக்க மூக்கில் குச்சியை விடின் அது இடப்பக்கச் செவி வழியாய் வரும்.

இந்த எஃகுக் குழாய்கள் திருச்சி காவேரி ஸ்டஸ்க்சுரல் நிறுவனத்தாரால் தயாரிக்கப் பட்டுக் கோதையாற்றில் நிருமாணிக்கப்பட்டன.

இரண்டாவது மின்நிலையம்

இந்த நிலையத்தில் ஒரு மின் உற்பத்தி இயந்திரம் (ஜெனரேட்டர்) நிறுவப்பட்டுள்ளது.

யூகோஸ்லாவியா தேசத்து '' இன்க்ரா '' கம்பெனியாரால் டர்பைனும், ஜெனரேட்டரும் நிருமாணிக்கப்பட்டுள்ளன.

இது மணிக்கு 40 ஆயிரம் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யவல்லது.

இந்த மின் நிலையம் சுமார் 330 கனஅடி மட்டத்திற்கு மேல் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மின்நிலையத்திலிருந்து மின் உற்பத்தி செய்த பின் வெளிவரும் தண்ணீர் சுமார் 2 பர்லாங்கு நீளமுள்ள கால்வாய் வழியாகப் பேச்சிப்பாறை நீர்த்தேக்கத்தில் போய்ச் சேருகிறது.

## கல்வி சிறந்த குமரி

இந்தியாவிலே அதிகமாகக் கல்வி கற்றவர்கள் வாழும் ஊர் திருவனந்தபுரம் என்கிறார்கள். அந்த ஊருக்கு அடுத்த நிலையில் படித்தவர்கள் அதிகமாக வாழும் பெரிய ஊர் கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகரான நாகர்கோவில்.

தமிழ்நாட்டில் ஒரு சிறிய மாவட்டமான கன்னியாகுமரி மாவட்டத்தில் பதிமூன்று கல்லூரிகள் உள்ளன. ஆண்களேயன்றி பெண்களும் அதிகமாகக் கல்வி கற்ற மாவட்டமாகும் இது. குமரி மாவட்டத்திலுள்ள கல்லூரிகள் விவரம் வருமாறு :—

1. விவேகானந்தா கல்லூரி—அகத்தீசுவரம்.
2. ஸ்ரீதேவி குமரி மகளிர் கல்லூரி—குழித்துறை.
3. கிருத்தவக் கல்லூரி—மார்த்தாண்டம்.
4. ஸ்ரீ ஐயப்பா மகளிர் கல்லூரி—ஆளூர்.
5. ஹோலி கிராஸ் மகளிர் கல்லூரி—நாகர்கோவில்.
6. பயோனியர் குமாரசாமி கல்லூரி—நாகர்கோவில்.
7. தென் திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி—நாகர்கோவில்.
8. ஸ்காட்டு கிருத்தவக் கல்லூரி—நாகர்கோவில்.
9. லட்சுமிபுரம் கலை, விஞ்ஞானக் கல்லூரி—நெய்யூர்.
10. அறிஞர் அண்ணா கல்லூரி—ஆரல்வாய் மொழி.
11. அன்ன விநாயகர் தேவஸ்தானம் கல்லூரி—கணபதிபுரம்.
12. ஸ்ரீதர் இந்துக் கல்லூரி—தாத்தூர்.
13. தி.என்.வி.கே.எஸ். ஆசிரியர் கல்லூரி—ஆத்தூர் மார்த்தாண்டம்.

இந்தக் கல்லூரிகளில் ஆரல்வாய் மொழியிலுள்ள அறிஞர் அண்ணா கல்லூரி, கணபதிபுரத்திலுள்ள அன்ன விநாயகர் தேவஸ்தானம் கல்லூரி, ஆளூரிலுள்ள ஸ்ரீ ஐயப்பா மகளிர் கல்லூரி, தாத்தூரிலுள்ள ஸ்ரீதர் இந்துக் கல்லூரி முதலியன 1967-ஆம் ஆண்டுக்குப் பின்னர் தொடங்கப்பட்ட கல்லூரிகள்.

# கேளுங்கள் கொடுக்கப்படும்!

வினா : எங்களுக்கு 6 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் 3 ஏக்கரில் தண்ணீர் பாயும். மொத்தத்தில் 1,500 ரூபாய்க்காக நாங்கள் விவசாயம் செய்ய முடியாமல் இருக்கிறோம். கடன் வாங்கிக் கட்ட முடியாமல் நவிக்கிறோம். ஏழைகளின் அரசு உதவி செய்வதாக அறிந்தோம். நாங்கள் பிழைக்கவும், விவசாயம் செய்யவும், கடன் அடைக்கவும் வழி சொல்லுங்கள். பண வசதியில்லை. சாப்பாட்டிற்குக் கூட வசதியில்லாமல் ஊர் ஊராய் அலைகிறோம். தமிழரின் அரசு ஆவன செய்யும்படித் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

—எம். ஈஸ்வரன்,
வெல்பேக் எஸ்டேட்,
லவ்டேல் அஞ்சல்,
நீலகிரி மாவட்டம்.

விடை : தங்களுக்கு 6 ஏக்கர் நிலமிருப்பதாகவும், அதில் 3 ஏக்கரில் தண்ணீர் பாயும் என்றும் கூறியுள்ளீர்கள். மானாவாரி நிலம் 3 ஏக்கரிலும், ஜுன்-ஜுலை மாதங்களில் டி.எம்.வி. 2 அல்லது டி.எம்.வி. 10 மணிலா பயிரிடலாம். அதன் பின் அக்டோபர் மாதத்தில் எச்.பி. 3 கம்பு விதைக்கலாம். எச்.பி. 3 கம்பு விதைத்தாலே ஏக்கருக்குக் குறைந்தது 400 ரூபாய் நிகர இலாபம் 3 மாதத்தில் கிடைக்கும். தண்ணீர் வசதியுள்ள 3 ஏக்கரிலும் பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில் சி.எஸ்.எச். 1 சோளம் அல்லது எச்.பி. 1 கம்பு அல்லது டி.எம்.வி. 7 மணிலா பயிரிட்டு அதன் அறுவடை முடிந்து ஐ.ஆர். 8, கருணை போன்ற நெல் ரகங்களைப் பயிரிட்டு, அறுவடைக்குப் பின் மீண்டும் ஐ.ஆர். 20, ஐ.ஆர். 22 நெல் ரகங்களைப் பயிரிடலாம். முன் கூட்டியே திட்டமிட்டு நாற்று விட்டு நெல் ரகங்களை நடவு செய்தால், மேற்கூறிய முறையில் தண்ணீர் வசதியுள்ள நிலத்தில் ஒரே ஆண்டில் 3 பயிர் செய்யலாம். இவ்வாறு செய்தால், ஒரே ஆண்டில் உங்களுடைய கடனை யெல்லாம் அடைத்து விட்டு, குறைந்தது ரூபாய் 2,000 மிதப்படுத்தலாம். சாகுபடிச் செலவுக்கான கடன்களைக் கூட்டுறவுச்



சங்கங்கள் மூலமாகவும், தீவிர உரக்கடன் மூலமாகவும் (ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மூலமாகவும்) பெறலாம். உங்களுக்குத்தேவை வேளாண்மையில் ஆர்வமே. அந்த ஆர்வம் இருக்குமானால், 6 ஏக்கரை வைத்துக்கொண்டு பாடுபடாமல் வேறு வேலை தேடி அலைய மாட்டீர்கள். முன்பு வாங்கியுள்ள கடனை அடைப்பதற்காகத் தற்போது கடன் கொடுக்கப்படவில்லை. சாகுபடிச் செலவுக்கும், கிணறு வெட்டுதல், பம்புசெட் வைத்தல் போன்றவைகளுக்கும், நிலவள வங்கிகள் கடன் கொடுத்து உதவுகின்றன முயற்சி செய்யுங்கள். நிலத்தில் சற்று கடுமையாக உழைத்தால் முன்னேறலாம்.

வினா : நான் பட்டப்படிப்புப் படித்த மாணவன். வேளாண்மைத் தொழில் செய்வதில் மிகவும் ஆர்வமும், அக்கறையும் உடையவன். எனினும், வேளாண்மைத் தொழில் செய்ய நிலமும் மேற்கொண்டு படிக்கப் பணமும் இல்லாது தவிக்கும் எளியவன். எனவே, வேளாண்மைத் தொழிலில் ஈடுபட விரும்பும் யான் என்ன செய்ய வேண்டும்?

—எ. மாசிலாமணி,
பொன்னம்பலம் கிராமம்.

விடை : தங்களுக்கு நிலமும், மேற்படிப்புப் படிக்கப் பணமும் வேண்டும் என்று கேட்பது போல் இருக்கிறது தங்கள் கேள்வி. பணம் கிடைத்தால் மேற்படிப்புக்குத்தான் போக நினைப்பீர்களே ஒழிய, நிலத்தில் பாடுபட நினைப்பீர்களா என்பது ஐயத்திற்குரியதே. எனவே, முதலில் நிலம் பெற முயற்சி செய்து அதில் பாடுபட்டுச் சம்பாதித்துக்கொண்டு பின்பு வேண்டுமானால் மேற்படிப்புக்குச் செல்லுங்கள். அதுவே நல்லது. உங்களுக்கு நிலப்பட்டா கொடுக்கும்படி உங்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு மனு அனுப்புங்கள். நிலப்பட்டா கிடைப்பதற்குள் நீங்களே வாரம் அல்லது குத்தகைக்கு நிலம் பிடித்துச் சாகுபடி செய்யலாம். வீட்டுத் தோட்டமிருப்பின் காய்கறி பயிர் செய்துகூட நல்ல வருவாய் ஈட்ட



லாம். பல பட்டதாரிகள் காய்கறித் தோட்டம் வைத்தே முன்னேறியுள்ளனர் என்பது உண்மை. அண்மையில் கல்கத்தாவில் ஒரு பட்டதாரி ஒரு ஹெக்டேரில் காய்கறி பயிரிட்டு ரூபாய் 5,000 இலாபம் எடுத்ததாகவும், அதனால் இனிமேல் வேலை தேடும் முயற்சியில் ஈடுபடாமல், காய்கறிச் சாகுபடியிலேயே தீவிரக் கவனம் செலுத்தப் போவதாகவும் கூறியிருந்தது நாளேடுகளில் அண்மையில் வெளி வந்துள்ள சுவையான செய்தியாகும். தகர டப்பா, மட்பாண்டங்கள், மரப்பெட்டிகள் ஆகியவற்றில் கூட மண்ணையும், எருவையும் இட்டு நிரப்பிக் காய்கறிச் செடிகளைப் பயிரிடலாம். உங்களுக்கு வேளாண்மையில் ஆர்வமிருப்பின் உடனடியாகக் குத்தகைக்குஅல்லது வாரத்திற்கு நிலம்பிடித்துச் சாகுபடி செய்ய முயலுங்கள். புன்செய் நிலத்தில் கூட ஒரே வருடத்தில் இரு பயிர் செய்து பெரும் பயன் பெறலாம். நிலப்பட்டா கிடைத்த பின்பு நீங்களே சொந்தச் சாகுபடியில் ஈடுபடலாம். 'முயற்சி திருவினை ஆக்கும்' என்பதை மறந்துவிடாதீர்கள்.

**வினா :** நான் இலங்கையில் இருந்து நாடு கடத்தப்பட்டு, 1956-ல் இந்தியா வந்து சேர்ந்தேன். விவசாயத்திற்கான நிலமில்லாது கஷ்டப்பட்டு, நீலகிரியில் தற்பொழுது எஸ்டேட்டில் வேலை செய்து வருகிறேன். திருச்சி மாவட்டம் வெள்ளனூர் கிராமத்தில் ஏதாவது பட்டா வழங்குவதற்கான நில வசதிகள் இருக்குமா? அப்படியானல் யாரை அணுகவேண்டும்.?

—டி. எஸ். ஜேசுதாஸ்,
கோத்தகிரி,

**விடை :** திருச்சி மாவட்டம் வெள்ளனூர் கிராமத்தில் தங்களுக்குப் பட்டாநிலம் கிடைக்குமா இல்லையா என்பதை, 'தமிழரசு' அலுவலகத்தின் மூலம் தெரிந்து கொள்ள முடியாது. உங்கள் நிலைமையைத் தெரிவித்து, நிலப்பட்டா வேண்டும் என்ற வேண்டுகோளையும் எழுதி, திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்க வேண்டும். வெள்ளனூர் கிராமத்தில் தான் பட்டா வேண்டுமென்று கேட்டால், உங்களுக்குப் பட்டா கொடுக்க அந்த ஊரில் நிலம் இல்லாவிட்டால் என்ன செய்ய முடியும்? எனவே, எந்த ஊரில் பட்டா கிடைத்தாலும் ஏற்றுக் கொண்டு



பாடுபட்டு முன்னேற முயற்சி செய்யுங்கள். நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் மனு அனுப்பிப் பட்டா கேட்கலாம். ஆனல், 2 இடத்திலும் பட்டா கேட்காதீர்கள்!

**வினா :** நான் கிணறு வெட்டி 2 வருடங்கள் ஆகிறது. இதன் தண்ணீரைக் கொண்டு ஒரு மகசூலும் எடுக்கவில்லை. நெற்பயிருக்கு அத்தண்ணீரைப் பாய்ச்சினேன். பயிர் சரியாக வளரவில்லை. மறுவருடம் அந்த நிலத்தில் சோளம் விதைத்தேன். நன்ருக மகசூல் கிடைத்தது. இந்தத் தகவலை நீர் ஆராய்ச்சித் துறை இயக்குநர் அவர்களுக்குத் தெரிவித்தேன். அவர்களிடமிருந்து ஒரு வருடம் ஆகியும் பதில் வரவில்லை. ஆகவே, அவருடைய முகவரி தெரிவிப்பதுடன், அவரைக் கலந்து ஆலோசனை கூறுவீர்களா?

—பி. சின்னச்சாமி,
நகர் கிராமம்,
தென்னுர்க்காடு மாவட்டம்.

**விடை :** கிணற்றுத் தண்ணீரைப் பரிசோதனை செய்து பார்த்தால்தான், அதில் உள்ள குறைகள் தெரியும். தண்ணீ



ரைப் பாட்டிலில் அடைத்துப் பரிசோதனைக்கு அனுப்பினீர்களா இல்லையா என்ற விவரத்தைத் தாங்கள் தெரிவிக்கவில்லை. எனவே, தாங்கள் கேட்டுள்ள முகவரி எது என்று எப்படிக் கூற முடியும்? பாசன நீர் பற்றிய விவரம் அறியத் தங்கள் கிணற்று நீரை வேளாண்மைத் துறையின் மண் பரிசோதனை நிலையங்களுக்கே அனுப்ப வேண்டும்.

உங்கள் கிணற்றுத் தண்ணீரை முழு அளவில் இறைக்க முடியாது என்று கூறியுள்ளீர்கள். எனவே, தண்ணீர் இறைக்கும் பம்புசெட் வைத்திருப்பீர்கள் என்று நம்புகின்ருேம். அவ்வாறு அமைத்திருந்தால், சுமார் 15 நிமிடங்களுக்குக் கிணற்றுத் தண்ணீரை இறைத்துவிட்டு, அதன் பின்னர் இறைக்கப்படும் தண்ணீரைக் கொண்டு கண்ணுடி பாட்டிலை நன்கு கழுவி விட்டு சுமார் 250 மில்லி லிட்டர் தண்ணீரைப்பாட்டிலில் நிரப்பி நன்கு மூடி விவரங்களையும் எழுதி வைத்துக் கடலூரில் உள்ள மண் பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். பரிசோதனைக்குப் பிறகு முடிவு உங்களுக்குத் தெரிவிக்கப்படும். அதில் உங்கள் கிணற்றுத் தண்ணீரில் என்ன குறையுள்ளது, அதைப் போக்க என்ன செய்ய வேண்டும், என்னென்ன பயிர்களைச் சாகுபடி செய்யலாம் என்ற விவரங்கள் அடங்கியிருக்கும். அதற்கு ஏற்பப் பயிரிடுவதே நல்லது. கிணற்றுத் தண்ணீரைப் பரிசோதனைக்கு அனுப்ப உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களின் உதவியை நாடுங்கள். ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மூலமே, பரிசோதனைக்குத் தண்ணீரை அனுப்பலாம்.



# நோயை வெல்வோம்!

சமுதாயத்தில் மனிதன் பல போராட்டங்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. அவற்றுள் நோயும் ஒன்று! எத்தனையோ விதமான நோய்கள் அவனைப் பிடித்து ஆட்டிப்படைக்கின்றன. சில வகை நோய்களோ அவனை மரணக்குழியில் தள்ளுகின்றன. இத்தகைய நோய்களுள் இருதய நோயை இங்கே முக்கியமாகக் குறிப்பிடலாம். இதயம்தானே மனித நடமாட்டத்துக்கு மூல காரணம்? அதன் துடிப்பு நின்றுவிட்டால் அதே மனிதனுக்குப் பெயர், பிணம்!

இந்த இதயத்தில் உதயமாகும் செய்கைகள்தாம் எத்தனை! எத்தனை! இந்த இதயம்தான் காதலைப் பொழிகிறது; கட்டுப்பாட்டையும் மீறுகிறது; இந்த இதயம்தான் கருணை காட்டுகிறது; கழுத்தையும் அறுக்கிறது; இந்த இதயம்தான் அமைதியையும் நாடுகிறது; ஆர்ப்பாட்டத்தையும் நடத்துகிறது!

விலை மதிக்க முடியாத இந்த இதயத்துக்கு நாம் என்ன செய்தோம்? இதைக் கவனிக்கிறோமா? இதயத்தில் கைவைத்துச் சொல்லுங்கள்!

நம் உடலை நாம் கவனிக்காததால் எத்தனைக் கோளாறுகள் உண்டாகின்றன? இதோ இருதய நோய், இது எப்படி நம் இதயத்தை இறுக்கி விடுகிறது?

''கரொனரி திராம்போசிஸ்'' அல்லது 'மாரடைப்பு' என்று சொல்லப்படும் நோய் இன்றையச் சமுதாயத்தில் அதிகமாகிக் கொண்டே வருகிறது. நவ நாகரிக வாழ்விற்கு நாம் அளிக்கும் 'காணிக்கை'யாக இது இருந்து வருகிறது.

அமெரிக்காவில் ஆண்டுதோறும் 18 இலட்சம் மக்கள் இந்த நோயினால், தாக்குண்டு மடிகிறார்கள். இந்தியாவில் சுமார் $2\frac{1}{2}$ இலட்சம் மக்களாவது இந்த நோயினால் உயிர் இழக்கிறார்கள். சென்னை நகரை எடுத்துக்கொண்டால் குறைந்தது 20 பேரிலிருந்து 25 பேராவது இதனால் நாள்தோறும் இறக்கிறார்கள்.

இந்த கொடிய நோயின் காரணம் என்ன? இருதயத்திற்கு இரத்தத்தைக் கொண்டு செல்லும் தமனிகளில் அடைப்பு ஏற்படுவதால் இந்த நோய் ஏற்படுகிறது.

இதைத் தடுக்க முடியுமா?

1. அதிகமாகப் புகைப் பிடித்தல், 2. பெருந்தீனி தின்னல், 3. உட்கார்ந்த இடத்திலேயே அத்தனை அலுவல்களையும் பார்க்கும் வேலை அமைப்பு. 4. அதிகமான மனச்சங்கடங்கள். 5. கட்டுப்படாத நீரிழிவு, இரத்த அழுத்தம், உடற்பெருக்கு போன்ற நோய்கள்.

இவைகளைத் தவிர்த்தால் இந்த நோயையும் தவிர்க்கலாம்.

10 ஆண்டுகளுக்கு முன்னால் இந்த நோயாளிகளில் 40 சதவீதம் இறந்தனர். அதுவும் நோய் தாக்கப்பட்டு 4 அல்லது 5 நாட்களில். ஆனால், இன்று அது 15 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம், தீவிர இருதய நோய் கவனிப்பு முறையாகும்.

இம்முறையில் இந்த நோயினால் ஏற்படும் சிக்கல்களை எதிர்பார்த்து அதைத் தவிர்த்து அவைகளால் நோயாளிகள் மாண்டு போகாமல் காப்பாற்றுவதுதான் முக்கிய அம்சமாகும்.

இருதய அடைப்புடன் நோயாளி வந்தவுடன், தீவிர இருதய நோய்க் கவனிப்புப் பகுதியில் சேர்க்கப்படுவார். அங்கு வேலையிலிருக்கும் செவிலியரும், மருத்துவர்களும் மிக நுட்பமான கருவிகள் கொண்டு, அந்த நோயாளியின் இருதய ஓட்டத்தை 24 மணி நேரமும் கவனித்து வருகிறார்கள். ஏதாவது சிக்கல்கள் ஏற்பட்டால் உடனே அந்தக் கருவிகள் தெரிவிக்கும். அடுத்த வினாடியில் வேண்டிய சிகிச்சை அளிக்கப்படும்.



இதில் தேர்ச்சி பெற்ற செவிலியர்தாம் இரவும் பகலும் அந்த நோயாளிகளின் அருகில் இருப்பார்கள். இந்தச் செவிலியர், மருத்துவர் குழுதான் இந்த நோயாளிகளைக் காக்கும் பணியில் முக்கியமானவர்கள். இவர்களால்தான் இறப்பு சதவீதம் 15 ஆகக் குறைத்துக் கொண்டுவரப்பட்டது.

இம்மாதிரியான அமைப்பினைத் தமிழ்நாடு அரசு, சென்னை பொது மருத்துவமனையில் ரூபாய் 5 இலட்சம் செலவில்

அமைந்துள்ளது. 6 நோயாளிகளை ஒரே சமயத்தில் கவனிக்க இதில் வசதி உள்ளது. மிக நவீனமான கருவிகள் இந்தப் பகுதியில் உள்ளன.

இதைத் தவிர தீவிர இருதய கவனிப்பு அமைப்புப் பொருத்தப்பட்ட ஒரு நடமாடும் வண்டியை டி. வி. எஸ். திருவலமும், சென்னை ரோட்டரி சங்கமும் அன்பளிப்பாகக் கொடுக்க முன் வந்திருக்கிறது. இந்த வண்டி மூலம் நகரில் எப்பகுதியில் இருக்கும் மாரடைப்பு நோயாளியையும் உடனே அணுகி வேண்டிய சிகிச்சை அளித்து, மருத்துவ மனையில் இருக்கும் தீவிர இருதய நோய் கவனிப்பு அமைப்பிற்குக் கொண்டுவந்து விடலாம்.

மனிதனுக்கு வரும் கொடிய நோய்களில் இதுவும் ஒன்று. தக்க சமயத்தில் தக்க சிகிச்சை செய்து கொண்டால் முழுக் குணம் பெறலாம்.

நமக்குச் சக்தி அளிப்பது உணவு; உணவிலுள்ள மாவுச் சத்து, புரதச் சத்து, கொழுப்புச் சத்து, தாதுச்சத்து வைட்டமின் உயிர்ச் சத்து முதலிய சத்துக்கள் நம் உடலுக்குச் சக்தி அளித்து இயங்குகின்றன.

உணவுச் சத்துக்களில், குறிப்பாக மாவுச் சத்து ''குளுகோஸ்' எனப்படும் சர்க்கரைப் பொருளாக மாறி உடல் நுண்ணறைகளில் புகுந்து எரிபொருளாகிச் சக்தி அளிக்கிறது. மிகுதியாக உள்ள ''குளுகோஸ்'' ஈரலில் சேமித்து வைக்கப்படுகிறது.

சிலருக்கு உடலின் நுண்ணறைகளில் 'குளுகோஸ்'' நுழைந்து எரிபொருளாவதில்லை; அதற்கு வேண்டிய 'இன்சுலின்' எனப்படும் சுரப்பிநீர் போதுமான



அளவு சுரப்பதில்லை. அவ்வாறு போதுமான இன்சுலின் உடலில் கிடைக்காத போது சர்க்கரைப் பொருள் இரத்த ஓட்டத்தில் கலக்கிறது; இரத்தத்தில் சர்க்கரை அளவு மிகுதியாகிறது; சிறுநீரகங்கள் அவற்றை ஏற்றுக் கொள்வதில்லை. எனவே, சிறுநீருடன் மிகுதியான சர்க்கரைப் பொருள் வெளியேறுகிறது; இவ்வாறு சிறுநீரில் சர்க்கரைச் சத்து வீணாக வெளியேறும் நிலையில் உள்ளவரே நீரிழிவு நோயாளியாவார்.

நீரிழிவு நோயைப் பின்கண்ட அறிகுறிகள் மூலம் தெரிந்து கொள்ளலாம் :—1. அளவுக்கு மீறிய தாகம், 2. அடிக்கடி சிறுநீர்க் கழித்தல், 3. மிகுதியான சிறுநீர்க் கழித்தல், 4. வேகமாக எடை குறைதல், 5. மிகுதியான பசி 6. மெலிவு, 7. பலவீனம்,



8. சோர்வு, மயக்கம், 9. கட்டிகள் முதலிய தோல் நோய்கள், புண்கள்.

நீரிழிவு நோய் ஆண், பெண் அனைவருக்கும் வரலாம். எல்லா வயதினருக்கும் வரலாம்; ஆனால், முதியவர்களுக்கு மிகுதியாக வரும். இனிப்பு முதலிய தின்பண்டங்களையும், மாவுச் சத்து மிக்க உணவுகளையும் மிகுதியாக உட்கொள்பவர்களுக்கு வரும். எடை மிகுதியாக உள்ளவர்களுக்கும், நோயாளிகளுடன் இரத்தத் தொடர்புடைய உறவினர்களுக்கும் இது வரலாம்.

இதற்கு என்ன செய்ய வேண்டும் ?

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த அதாவது நம் இரத்தத்தில் சர்க்கரைப் பொருள் சம அளவில் சாதாரண நிலையில் இருக்க; உணவுக் கட்டுப் பாடும், உடற்பயிற்சியும்—மிகவும் முக்கிய



மாகும். மேலும், உடலில் ஏற்படும் '' இன்சுலின் '' குறைபாட்டை ஈடுசெய்யும் வகையில் செயற்கை '' இன்சுலின் '' ஊசி மூலம் செலுத்திக் கொள்ளலாம். முறைப்படி ''இன்சுலின்'' செலுத்திக் கொள்வதன் மூலம் நீரிழிவைக் கட்டுப்படுத்தி, இயல்பான வாழ்வு வாழலாம்.

மற்றும் மருத்துவர் கொடுக்கும் மருந்துகளையும் உட்கொள்வது நல்லது. போதை தரும் குடி வகைகளையும், புகைப் பழக்கத்தையும் கைவிடுவது நல்லது.

நீரிழிவு நோய் அறிகுறி தோன்றினால்—உடனே மருத்துவரை அணுகிச் சிறுநீர்ப் பரிசோதனை செய்து கொண்டு உடலுக்குத் தேவைப்படும் '' இன்சுலின் '' அளவை அறிந்து உடலில் செலுத்திக் கொள்ளத் தவறாதீர்!

சிறுநீர் பரிசோதனை, உரிய இரசாயனக் கலவை கொண்டு நீங்களே அடிக்கடி வீட்டில் செய்து பார்த்துக் கொள்ளலாம். மருத்துவரின் யோசனைப்படி நீங்களே '' இன்சுலின் '' ஊசி செலுத்திக் கொள்ளலாம்.

சீரான உணவும், எளிய உடற்பயிற்சியும் நீரிழிவு நோயாளிக்கு நிறைவாழ்வளிக்கும். தேவையானால் தேவையான அளவு '' இன்சுலின் '' செலுத்திக் கொள்ளலாம். '' நீரிழிவு ஏனைய நோய்களைப்போல் உங்களைச் செயலற்றவர்களாக்கி விடாது. எனவே, உரிய உணவும், பழக்கமும், எச்சரிக்கையும் உங்கள் வாழ்வை நிறைவாழ்வாக்கும்.

# கொடுத்துவைத்த குமரி



முக்கடல்கள் கூடியலை ஆடிகவி பாடி
முழுமதியைக் கீழ்த்திசைக்கண் முத்தமிடும் போது
செக்கர்நிற ஞாயிறெனும் வானவனும் மேலைச்
செழுங்கடலில் மறையுமொரு சித்திரநற் காட்சி
ஒக்கவொரு பொழுதினிலே நிகழுகின்ற மாட்சி
உலகிதன்கண் பிறிதெங்கும் காணாத காட்சி
தெக்கணத்தின் வதனமெனத் திகழுகின்ற நாடு
தென்குமரி மாவட்டச் செந்தமிழ்நா டிதே!



மீன்வளமும் கான்வளமும் மிகமலிந்த நாடு
மேற்குமலைத் தொடர்மழையால் மேன்மைபெறு நாடு
தேன்பலவும் மாங்கனியும் தெங்கினொடு வாழை
நிரையெங்கும் கண்குளிரத் திகழுவள நாடு
கூன்பிறையை முடியணிந்து குன்றுநிமிர்ந் தோங்கும்
நன்றந்த சோலைசெறி குமரியெனும் நாடு
மான்பிணையோ டிடிகளிறு கூடிவிளை யாட
மந்தியது கண்டுகிளை தாவுகின்ற நாடு.

இத்திக்கு நம் சிலம்பளித்த சேரனாண்ட நாடு
தென்னவனாம் பாண்டியனின் சிந்தைகவர் நாடு
முத்தமிழின் இலக்கணந்தோல் காப்பியத்தை முன்னாள்
முறைமையொடு மதுரையின்கண் அரங்கேற்றும் போது
எத்திசையும் தமிழ்பரவத் தலைமைகொளும் ஆசான்
இருந்தருளும் அதங்கோட் டைத்தன்னகத்தே கொண்டு
முத்தினொடு பவளமணி திரைக்கரங்கள் வீச
முடிசூடும் மும்மன்னர் ஆண்டதிரு நாடு.

இதமுறுபன் மொழிப்புலவன் எமதப்பாத் துரையை
இடிமழைநேர் 'ஜீவா'வை ஈன்றுவக்கும் நாடு
புதியகவி மலரளித்த புத்தேரித் 'தேவி'
புரட்சிமிகும் சீர்திருத்தக் கருத்துக்கள் சேர்த்துப்
புதுமைபல செய்திட்ட கலைவாணர் மற்றும்
புகழார்ந்த அவதான ஆறுமுகம் வாழ்ந்த
பதியமைந்த வளம்மலிந்த செழுங்குமரி வட்டம்
பாவலராம் சேதுநம்பி தமிழ்வளர்த்த நாடு.

தேக்கினொடு சந்தனமும் நிரைரப்பர்த் தோப்பும்
தேயமெங்கும் வளங்கொழிக்கச் செய்யுமணி நாடு
பாக்கடலும் நுரைமலரைத் திரைக்கரத்தில் ஏந்தி
மலையரசை முத்தமிட்டு மகிழுமெழில் குமரி
பாக்கள்பல பாவாணர் பாடிக்களி கொள்ளப்
பழந்தமிழும் புதுத்தமிழும் பழகுதிரு நாடு
நீக்கமற நஞ்சையொடு புஞ்சைகொஞ்சிக் கூடி
நிலமகட்குப் பச்சையுடை போர்த்திருக்கும் நாடு.

தொல்புவியில் தமிழகமே தொன்மைபெற்ற தென்ன
சொலற்கினிய பஃறுளியும் குமரியும்கொள் நாடு
வில்லினொடு கயல்புலியும் விளங்குதிரு நாடு
வித்தைகளும் தத்துவமும் விரிவடைந்த நாடு
நல்வகையில் கல்லூரி பதின்மூன்று திகழும்
நலங்கனிந்த செழும்பதிகள் நானிலமே வாழ்த்த
கல்வியிலே இந்தியாவில் தலைநிமிர்ந்து நிற்கும்
கன்னியா குமரியெனும் கலைகொழிக்கும் நாடே !

வித்துவான் பா. சொ. லிங்கம்











# குமரிப் பெருமை



கேரள நாட்டிலுள்ள கோவில்களுக்குள் செல்லும் பொழுது ஆண்கள் மேலுடை அணிந்து செல்ல முடியாது. அதுபோன்று குமரி மாவட்டத்திலுள்ள கோவில்களுக்குச் செல்லும் பொழுதும் ஆண்கள் மேலுடை அணிந்து செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் சோழ, பாண்டியரின் ஆட்சியிலே அவ்வப்போது இருந்து வந்தது என்பதற்கு இலக்கிய வரலாற்றுச் சான்றுகள் பல இருக்கின்றன. கோட்டாறான மும்முடிச் சோழபுரம், கோட்டாறான சோழ புரம், தேரான அழகிய சோழ நல்லூர், சுசீந்திரமான சோழ பாண்டிய சதுர்வேதிமங்கலம், சுசீந்திரமான சுந்தரசோழ சதுர்வேதி மங்கலம், போன்றவை இதற்கு எடுத்துக்காட்டுக்களாகும்.



‘நாஞ்சில் அல்லது படையும் அறியார்’ என்னும் புறநானூற்றடி குமரி மாவட்டத்திலுள்ள தோவாளை, அகத்தீசுவரம் ஒன்றியப் பகுதிகளைக் காணும்போது நம் நினைவுக்கு வரும்; நாஞ்சில் என்பது கலப்பை-ஏர் எனும் பொருள்படும்; நாஞ்சில் நாட்டில் பார்க்குமிடமெல்லாம் நீக்கமறப் பச்சைப் பசேலென விளங்கும் நஞ்சைப் பயிரைக் காணலாம்; இயற்கையன்னை பச்சைப் பட்டுப் போர்த்து மிளிருவதுபோல இந்நாடு பொலியும்.

இந்நாட்டை நாஞ்சில் வள்ளுவன் என்பான் ஆண்டான். இவன் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்தவன்; புறநானூற்றுப் புலவர்களாகிய மருதன் இளநாகனார், ஔவையார், கருவூர்க் கதப்பிள்ளை ஒருசிறைப் பெரியனார் போன்ற புலவர்களால் பாடப்பெற்றவன். ‘நாஞ்சில் பொருநன்,’ எனவும் இவன் போற்றப்படுகிறான்; இவன் நாடு நானில வளம் பெற்றது; இவனது நாட்டில் நீலமணி போன்ற ஆறுகள் பொன்னிறமுடைய வேங்கைப் பூக்களைத் தாங்கிக் கருங்கடல் நோக்கிப் பாய்ந்து செல்லும்; கயங்களில் விழுந்த வித்துக்கள் கரும்பு போல் செழித்து ஓங்கி வளரும்; கொடிய கோடையிலும் மங்கையர் கண்கள் போலக் குவளை மலர்கள் பூக்கும் பள்ளமான இடங்கள் நிறைந்தது எனக் கூறப்படுகிறது.



கன்னியாகுமரி மாவட்டத்தே பாயும் ஆறுகளில் ஒன்று பழையாறு;

‘பஃறுளியாற்று மணலினும் பலவே,’

எனப் புறநானூற்றில் குறிக்கப்படும் பஃறுளியாறே பழையாறென மருவிற்றென அறிஞர்கள் கருதுகின்றனர்.

‘பஃறுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள,’ என்பது சிலப்பதிகாரம்.

இவ்வாறு மலையில் தோன்றி, கோட்டாறு, சுசீந்திரம் முதலிய ஊர்களின் வழியாகத் தெற்கு நோக்கிப் பாய்ந்து கன்னியாகுமரிக்குச் சற்றுத் தொலைவில் உள்ள மணக்குடிக் காயலில் கலக்கிறது.








நாகர்கோவிலில் பெரும்பாலான கடைகளுக்கு வெள்ளிக்கிழமைதான் விடுமுறை. ஞாயிற்றுக்கிழமை கடை வீதிக்குச் சென்று எல்லாப் பொருள்களையும் வாங்கலாம்.



குமரி மாவட்டத்து நாஞ்சில் நாட்டை ஆண்டவருள் நாஞ்சில் வள்ளுவனும் ஒருவனாவான். இவனது வரையா வண்மைபற்றி ஔவையார் அழகுறக் கூறுகிறார்:

" ஆக்கிய கீரைமீது தூற்றுவதற்கு அரிசி தர வேண்டினேம்; அவனோ குன்றுகள் போன்ற யானைகளை எங்களுக்கு வழங்கிவிட்டான்; கொடை மடம்படும் அவன் தன்மையை என்னவென்று கூறுவேன் " எனப் பாடுகிறார் ஔவையார்.



ஏரோத்தோதஸ் என்பார் பெரிப்ளஸ் என்னும் பயண நூல் எழுதியவர்; அவர் தம் அரிய நூலில் "குமரி எனப்படும் இடம் இதற்கப்பால் உள்ளது. அங்கே குமரிமுனையும், துறைமுகமும் உள்ளன; தமது இறுதி நாட்களைக் கழிக்க எண்ணுவோர் பலர் இங்கு வருகின்றனர்; மேலும் அலைகடலில் நீராடவும், புலன்களை அடக்கி வாழவும் இங்குப் பலர் வருகின்றனர்; மங்கையரும் இதன் பொருட்டு இங்கு வருகின்றனர் " எனக் குறிப்பிட்டுள்ளார்.

# குமரிப் பெருமை





திருக்குறளில் கல்வி, கல்லாமை, 'கேள்வி' என அதிகாரங்கள் காணப்படுகின்றன. நாஞ்சில் நாட்டில் 'கேள்வி' என்று சில அலுவலகங்கள் உள்ளன. பழங்காலத்தில் மன்னவர்கள் மக்கள் குறைகளை நேரிலே கேட்டு நீக்கும் இடங்கள் 'கேள்வி' என அழைக்கப்பட்டன. இப்போது இவை 'கேள்விக் கச்சேரி' எனச் சொல்லப்பட்டு நிலவரி செலுத்தும் இடங்களாக மாறியுள்ளன.

தமிழ்நாட்டில் தற்பொழுது ரப்பர் தோட்டங்கள் உள்ள மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டமே!



கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுவரை இரயில் பாதை கிடையாது. மாவட்டத்திலுள்ள எல்லா வழித்தடங்களிலும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளே ஓடுகின்றன. பேருந்து வழித்தடங்கள் நாட்டுடைமை ஆக்கப்படுவதற்கு முன்னர் மாவட்டம் முழுமையும் அரசுப் போக்குவரத்துப் பேருந்துகள் ஓடிய மாவட்டம் குமரி மாவட்டம்தான்!



குமரி மாவட்டத்திலுள்ள தாடகை மலைச் சரிவிலும் குறத்தியறை என்னும் ஊரிலும் ஔவையாருக்கு ஆலயங்கள் உள்ளன. அன்றியும் வட்டெழுத்தில் ஒரு கல்வெட்டும், சில சிலைகளும் குறவன் தட்டுவிளையில் இருக்கின்றன. இவ்வூரின் வடபாலுள்ள பாறையில், பாறையைக் குடைந்து ஆக்கப்பட்ட சிறியதோர் ஆலயமும் உள்ளது. அதனுள்ளே ஔவையாரைப் போன்று உருவம் காணப்படுகிறது.







இந்தியாவிலேயே சிறந்த கிராமம் என்று மத்திய அரசு தேர்ந்தெடுத்துள்ள மணவாளக்குறிச்சி, கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்ததேயாகும்.



# உழைப்பால் உயர்ந்த லிங்கன்

"அண்ணா! அண்ணா! இங்கே காந்தி, அண்ணா, நேரு, கென்னடி படம் எல்லாம் மாட்டியிருக்கின்றன. இப்போது புதிதாக ஒரு படத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்களே, இந்தப் படத்திலே இருப்பவர் யாரண்ணா?"

"அவரா, அவர்தான் ஆப்!"

"ஆப்பா? இப்படியும் ஒரு பெயரா?"

"ஆமாம், இவரை ஆப் என்றுதான் வீட்டில் அன்பாக அழைப்பார்கள். இவரது முழுப்பெயர் அபிரகாம் லிங்கன்" என்றான் படத்தைக் காட்டி இளங்கோ.

"ஓகோ! இவர் பெயரை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், இவர் வரலாறுதான் எனக்குத் தெரியவில்லை ... ..." என்றாள் கண்ணகி.

"அதைத்தான் இப்போது சொல்லப் போகிறேனே" என்று இளங்கோ சொன்னதும், கண்ணகி காதைத் தீட்டிக் கொண்டாள்.

"லிங்கன் ஓர் ஏழையின் மகன். தந்தை பெயர் தாமஸ் லிங்கன். தாய், நான்சி ஹாங்க்ஸ். ஒரே ஒரு சகோதரி பெயர் சாரா. லிங்கன் நல்ல உயரம். பார்க்கக் கொஞ்சம் விகாரமாக இருப்பான் ... ..."

"விகாரமாக இருந்தால் அதற்கென்ன அண்ணா? திறமை தானே முக்கியம்!"

"அப்படிச் சொல் கண்ணகி. லிங்கன் சின்னஞ்சிறு வயதிலேயே நல்ல திறமைசாலி. உழைப்பாளி. சோம்பல் என்றால் அவனுக்குப் பிடிக்கவே பிடிக்காது. லிங்கனின் அம்மா நாள்தோறும் பைபிளிலிருந்து குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பாள். நல்ல நினைவுச் சக்தி இருந்ததால் லிங்கன் பைபிளை அநேகமாக மனப்பாடம் செய்து கொண்டு விட்டான்."

"பிள்ளை என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்? ம்... ...மேலே சொல்லுங்கள் அண்ணா"

"லிங்கனுக்கு வயது பத்து இருக்கும். அவனது தாய் நோய்வாய்ப்பட்டு இறந்து போனாள். லிங்கனால் இந்தப் பிரிவைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. ஒவ்வொரு நாளும் அவன், தாயார் புதைக்கப்பட்ட இடத்திற்குச் சென்று அழுது வந்தான். இதிலிருந்து லிங்கனுக்குத் தன் தாயிடத்தில் எவ்வளவு அன்பும், மரியாதையும் இருந்தது என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம்."

"ஆமாம், அண்ணா! அவருக்கு ஒரு சகோதரி இருந்தாளே அவள்தான் லிங்கனுக்கு ஆதரவாக இருந்தாளா?"

"இல்லை. லிங்கனுக்கு வயது இருபது இருக்கும் போது, அவரது சகோதரி சாராவும் இறந்து விட்டாள். இதனால் மேலும் மனமுடைந்து போனார் லிங்கன்."

"ஐயோ, பாவம்! அப்புறம்?"

"லிங்கனுக்குப் புத்தகம் என்றால் கொள்ளை ஆசை!" 'யாத்திரிகர்களின் முன்னேற்றம்' என்ற கதைப் புத்தகத்தைப் அவர் பலமுறை படித்து மனப்பாடமேசெய்து விட்டார்; பென்சமின் பிராங்கலின் போன்ற கதைப் புத்தகங்களை இரவல் வாங்கி வந்து ஆழ்ந்து படித்தார். பிறகு தான் கிணற்றுத் தவளையாக இருந்த லிங்கனுக்கு வெளியுலகம் என்று ஒன்று இருப்பது புலப்பட்டது."

"அப்படியா? பிறகு அவர் எப்படியெல்லாம் வாழ்க்கையில் முன்னேறினார்? அதைச் சொல்லுங்கள் அண்ணா!"

'வாஷிங்டனின் வாழ்க்கை' என்னும் புத்தகத்தைப் படித்த லிங்கனுக்குப் புதுத் தெம்பே ஏற்பட்டது. ஒருநாள் பலத்த மழை பெய்ததில், இரவல் வாங்கி வந்த அந்தப் புத்தகம் நனைந்து போய்விட்டது. லிங்கன் பயந்து கொண்டே அந்தப் புத்தகத்தை உரியவரிடம் கொண்டுபோய்க் கொடுத்தார். பிறகு, நாள் ஒன்றுக்கு இருபத்தைந்து 'சதம்' வீதம் மூன்று நாட்கள் கூலி வேலை செய்து, அத்தொகையைப் புத்தகத்திற்கு இழப்பீடாகக் கொடுத்துவிட்டு, புத்தகத்தை தனதாக்கிக் கொண்டார்!"

"புத்தகம் படிப்பதில் எத்தனை ஆர்வம் பார்த்தீர்களா? இந்தப் பழக்கம் ஒவ்வொருவருக்கும் வரவேண்டும் இல்லையா?"

"ஆமாம், லிங்கன் படிப்பதில் மட்டுமல்ல; பல துறைகளிலும் விருப்பமுள்ளவர். இளம் வயதிலேயே கதைகள் சொல்வதிலும், சொற்பொழிவாற்றுவதிலும் வல்லவராக விளங்கினார். கவிதைகள் எழுதுவதிலும், விளையாட்டுகளிலும் அவர் சிறந்து விளங்கினார். அவர் இளம் வயதில் எவ்வளவோ துன்பங்களையெல்லாம் அனுபவித்திருக்கிறார். அவற்றையெல்லாம் பொறுமையாகச் சமாளித்துக் கொண்டதால்தான் வாழ்க்கையில் படிப்படியாக அவரால் முன்னேற முடிந்தது. வேலை

## நாளையத் தலைமுறை

இல்லையே என்று அவர் சும்மா இருந்ததே இல்லை. எந்த வேலை கிடைத்தாலும் அதைக் கூச்சமில்லாமல் செய்துவந்தார். எல்லாவற்றுக்கும் மேலாக லிங்கன் மிகவும் நேர்மையாளராகத் திகழ்ந்தார் . . . .''

''வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால், நாம் இவர்களைப் போல உழைத்தால்தான் முன்னேற முடியும்! இல்லையா அண்ணா ?''

''ஆமாம் கண்ணகி. உழைத்தால்தான் முன்னுக்கு வர முடியும். லிங்கன் ஒரு பண்டகச் சாலையில் நிருவாகியாக வேலை பார்த்தார். அங்கு வரும் வாடிக்கைக்காரர்களிடம் மிகவும் நாணயமாக நடந்துகொண்டார். ஒரு சமயம், கடைக்கு வந்த ஒரு பெண்மணியிடம், தான் கொடுத்த பொருளுக்கு அதிகமாகப் பணம் வாங்கிவிட்டதைப் பிறகுதான் உணர்ந்தார். உள்மனம் அவரை உறுத்தியது. கடை மூடியதும் இரவு வேளை என்பதையும் தான் பொருட்படுத்தாமல், இரண்டு மூன்று மைல் தூரத்திலுள்ள அந்தப் பெண்மணியின் வீட்டிற்குச் சென்று, அதிகமாக வாங்கிய பணத்தைக் கொடுத்துவிட்டு வந்தார்!''

''இப்படியும் ஒரு மனிதரா ? அபிரகாம் லிங்கனை ஒரு விந்தை மனிதர் என்றே சொல்லலாம்''

''நன்றாகச் சொன்னாய் கண்ணகி. லிங்கன் தன் பேச்சுத் திறமையை வளர்த்துக் கொள்ள விரும்பினார். ஆறு மைல்களுக்கு அப்பாலுள்ள ஓர் ஊரில் இலக்கணப் புத்தகங்கள் விலைக்குக் கிடைக்கும் என்பதை அவர் அறிந்தார். உடனே அவர் கால்நடையாகவே அந்த ஊருக்குச் சென்று, ஒரு புத்தகத்தை வாங்கி வந்தார். இரவில் இந்தப் புத்தகத்தை ஊன்றிப் படிப்பார். அந்தக் காலத்தில் மெழுகு வத்திகளின் விலை அதிகமாக இருந்ததால், அவர் ஒவ்வொரு மெழுகுவத்தியில் ஒவ்வொரு துண்டாகக் கொளுத்தி வைத்துக்கொண்டு படித்தார். இன்னொரு நல்ல பழக்கமும் இவரிடம் இருந்தது . . . .''

''என்ன அது ? பொய் பேசமாட்டாரா?''

''அது மட்டுமல்ல. எந்தப் புத்தகம் கிடைத்தாலும் அதை ஊக்கமுடன் ஆழ்ந்து படிப்பார். அதிலிருந்து குறிப்புகள் எழுதி வைத்துக்கொள்வார். லிங்கன் படிப்பவர் மட்டுமல்ல, படை வீரராகவும் திகழ்ந்தார். ஒரு சமயம் சாக்ஸ் என்னும் இனத்தினரின் தலைவரான பிளாக்ஹாக் மீது போர் தொடுத்திருந்தனர். போரில் குதிக்கும்படி இல்லினாய்ஸ் ஆளுநர் மக்களுக்கு அறிக்கை விடுத்திருந்தார். அமெரிக்காவிலுள்ள நியூசேலத்தில் படை ஒன்று திரட்டப்பட்டது. அதற்கு நேர்மையாளரான லிங்கன் தலைவராக நியமிக்கப்பட்டார்.

''எப்படி இவர் எல்லாவகையிலும் சிறந்தவராக விளங்கினார்?''

''ஊக்கமும் உழைப்பும்தான் காரணம். லிங்கன் அரசியலிலும் ஈடுபட்டுச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதற்கிடையில் அவர் ஒரு வழக்கறிஞராகப் பதிவு செய்து கொள்ளப்பட்டார். தன்னிடம் வந்துள்ளது உண்மையான வழக்கேதான் என்று திருப்தி ஏற்பட்டால்தான் அவர் அந்த வழக்கில் வாதாட ஒப்புக் கொள்வார். லிங்கனின் பேரும் புகழும் நாளுக்கு நாள் எங்கும் பரவியது. அவர் மேலும் உழைத்துக் கொண்டே இருந்தார். ஏராளமான வாக்குகள் பெற்று, அமெரிக்கக் காங்கிரஸ் பேரவைக்கு உறுப்பினராகத் தேர்ந்



தெடுக்கப்பட்டார். அப்போது நாட்டில் நிலவிவந்த அடிமை வழக்கத்தை ஆணித்தரமாகக் கண்டித்தார். அதனை ஒழிக்க அரும்பாடுபட்டார்.''

''ஐயோ, பாவம்! உழைத்து உழைத்து இப்படி ஓடாய்ப் போய் விட்டாரே!'' என்றாள் கண்ணகி, படத்தைச் சுட்டிக் காட்டியவாறே. இளங்கோ மேலும் தொடர்ந்தான்.

''அமெரிக்கக் குடியரசுத்தலைவர் தேர்தலுக்கு லிங்கன் போட்டியிட்டார். போட்டி மிகக் கடுமையாக இருந்தது. இந்தத் தேர்தலில் லிங்கன் போட்டியிடுவதை ஒரு சாரார் எதிர்த்தார்கள். ஒரு சாரார் வரவேற்றார்கள். கடைசியில் லிங்கன் தேர்தலில் மகத்தான வெற்றி பெற்று, அமெரிக்க நாட்டின் தலைவர் ஆனார்; லிங்கனின் உழைப்பு வீணாகவில்லை. அது அவரைக் குடியரசுத் தலைவர் அளவுக்கு உயர்த்திவிட்டது''.

''உழைப்புக்கு என்றாவது ஒருநாள் நிச்சயம் வெற்றி உறுதி என்பதற்கு லிங்கனின் வாழ்வு ஒரு சான்று அல்லவா?''

''ஆமாம், லிங்கன் இரண்டாவது முறையும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது அவர் தன் தாயை மறவாமல், ''நான் இன்று அடைந்துள்ள நிலைமைக்கும், இனி அடையவிரும்பும் நிலைமைக்கும் அடிப்படை என் தெய்வத் தாய்தான் '' என்று குறிப்பிட்டார். இப்படி மக்கள் தொண்டில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட மாபெரும் தலைவர் அபிரகாம் லிங்கன் ஒரு நாடகம் பார்த்துக் கொண்டிருக்கும் போது வெறியன் ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார் . . . .''

''ஐயோ, பாவம்! அவர் நம்மைவிட்டுப் பிரிந்தாலும், அவர் எல்லா நாட்டு மக்கள் உள்ளத்திலும் நீங்காத இடம் பெற்றுவிட்டார். வாழ்க அவர் புகழ்!'' என்று கண்ணகி லிங்கனின் திருவுருவப்படத்தைச் சுவரிலே மாட்டி வணங்கி நின்றாள்.


18
அண்ணன் காட்டிய வழி!
கதை: நம்பியின் தம்பி
படம்: குமார்
முத்து! எல்லாரும் இருக்கீங்க! இப்ப நானாகவே உண்மையைச் சொல்லிடுறேன். முத்துவை ராஜினாமாச் செய்யச் சொன்னது நான்தான்!
இவர் கேட்டுக்கொண்டபடி நானல்லவா சொன்னேன்!
நீங்கள் நினைத்ததையே நானும் நினைத்தேன்! முத்துவிடம் நான் சொன்னதை யாரிடமும் சொல்ல வேண்டாமென்று சொன்னேன். நாம் நினைத்ததற்கு நேர்மாறாக எல்லாம் நடக்க ஆரம்பிச்சுடு
நானும் இந்தத் தவறுகளுக்குக் காரணம்! உடனடியாக இதற்கு முடிவு கட்டணும்
அதனால்தான் முத்துவின் அப்பாவிடம் மறுபடியும் முத்து எல்லாப் பொறுப்புகளையும் வகிக்கச் சம்மதம் கேட்டேன் அவர் மறுத்து விட்டார்!
அண்ணா! எங்களை இப்ப என்ன செய்யச் சொல்றீங்க?
வேலனும் அவன் சிநேகிதர்களும் திருந்தவில்லையே! நான் காட்டிய வழி தவறாகப் போய் விட்டது!
அண்ணா! நீங்கள் காட்டிய வழி நல்லவழி! ஆனால்.. வேலனும் செல்வனும், செந்தாமரையும் குறுக்கு வழியில் போனா நம் தவறாகுமா?
அப்பொழுது ஒருவன் வந்து ஏதோ சொல்கிறான்
என்ன.... விபத்தா?



மருத்துவ மனையில்....
நம்ம திட்டங்கள் எல்லாம் தெரிஞ்சு போகும் இப்படிக் கடையாணியைக் கழட்டி விட்டு எல்லாரையும் ஏத்தி விடுங்க சரி. நேரமாகுது வாங்க போவோம்!
ஆ.....
ஐயோ... அம்மா!
திருவள்ளுவர் மன்ற
தீயவை எண்ணாதே!
தீயவை செய்யாதே!
தன்வினை தன்னைச் சுடும்!


முற்றும்

# ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்) வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

## மின்சார வாரியம்

சாற்றுக் குறிப்பெண்: எஸ். 28

சென்னை நகர ரயில் நிலையங்களிலிருந்தும், பார உந்து வண்டி நிலையங்களிலிருந்தும், சென்னை மின்சார விநியோக அமைப்புப் பண்டக சாலைகளுக்கு 1-4-1972 முதல் 31-3-1973 வரை சாமான்களை ஏற்றிவர மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளி கீழ்க் கையொப்பமிட்டவரால் 22-3-1972 பகல் 12 மணி வரை வரவேற்கப் படுகிறது. மூடி முத்திரையிட்ட உறையின்மேல் "சென்னை மின்சார விநியோக அமைப்புப் பண்டகசாலைகளுக்கு 1-4-1972 முதல் 31-3-1973 வரை சாமான்களை ஏற்றி வர ஒப்பந்தப் புள்ளி," என்று எழுதி அனுப்பவேண்டும். வரப் பெற்ற ஒப்பந்தப் புள்ளி உறைகள் 22-3-1972 மாலை 3-மணி அளவில் திறக்கப்படும். குறிப்பிட்டத் தேதி நேரம் கடந்து வரும் ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

குறிப்பிடுகை மற்றும் ஒப்பந்தப் புள்ளி நகல் வேண்டுவோர், பிரதி ஒன்றுக்கு ரூபாய் ஐந்து மட்டும் (ரூ. 5) அக்கௌண்ட்ஸ் ஆபீஸர், சென்னை மின்சார விநியோக அமைப்பு, 155, அண்ணாசாலை, சென்னை-2 என்ற முகவரிக்கு ரொக்கமாகவோ பண அஞ்சல் மூலமாகவோ அல்லது டிமாண்டு டிராப்ட்டாகவோ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். மேற்படித் தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்பட மாட்டாது. அஞ்சலில் ஒப்பந்தப் புள்ளிகள் தவற நேரிட்டாலோ அல்லது கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டாலோ, அதற்கு மின்சார வாரியம் எந்த விதத்திலும் பொறுப்பாகாது. ஒப்பந்தப் புள்ளி நகல் சாதாரண அஞ்சலில் தான் அனுப்பப்படும். கட்டுத் தொகை (Earnest Money Deposit) ரூ. 500 (ரூபாய் ஐந்நூறு மட்டும்) மேலே குறிப்பிட்டுள்ள அக்கௌண்ட்ஸ் ஆபீஸரிடம் ரொக்கமாகச் செலுத்திப் பெற்ற ரசீதோ அல்லது அந்தத் தொகைக்கு டிமாண்டு டிராப்ட்டோ ஒப்பந்தப் புள்ளியுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். கட்டுத் தொகை செலுத்திய ரசீதோ அல்லது டிராப்ட் இல்லாமல் வரும் ஒப்பந்தப் புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ எவ்விதக் காரணமும் காட்டாமல் நிராகரிக்க உரிமை பெற்றவராவார்.

மேற்பார்வை மின்பொறியாளர்,

155, அண்ணாசாலை, சென்னை-2. சென்னை மின்சார விநியோக அமைப்பு.

(த. 56)

---

## பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணாசாலை, சென்னை-2

தலைவர், பல்லவா போக்குவரத்துக் கழகம் சார்பில், கட்டடப் பொறியாளரால் , வரும் மூன்று வருடத்திற்கு பல்லவா போக்குவரத்துக் கழகம், கீழ்க்கண்ட பணிமனைகளில் கடைகள் குத்தகைக்கு விடப்படும்.

கடை நம்பர்—2—மந்தவெளி பேருந்து நிலையம்—பலசரக்கு வியாபாரம்.

கடை நம்பர்—3—பெரம்பூர் பேருந்துநிலையம்—துணிவகை ரகங்கள் விற்பது.

முத்திரையிடப்பட்ட உறைகளில், கட்டடப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணாசாலை, சென்னை-2, அவர்களால் ஒப்பந்தப் புள்ளிகள் 30—3—1972 மாலை 3 மணி வரை வரவேற்கப் படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் 30—3—1972 மாலை 3—15 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளி விதி முறைகள் கட்டடப் பொறியாளர் அலுவலகத்தில் எல்லா வேலை நேரங்களிலும் ரூ. 1-04 கட்டிப் பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் இப்பணம் திருப்பித் தரமாட்டாது.

நிருவாக இயக்குநர்.

(த. 45)

---

## சேலம் வீட்டு வசதிப் பிரிவு (தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கிளை)

எண்: 2/71-72.

3. ஒப்பந்தம் குறித்த நிபந்தனைகளும், ஒப்பந்தப் பத்திரங்களும், மேலாளர் நிருவாகப் பொறியாளர் அலுவலகம், உடுமலைக் கோட்டம், உடுமலை அவர்களிடம் இருந்து நேரிலோ, அல்லது தபால் மூலமாகவோ வேலை நாட்களில், அலுவலக நேரத்திற்குள் 28—2—1972 முதல், 28—3—1972 வரை, எழுத்து மூலமாக விண்ணப்பித்து அதனுடன் ஒப்பந்தப் புள்ளிப், பத்திரங்களின் விலைக்காக ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 5 (எக்காரணம் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது) அரசுக் கருவூலத்திலோ அல்லது ரிசர்வ் பாங்கியிலோ "P. W. Remittances III-Other Remittances" என்ற தலைப்பில் நிருவாக பொறியாளர், உடுமலைக் கோட்டம், உடுமலை, அவர்கள் கணக்கிலும், ஒவ்வொரு வேலைக்கான ஒப்பந்தப் பத்திரங்களுக்கும் விற்பனை வரி சார்சார்ஜ் உட்பட ரூ. 0·18-ஐ "XII Sales Tax (b) receipts under Sales Tax Act, General Sales Tax" என்ற தலைப்பிலும் செலுத்தி சலான்கள் அனுப்பி, பெற்றுக் கொள்ளலாம்.

28—3—1972-க்குப் பின் வரப் பெற்ற ஒப்பந்தப் பத்திரங்களுக்கான விண்ணப்பம் பொதுவாக கவனிக்கப்படமாட்டாது.

4. கூடுதலான தகவல்கள் ஏதும் தேவையெனில், இவ்வலுவலகத்தில் வேலை நாட்களில், வேலை நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
ப.ஆ.தி. கால்வாய் வட்டம்,
பொள்ளாச்சி.

(த. 16)

## தூத்துக்குடி நகராட்சி

கீழ்க்கண்ட வேலைகளுக்கு மூடிமுத்திரையிட்ட தனித்தனியான ஒப்பந்தப்புள்ளிகள் 29-3-1972 அன்று மாலை 4 மணி வரை ஆணையரின் நேர்முக உதவியாளரால் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலை 4.30 மணிக்குத திறக்கப்படும். மற்ற விவரங்களுக்குப் பொறியாளர் அவர்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

| | முன்வைப்புத் தொகை, ரூபாய். |
|---|---|
| 1. ஜெயராஜ் ரோட்டில் புதிதாக ஆர்ஜிதம் செய்த பகுதியை விரிவு படுத்தும் வேலை .. | 300 |
| 2. எஸ். எஸ். பிள்ளை தெரு சந்தையில் கக்கூஸ் கட்டும் வேலை .. | 125 |

கே. என். கிருஷ்ணமூர்த்தி,
பொறியாளர்.

(த.2)

## பொதுப்பணித் துறை

வேலையின் பெயர்—கட்டடங்கள்—வடார்க்காடு மாவட்டம்—வாலாஜா பேட்டை அறிஞர் அண்ணா அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கான, முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறுவதற்குரிய கடைசித் தேதி 22—3—1972 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. 22—3—1972 மாலை 3-00 மணி வரை ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதே நாள் மாலை 3-15 மணி அளவில் அவைகள் திறக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் 7—3—1972 முதல் 20—3—1972 வரை அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

மற்ற நிபந்தனைகளில் மாற்றம் ஏதுமில்லை.

கே. எஸ். இராமசுவாமி,
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்டம்,
வேலூர்.

(த.35)

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியத்திற்காகவும், அதன்சார்பிலும் கீழ் காணும் வேலைக்கென ஒப்பந்தப்புள்ளிகள் முத்திரையிடப்பட்ட உறையில் எண் 17 சர் பி. டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடுகுடிநீர் வடிகால் வாரியசெயல் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால், 22-3-1972 பிற்பகல் 3.00 மணிவரைபெற்றுக்கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வை பொறியாளராலோ அல்லது அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும்.

வேலையின் பெயர்:—இரும்பு வால்வுகள் வழங்குதல் சம்பந்தமாக.
ஒப்பந்த வகை:—மொத்த தொகை.
முன்வைப்புத் தொகை:—ரூ. 600 (ரூபாய் அறுநூறு மட்டும்).

இத்தொகை, கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் மதுரை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கோட்ட நிருவாகப் பொறியாளர் பெறும் வகையில் செலுத்தப்பட்டு அதற்கான அத்தாட்சிஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப் படட வேண்டும்.

வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு—மூன்று மாதங்கள்.
ஒப்பந்தப் படிவங்களின் விலை—ரூ. 5.18 (விற்பனை வரி உட்பட).

ஒப்பந்தப் படிவங்கள் வேண்டுவோர் மதுரை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயல் கோட்ட நிருவாகப் பொறியாளரிடமிருந்து, 14, ராமமூர்த்தி ரோடு, சின்ன சொக்கிகுளம், மதுரை என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 17-3-1972 மாலை 5 மணி வரையில் ஒப்பந்தப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்

மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரியம், செயல் வட்டம், மதுரை-2.

(த.3)

## பொதுப்பணித்துறை
## ரத்துச் செய்தல்

வேலையின் பெயர் :—வடார்க்காடு மாவட்டம் செங்கத்தில் அரசினர் மருத்துவ மனைக் கட்டடங்கள் கட்டுதல்.

மேற்குறிப்பிட்ட வேலைக்காக அழைக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளி விவர அறிவிப்பு ரத்து செய்யப்படுகின்றது.

கே. எஸ். இராமசுவாமி,
மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து.,
செங்கற்பட்டு-வடார்க்காடு பெருவட்டம், வேலூர்.

(த.14)

## பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணா சாலை சென்னை-2

தலைவர், பல்லவா போக்குவரத்துக் கழகம், அண்ணா சாலை, சென்னை-2 அவர்கள் சார்பில், கட்டடப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம் அவர்களால் வரும் இரண்டு வருடத்திற்கு பல்லவா போக்குவரத்துத் துறையிலுள்ள மத்திய தொழில் பட்டறை, குரோம்பேட்டையிலுள்ளது, சிற்றுண்டிசாலை ஒன்று குத்தகைக்கு விடப்படும். அரக்கு முத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்தப் புள்ளிகள் 31-3-1972 மாலை 3 மணி வரை கட்டடப் பொறியாளரால் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாளில் மாலை 3-15 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளி விதிமுறைகள் கட்டடப் பொறியாளர் அலுவலகத்தில் எல்லா வேலை நாட்களிலும், ரூ. 1·04 கட்டி பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும், இந்தப் பணம் திருப்பித்தரப்பட மாட்டாது.

நிருவாக இயக்குநர்.

(த. 11)

## பொதுப்பணித் துறை
## காவிரி வளர்ச்சிப் பணி வட்டம்

பார்வை எண்: ந.எ. 11610-70-வபி/வ10/நாள் 18-2-1972.

தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித் துறை காவிரி வளர்ச்சி பணி வட்டம், தனி மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரில் இருக்கும் அவரது அலுவலகத்தில் 23-3-1972 மாலை 4-00 மணி வரை கீழ்க் கண்ட வேலைக்கான ஒப்பந்தப் புள்ளி பெற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்தவகை கே. 2.

| வரிசை எண்ணும் வேலையின் விவரமும். | பிணைப் பணம். | ஒப்பந்தப் பத்திரம் | விற்பனை வரி. |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1 கிட்டியனை உப்பனூர் ஆற்றை எல். எஸ். 0 மீ. லிருந்து 2,000 மீ. வரை அபிவிருத்தி செய்தல். | 800 | 10·00 | 0·35 |
| 2 கிட்டியனை உப்பனூர் ஆற்றை எல். எஸ். 2,000 மீ. லிருந்து 4,000 மீட்டர் வரை அபிவிருத்தி செய்தல். | 1,300 | 10·00 | 0·35 |
| 3 கிட்டியனை உப்பனூர் ஆற்றில் எல். எஸ்.7184 மீட்டரில் ஒழுங்கை கட்டுதல். | 4,700 | 10·00 | 0·35 |

1 ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்க ஆரம்பிக்கும் நாள்—7-3-1972.

2 பிணைப்பணம் (EMD) நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித் துறை திட்ட ஆய்வுக்கோட்டம் மாயூரம் அவர்கள் கணக்கில் அரசாங்கக் கருவூலத்தில் ரெவின்யூ டெபாசிட், என்ற தலைப்பில் கட்டப்பட வேண்டும். விவரமான ஒப்பந்த அறிக்கையில் கண்டுள்ள இதர வகைப்படியும் பிணைப்பணம் கட்டலாம்.

3. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசாங்கக் கருவூலத்தில் "பொதுப்பணித்துறை செலுத்துத் தொகை III மற்றைய செலுத்துத் தொகை" என்னும் தலைப்பில் நிருவாகப் பொறியாளர், பொதுப் பணித்துறை, திட்ட ஆய்வுக் கோட்டம், மாயூரம் என்றும் கணக்கில் கட்டப்படவேண்டும்.

4. விற்பனை வரி அரசாங்கக் கருவூலத்தில் XII விற்பனை வரி "பி" பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரி சட்டத்தின் கீழ் "பொது விற்பனை வரி" என்னும் தலைப்பில் செலுத்தப்படவேண்டும்.

5. ஒப்பந்தப் பத்திரங்களுக்கான விண்ணப்பம் 21-3-1972 தேதிக்குள் தனி மேற்பார்வைப் பொறியாளரின் நேர் உதவியாளர் காவிரி வளர்ச்சிப் பணி வட்டம், தஞ்சாவூர் என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும். அதன் பிறகு வரும் விண்ணப்பங்கள் பொதுவாக கவனிக்கப்படமாட்டாது.

அ. சேஷாத்ரி,
தனி மேற்பார்வைப் பொறியாளர்.

(த.9)

## உழவர் பெருமக்களுக்குத் தொண்டு செய்யத் தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகம் அடைந்திருக்கும் புதியதொரு வாய்ப்பு



பூச்சி மருந்து உற்பத்தித் திட்டத்தை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் உயர்திரு **அன்பில் தர்மலிங்கம்** அவர்கள் **17-2-1972-ஆம்** தேதி **துவக்கிவைத்தார்.**

**தமிழ்நாடு வேளாண்மை**
**தொழில் கழகம்**

*சுமார் 10 இலட்சம் ஏக்கருக்காகத் தயாராகும் என்ட்ரின் 20 சதக் கலவையின் முதற் பகுதி விற்பனைக்காக வேளாண்மைத் துறையிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது.*



## மறு ஒப்பந்தப் புள்ளி

### நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை சென்னை வட்டம், சென்னை-5

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை), சென்னை வட்டம், அவர்களால் கீழ்க்கண்ட வேலைக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் கிண்டி, சென்னை-25-ல் உள்ள மேற்படியார் அலுவலகத்தில் 23—3—1972 அன்று மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும், வேலையின் பெயரும். | முன்வைப்புத் தொகை. |
|---|---|
| 1 பூஞ்சேரியிலிருந்து சதுரங்கப்பட்டினம் சூரப்பன் சாலையை இணைக்கும் கிழக்கு கடற்கரை சாலையை (கி.மீ. 0·0 முதல் 8·4 வரை) மேம்பாடு செய்தல் | ரூ. 5,740 |

ஒப்பந்தங்கள் 23—3—1972 அன்றே மாலை 3-15 மணிக்குத் திறக்கப் படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள், நமூனாக்கள், வரை படங்கள் முதலியனவற்றை கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), செங்கை அலுவலகத்தில் விற்பனை வரி உட்பட ரூ. 25·75 செலுத்தி 15—3—1972 முதல் 22—3—1972 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), செங்கை அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலும் "ரெவின்யூ டெபாசிட் " என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை), செங்கை பெயரில் செலுத்தி செல்லுச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

முன்வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதிப் பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான " ரிசர்வ் வங்கி " யின் ஒப்புதலையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

ஜி. ஜார்ஜ்ஜேகப்,

மேற்பார்வைப் பொறியாளர்,
(நெடுஞ்சாலை கிராமப்பணித்துறை)
சென்னை வட்டம்.

(த. 22)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநர் சார்பிலும் அவர் பொருட்டும் தமிழக பொதுப் பணித் துறை தஞ்சை மாவட்ட மேற்பார்வைப் பெறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அன்னாரது அலுவலகத்தில் 29—3—1972 மாலை 3-00 மணி வரை கீழ்க்கண்ட வேலைகளுக்கான முத்திரையிட்ட ஒப்பந்த விவரங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

(1) வேலையின் பெயர்:—நன்டலாற்றிலிருந்து பிரியும் எ. 14 இடியார் கால்வாய் 0/0 கி.மீ. முதல் 7·520 கி.மீ. வரை நவீனப் படுத்துதல்.

(2) ஒப்பந்த வகை.— கே. 2.

(3) வைப்புத் தொகை.—ரூ. 3,000.

(4) ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (அரசினர் கருவூலங்களில் பொதுப்பணித் துறை செலுத்துத் தொகை என்ற தலைப்பின் செயற் பொறியாளர் காவேரிக் கோட்டம், தஞ்சை அவர்களின் கணக்கில் கட்ட வேண்டும்)—ரூ. 20.

(5) விற்பனை வரி (அரசினர் கருவூலங்களில் XII. விற்பனை வரி (பி) பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரி என்ற தலைப்பில் செலுத்த வேண்டும்)—ரூ. 0-70.

(6) ஒப்பந்தப் பத்திரங்கள் கொடுக்க ஆரம்பிக்கும் நாள்— 13—3—1972.

ஆர். வேணுகோபால்,

மேற்பார்வைப் பொறியாளர்,பொ.ப.து.
தஞ்சை வட்டம், தஞ்சாவூர்.

(த. 20.)

## ஒப்பந்தப் புள்ளி

### வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பிலும் மேற்காணும் வேலைக்கென ஒப்பந்தப் புள்ளிகள் முத்திரையிட்ட உறையில், எண் 17, சர்.பி.டி. ராஜன் ரோடு, மதுரை-2 என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு குடி நீர் வடிகால் வாரிய மேற்பார்வை யாளர்கள் அவர்களால் 29—3—1972 பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று பிற்பகல் 3-30 மணிக்கு ஒப்பந்த தாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளராலோ அல்ல அவரால் நியமிக்கப்பட்டவராலோ அவருடைய அலுவலகத்தில் வைத்து திறக்கப்படும்.

| வரிசை எண், வேலையின் பெயர். | ஒப்பந்த வகை. | முன் வைப்புத் தொகை. ரூ. | வேலையினை முடிப்பதற்குரிய கால அளவு. | ஒப்பந்தப் படிவங்களின் விலை. |
|---|---|---|---|---|
| 1 மதுரை வடிகால் திட்டம் சுட்டமண் தனி உறுப்புகள் (S. W. upright and upleft) வழங்குதலும் ஒப்படைத்தலும். | மொத்தத் தொகை. | 1,100 | 6 மாதங்கள். | ரூ. 15·56 |
| 2 திருச்சி வடிகால் திட்டம் சுட்டமண் தனி உறுப்புகள் (S. W. upright and upleft) வழங்குதலும், ஒப்படைதலும். | ஷை | 2,050 | ஷை | ரூ. 15·56 |

முன்வைப்புத் தொகையைக் கருவூலச் செலான், பண உத்தரவுச் சீட்டு அல்லது தேசிய வங்கி உத்தரவாதம் இவற்றில் ஏதாவது ஒரு வடிவில் வரிசை எண் ஒன்றுக்கு, மதுரை நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம்) பெறும் வகையிலும், வரிசை எண் இரண்டிற்கு திருச்சி நிருவாகப் பொறியாளர் (தமிழ்நாடு குடி நீர் வடிகால் வாரியம்) பெறும் வகையிலும் செலுத்தப்பட்டு, அதற்கான அத்தாட்சி ஒப்பந்தப் படிவங்களுடன் இணைக்கப்பட வேண்டும்.

ஒப்பந்த வடிவங்கள் வேண்டுவோர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப் பொறியாளரிடமிருந்து 19, இராமமூர்த்தி சாலை, சின்னசொக்கிகுளம், மதுரை என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் வரிசை எண் ஒன்றுக்கும், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரிய நிர்வாகப் பொறியாளர் பி-15, தில்லை நகர் மெயின்ரோடு, தில்லைநகர், திருச்சி-3 என்ற முகவரியில் உள்ள அவர் அலுவலகத்தில் வரிசை எண் இரண்டிற்கும், அதற்கான மேற்குறித்த விலையினைச் செலுத்தி 23—3—1972 மாலை 5 மணி வரை ஒப்பந்தப் படிவங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,

குடிநீர் வடிகால் வாரியம்,
செயல்வட்டம், மதுரை-2.

(த. 17)

## எழுதுபொருள் அச்சகத் துறை, சென்னை-1.

தமிழ்நாடு அரசினர் எழுதுபொருள் அச்சகத்துறைக்காக "படச் சுருள்" (**Process films**) விற்பனை செய்வதற்கான அரசு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளி எழுதுபொருள் அச்சகத் துறை இயக்குநரால் 31—3—1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். இது சம்பந்தப்பட்ட முழு விவரங்களைத் தேவை உள்ளவர்கள் மேற்படி அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இயக்குநர்.

அரசாங்க எழுது பொருள் அச்சுத்துறை
இயக்குநர் அலுவலகம், சென்னை-1

(த. 7)

## காவிரி வளர்ச்சிப் பணி வட்டம்

பார்வை எண் ந. எ. 11203/70/வபி/வ10 நாள் 18-2-1972.

தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித்துறை, காவிரி வளர்ச்சிப் பணி வட்டம் தனி மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரில் இருக்கும் அவரது அலுவலகத்தில் 24-3-1972 மாலை 4-00 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கான ஒப்பந்தப் புள்ளி பெற்றுக்கொள்ளப்படும்.

ஒப்பந்த வகை கே. 2.

| எண்ணும் வேலையின் விவரமும். | பிணைப்புப் பணம். | ஒப்பந்தப் பத்திரத்தின் விலை. | விற்பனை வரி. |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| மஹிமாலயார் உப்பனூர் வடிகாலை எல். எஸ். 0 மீட்டரிலிருந்து 6,000 மீட்டர் வரையும் கன்னப்ப மூலை வடிகாலையும் சீர்திருத்த வேலை செய்தல் பற்றி. | 7,600 | 10 | 0.35 |

1 ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்க ஆரம்பிக்கும் நாள் 6-3-1972.

2 பிணைப்பணம் EMD நிருவாகப் பொறியாளர், பொதுப்பணித் துறை வடிகால் கோட்டம், திருவாரூர் அவர்கள் கணக்கில் அரசாங்கக் கருவூலத்தில் "ரெவின்யு டெபாசிட்" என்ற தலைப்பில் கட்டப்பட வேண்டும். அல்லது விவரமான ஒப்பந்த அறிக்கையில் கண்டுள்ளபடியும் பிணைப்பணம் கட்டலாம்.

3 ஒப்பந்தப் பத்திரங்களின் விலை அரசாங்கக் கருவூலத்தில் "பொதுப் பணித் துறை—செலுத்தும் தொகை மற்றையச் செலுத்துத் தொகை" என்னும் தலைப்பில் நிருவாகப் பொறியாளர், பொதுப் பணித் துறை, வடிகால் கோட்டம், திருவாரூர் அவர்கள் கணக்கில் செலுத்த வேண்டும்.

4 விற்பனை வரி அரசாங்க கருவூலத்தில் XII-விற்பனை வரி "பி" பற்றுச் சீட்டு மாநில விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் "பொது விற்பனை வரி" தலைப்பில் செலுத்தப்பட வேண்டும்.

5 ஒப்பந்தப் பத்திரங்களுக்கான விண்ணப்பம் 22-3-1972 தேதிக்குள் தனி மேற்பார்வைப் பொறியாளரின் நேர் உதவியாளர், காவிரி வளர்ச்சிப் பணி வட்டம், தஞ்சாவூர் என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். அதன் பிறகு வரும் விண்ணப்பங்கள் பொதுவாகக் கவனிக்கப்பட மாட்டாது.

அ. சேஷாத்ரி,
தனி மேற்பார்வைப் பொறியாளர்,
காவிரி வளர்ச்சிப் பணி வட்டம், தஞ்சாவூர்.

(த. 6)


# ஸ்ரீவில்லிபுத்தூர் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்., A 1601

**தலைமை அலுவலகம்: 12, கீழச் சாத்தாத் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர்.**

தொலைபேசி எண்: 67 — தபால் பெட்டி எண்: 20

ஸ்தாபிதம்: 1942 — தறிகள்: 121

செலுத்தப்பட்ட பங்குத் தொகை ரூ. 2,35,989 — சேம நிதி ரூ. 4,31,078

**குறைந்த விலை! கெட்டிச் சாயம்!! நீடித்த உழைப்பு!!!**

எங்களிடம் 20S 40S 60S 80S 2/40S 2/60S 2/80S 2/100S வேஷ்டி ரகங்களும், கைலி வேஷ்டி, துண்டு, கர்ச்சீப் ரகங்களும், நூல் & ரயான் கலர் பீஸ் சேலை ரகங்களும், மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

எங்கள் சரக்குகள் சென்னை மாநிலக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் எல்லா விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

அ. நாராயணன், உப-தலைவர். — சு. ஆணிமுத்து, செயலாளர். — கோ. பெருமாள், தலைவர்.

டைரக்டர்கள்:

L.S.K. மாரிமுத்து, அ. குருவையா, மா. ஆறுமுகம், நா. கலிசன், ஆ. கைலாசசுந்தரம்.

உறுதிக்கும்
உழைப்பிற்கும்

## செட்டிநாடு
## சிமெண்ட்

எங்கும் கிடைக்கிறது.

தயாரிப்பாளர்கள் :

**செட்டிநாடு சிமெண்ட்
கார்ப்பரேஷன் லிமிடெட்**

8, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1.
தந்தி : 'BESTCEMENT' போன் : 27256
பாக்டரி : புலியூர் (கரூர்), திருச்சி மாவட்டம்.
தந்தி : 'CEMENT' போன் : 144.

## நல்வாழ்த்துக்கள்

**யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்
பிரைவேட் லிமிடெட்**
1/4, சூரியநாராயண செட்டி தெரு
சென்னை-81

உயர்ந்த தரமுள்ள
"கோபுரம்" மார்க்
மைதா, சூஜி
மற்றும்
"கப்பல்" மார்க்
ஆட்டா
கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

தொலைபேசி எண் : 52670 - 52671
52672 - 52673

தந்தி : MONARCH

ஸ்தாபிதம் : 1947

தந்தி : பீவிடெக்ஸ்

போன் : ஆபீஸ் : 21016
காலனி : 24035

**A. 1883, ஸ்ரீ பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்,**

18-19, சின்னக்கடை முத்தையாப் பிள்ளை சந்து (தெற்கு வாசல்), மதுரை-1.

- நவீன ரகம், உறுதியானது
- குறைந்த விலை
- உத்திரவாதமுள்ள சாயம்
- யாவருக்கும் நம்பிக்கையும் திருப்தியும் தருவது

எங்கள்

## கைத்தறி சேலைகள்

நமது சங்கத்தில் சொந்தத்தில் சாயம் போடப்பட்டு, கைதேர்ந்த நெசவாளர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட 80 நிர்., 100 நிர்., நூல் & கோடம்பாக்கம் சேலை தினுசுகள் 5, 6, 7, 8, 9, & 10 கெஜங்களில் கிடைக்கும். மற்றும் எங்கள் தினுசுகள் சென்னை ராஜ்ய எல்லாக் கோவாப்-டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும், கைத்தறி மாளிகைகளிலும், கூட்டுறவுச் சிறப்பு அங்காடிகளிலும் கிடைக்கும்.

டைரக்டர்கள் :
குஜுலுவா. வெ. ரெங்காச்சாரி
ராணி, சு. ஹரிகிருஷ்ணன்
தக்கு. பா. ஜெகந்நாதன்
K. S. கிருஷ்ணமூர்த்தி
T. S. வேதாந்தாச்சாரி

கெஞ்சி ராமலிங்கய்யர்,
தலைவர்.
K. N. ராமமூர்த்தி,
உப-தலைவர்.
C. R. சுந்தரராமன், காரியதரிசி.

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப்பணித் துறை

தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித்துறை தஞ்சாவூர் வட்டம், மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரி லிருக்கும் அவரது அலுவலகத்தில் 29-3-1972 மாலை 3-00 மணி வரை கீழ்க்கண்ட வேலைக்கான முத்திரை காப்புச் செய்யப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் பெற்றுக்கொள்ளப்படும்.

1. வேலையின் பெயர்:—கல்லணைக் கால்வாயின் தலைப்பில் "தூர் வெளியேற்றும் பொறி மதகு" கட்டுதல்.

2. ஒப்பந்த வகை:— கே. 2

3. வைப்புத் தொகை.—ரூ. 10,000.

4. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (அரசாங்கக் கருவூலங்களில் "பொ. பா. செலுத்துத் தொகை III. மற்றைய செலுத்துத் தொகை" என்ற தலைப்பில்-செ. பொ. க. கா. கோட்டம், தஞ்சாவூர்அவர்களின் கணக்கில் கட்டவேண்டும்.—ரூ. 25.

5. விற்பனை வரி அரசாங்கக் கருவூலங்களில் "ஒ XII விற்பனை வரி (பி) பற்றுச் சீட்டு-மாநில விற்பனை வரிச் சட்டத்தின்கீழ். பொது விற்பனை வரி" என்ற தலைப்பில் செலுத்த வேண்டும்.—ரூ. 0.88.

6. ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் காலம்:—13—3—1972 முதல் 28—3—1972 வரை.

ஆர். வேணுகோபால்,
மேற்பார்வைப் பொறியாளர்.
தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர்.

(த. 5)

## ஏல விற்பனை

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் உள்ள உபயோகமுள்ள ஜீப் எம். டி. எம். 2654 வாகனம் 22-3-1972ஆம் தேதி புதன்கிழமை காலை 11 மணிக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியாளர் கூடுதல் தனி உதவியாளர் அவர்களால் அரசினர் விதிமுறைகளின்படி பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏல சம்பந்தமான விவரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவல கத்தில் அலுவலக நேரங்களில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் மோட்டார் வாகனத்தைப் பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

ஆட்சித் தலைவர்,
திருச்சிராப்பள்ளி

(த. 1)

## வேலை வாய்ப்பு

### அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியம்
### தஞ்சாவூர் மாவட்டம்

தஞ்சாவூர் மாவட்டம், அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தின் ஆளுநருக்குட்பட்ட 6 கிராம மருத்துவ மனைகளுக்கு "ஏ" பிரிவு மருத்துவர்கள் நியமனம் செய்யத் தகுதியுடைய "ஏ" வகுப்பு மருத்துவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 21—3—1972-க்குள் அழைக்கப் படுகின்றன.

மாத சம்பளம்—ரூ. 150.

"ஏ" வகுப்பு மருத்துவர் என்பதற்கு சான்றிதழ் உடையவரும் திடமான ஆரோக்கியமும் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

பேட்டிக்கு அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டால் வேலையில் வந்து சேருவதற்கு பிரயாணப்படி ஏதும் இல்லை.

தி. சீனிவாசன், பி. ஏ.,
ஆணையர்,
அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியம்,

(த.29)


தந்தி முகவரி : புளி கோ-ஆப்
நிறுவியது : 19—7—1939

தொலைபேசி எண் : 213
அஞ்சல் பெட்டி எண் : 4

**ஏ. 1364, புளியம்பட்டி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்,**

**அருப்புக்கோட்டை**

**இராமநாதபுர மாவட்டம் (தமிழ்நாடு)**

திறமை மிக்க எங்கள் சங்க மெம்பர்களால் சொந்தக் கைத்தறியில் தயாரித்த சோமன் சேலை, பருத்தி நூல் ரகங்கள், பட்டு நூல் ஸ்டேபிள் ரகங்களும் மிக நேர்த்தியான முறையில் உள்ளன. ஆந்திரா, ஒரிசா, மைசூர் ஆகிய மாநிலங்களில் எங்கள் சங்க ஜவுளிகள் மிகுந்த நற்பெயர் பெற்றுச் சிறப்புடன் விற்பனையாகி வருகிறது. வெளியூர் ஆர்டர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

வித்துவான் சோ. சுந்தரமகாலிங்கம்,
தலைவர்

பி. குமாரபாண்டியன், பி.ஏ.,
கைத்தறி ஆய்வாளர்-காரியதரிசி.




16-3—11a

# நெய்வேலியும்... நமது நாடும்

**நெய்வேலி யூரியா:**
விவசாய, உணவு உற்பத்தியை உயர்த்தும்பொருட்டு உச்சபட்ச (46%) அளவுக்கு நைட்ரொஜன் ஊட்டப்பட்ட உரம் தமிழ் நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்போது விற்பனையாகிறது.

யூரியா: பார்மால்டிஹைட் போன்றவற்றைத் தயாரிக்கத் தேவையான தரமுடைய யூரியாவும் உற்பத்தியாகிறது.

**மின்விசை:**
இந்தியாவின் மிகப்பெரும் அனல்மின்சாரநிலையங்களிலொன்றில் இது உற்பத்தியாகிறது. பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தும் வகையில் கிழ்த்திசையிலேயே இந் நிலையம்தான் முதலாவது.

**சூட்டுக்கெட்டித்த பழுப்பு நிலக்கரி-லீக்கோ**
வீடுகள், ஓட்டல்கள், பலவேறு தொழில்களில் பயன்படுவதற்கு ஏற்ற எரிபொருள். புகையாத இந்தக் கரி சிக்கனமானது, திரம் மிக்கது–தமிழ்நாடு, மைசூர், கேரளம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கிடைக்கிறது.




**தார்ப்பொருள்கள்:**
பல ரசாயன, பிளாஸ்டிக் தொழில்களில் உபயோகிக்கப்படும் கார்பாலிக் அமிலம், ஆர்த்தோ கிரிஸால், மற்றும் எம். பி. கிரிஸால், ஸைலிநூல், பாலிவாலென்ட் ஃபினல் கலவை.

**நெகோலின்:**
சானிடரி சாதனங்கள், பீங்கான் பாண்டங்கள், எந்தச் சக்தி மின்விசையையும் ஏந்தித் தரவல்ல இன்ஸுலேடர்கள் முதலியவற்றை உருவாக்க உதவும் உயர்தரமான வெள்ளைக் களிமண். ஜவுளி, ரப்பர், மருந்துத் தயாரிப்பு, காகிதத் தொழில்களிலும் இது பயன்படுகிறது

**நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட்., நெய்வேலி–1**

FDSNLC946TM


---


# பசுமைப் புரட்சிக்கும் பச்சைச் சீருடைக்கும்...

என்பீல்டு இந்தியாவின் தயாரிப்புகளான வில்லியர்ஸ் என்ஜின்கள் வேளாண்மைத் துறையில் நீர்ப்பாசனத்துக்கும், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைத் தெளிக்கவும் உழவுப் பெருங்குடி மக்களின் உற்ற நண்பனாக உதவுகின்றன.

நாட்டின் எல்லைப் பகுதிகளில் பணிபுரியும் படைவீரர்களுக்கும் மற்றவர்களுக்கும் போக்குவரத்து ஊர்திகளாகப் பணி புரிகின்றன, என்பீல்டு இந்தியாவின் புல்லெட் மற்றும் குருசேடர் மோட்டார் சைக்கிள்கள்.

வேளாண்மை, தொழில், போக்குவரத்து ஆகிய துறைகள் வளம் பெற அரும்பணி ஆற்றும் நிறுவனம் என்பீல்டு இந்தியா.



**தி என்பீல்டு இந்தியா லிமிடெட்**
**சென்னை-19**

FDSEI-1513TM

## ஒப்பந்தப் புள்ளி

### மின்சார வாரியம்

கோதையாறு நீர் மின் திட்டம்

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக கீழே கொடுக்கப்பட்டுள்ள அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகளை அதன் முக உறையின்மேல் எழுதப்பட்டு அவைகளை மேற்பார்வைப் பொறியாளர், கோதையாறு நீர்மின் திட்டம், 34எ, பெருமாள்புரம், திருநெல்வேலி-7, திருநெல்வேலி மாவட்டம் என்று முகவுரை இட்டவரால் அங்கீகரிக்கப்படுவதால் அவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அவர் பிரதிநிதியால் அவருடைய அலுவலகத்தில் கீழ்க்கண்ட வேலைக்கு எதிரில் குறிப்பிட்டுள்ள தேதியில் மாலை 3-00 மணிவரையில் பெற்றுக்கொள்ளப்படும். அவைகள் அதே நாளில் மாலை 4-00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னால் திறக்கப்படும்.

| எண்ணும் வேலையின் பெயரும். | ஒப்பந்தப் பத்திரங்கள் விலை (விற்பனை வரி உட்பட) ரூ. | கட்டுத் தொகை ரூபாய் | ஒப்பந்தப் புள்ளி பெற்றுக் கொள்ளும் கடைசித் தேதி |
|---|---|---|---|
| கே.சி. 298அ—கோதையாறு மேல் தங்கலில் உள்ள சின்னக் குட்டியாறு அணையில் ch740' முதல் 890' வரை அஸ்திவாரத்திற்கு மண் தோண்டுதலும் **(Excavation for Foundation)** பிளாக்கு நெம்பர் VIII-ஆம் IX-ஆம் ch704' முதல் 890' வரை அணைக்கப்பட்டு மேல்தளம்வரை கட்டுமான வேலை **(Building Masonry)** செய்தலும் | 10-35 | 20,000 | 4-4-1972 |

2. ஒப்பந்தப் புள்ளி செட்டுகளின் நகல்களை (மாற்றத்தக்கவை அல்ல) குறிப்பிட்டுள்ள அதன் விலையை கீழே கையொப்பமிட்டவர் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும் இத்தொகைத் திருப்பித் தரப்படமாட்டாது.

3. இவ்வலுவலகத்தின் மனுப் பாரத்தில் இல்லாத ஒப்பந்தப் புள்ளிகளையும் குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு வரும் ஒப்பந்தப் புள்ளிகளையும் கட்டுத் தொகை (**Earnest Money Depost**) ரசீது இணைக்கப்படாத ஒப்பந்தப் புள்ளிகளையும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். கட்டுத் தொகையை கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான ரசீதைப் பெற்று ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் செக்குகள் (**cheques**) ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கட்டுத் தொகைக்கான டிமாண்ட் டிராப்டை (**Demand Draft**) முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் ஒப்பந்தப் புள்ளிகளுடன் அனுப்பக்கூடாது.

4. தாமதமாக அனுப்பப்படும் ஒப்பந்தப் புள்ளிகள் குறிப்பிட்ட நிபந்தனைகள்படி அல்லாத முழுமை பெறாத ஒப்பந்தப் புள்ளிகள், கட்டுத் தொகை கட்டப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் மேற்படி கட்டுத் தொகை கட்டாததின் காரணத்துடனும் வேறு வேலைகளுடன் கட்டுத் தொகை கட்டியதை இணைத்துக்கொள்ளக் கூறப்படும் ஒப்பந்தப் புள்ளிகளும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. மேலே குறிப்பிட்டுள்ள வேலையைக் காரணம் தெரிவிக்காமல் சில அல்லது எல்லா ஒப்பந்ததாரர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கவோ அல்லது ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையுமோ, நிராகரிக்கவோ கீழே கையொப்பமிட்டவருக்கு பூரண உரிமையுண்டு.

6. ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சலில் அனுப்பப்படும் போது இடையில் உண்டாகும் காலதாமதம் அல்லது காணாமல் போவது முதலியவைகளுக்கு இவ்வாரியம் பொறுப்பல்ல.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
**கோதையாறு நீர் மின் திட்டம்.**

(த. 8)

## ஏல விளம்பரம்

### ஆலந்தூர் நகராட்சி

கீழ்க்கண்ட குத்தகைகள் ஆலந்தூர் நகராட்சி ஆணையரால் நகராட்சி அலுவலகத்தில் 1972-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 17-ஆம் தேதி காலை 11-00 மணிக்குப் பகிரங்கமாய் ஏலத்தில் விடப்படும்.

| | பொறுப்புத் தொகை. ரூபாய். |
|---|---|
| 1 ஆடு அறுக்கும் தொட்டி .. .. .. .. | 300 |
| 2 மார்க்கட் சந்திலிருக்கும் நகராட்சிக் கடை ஒன்று .. | 50 |
| 3 நகராட்சி பெட்டிக் கடைகள்—24 .. .. .. | 50 |

**வி. ஆர். வரதராசன்,**
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
ஆலந்தூர்.

(த.30)

## ஒப்பந்தப் புள்ளி

### ஆலந்தூர் நகராட்சி

கீழ்க்கண்ட வேலைகளுக்காகவும் பொருட்கள் வழங்குவதற்கும் தனித் தனியாக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1972-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 17-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை நகராட்சி அலுவலகத்தில் ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 4-30 மணிக்கு ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

| | பொறுப்புத் தொகை. ரூபாய். |
|---|---|
| 1. நகராட்சி மாடுகளுக்கு வைக்கோல் முதலிய தீனிப் பொருட்கள் வழங்குதல். | 2,000 |
| 2. சுகாதார இலாக்காவிற்கு வேண்டிய சுண்ணாம்பு நீர் வழங்குதல். | 200 |
| 3. வண்டி வாகனம் இவைகளுக்கான உரிமையாணை தகடுகள் வழங்குதல். | 25 |
| 4. சுகாதாரப் பிரிவிற்கான சாமான்கள் வழங்குதல் .. | 100 |
| 5. நகராட்சிக்குத் தேவையான பாரங்கள் நோட்டீஸ்கள் அச்சு பைண்டிங் வேலை செய்ய. | 100 |
| 6. அலுவலகத்திற்குத் தேவையான ஸ்டேஷனரி சாமான்கள் வழங்குதல். | 200 |
| 7. நகராட்சி மாடுகளுக்கு லாடம் அடித்தல் .. .. | 25 |
| 8. பொதுப்பணித் துறைக்கு வேண்டிய சாமான்கள் வழங்குதல். | 50 |
| 9. நகராட்சி வண்டிகளை ரிப்பேர் செய்தல் .. .. | 10 |

**வி. ஆர். வரதராசன்,**
ஆணையர்.

நகராட்சி அலுவலகம்,
ஆலந்தூர்,

(த.30அ)

## ஒப்பந்தப் புள்ளி

### சிவகாசி நகராட்சி

கீழ்க் குறிப்பிட்டுள்ள வேலைக்கான மூடி முத்திரையிட்ட ஷெட்யூல் ஒப்பந்தப் புள்ளிகளை நகர் மன்ற ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் 5—4—1972-ஆம் தேதி புதன் கிழமை மாலை 4-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். கிடைக்கப்பெறும் ஒப்பந்தப் புள்ளிகள் அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள் இதர விவரங்கள் அடங்கிய பட்டியலை ரூ. 10-30 நகராட்சிக் கருவூலத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

வேலையின் விவரம்—சர்வே எண். 301/1, பாகத்தில் நகர் மன்றம் கூடமும், பதிவு வைப்பறையும் மதிப்பீட்டில் உள்ளபடி கட்டுதல், மதிப்பீடு—ரூ. 1,60,000 கட்டுத் தொகை, முதல் தவணை—ரூ. 3,500 இரண்டாம் தவணை—ரூ. 3,500.

**எம். அரங்கநாதன், எம். ஏ.**
ஆணையர்,
சிவகாசி நகராட்சி.

(த. 28)

## பயிற்சி

### கல்வி

சென்னை சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரி, சேலம் மாவட்டம் குமாரபாளையம் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, புதுக்கோட்டை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றுள் தமிழாசிரியர் பயிற்சி வகுப்புச் சேர்க்கை பற்றிய விவரங்களடங்கிய அறிக்கை.

1. சைதை ஆசிரியர் கல்லூரி, குமாரபாளையம் அரசினர் பயிற்சிக் கல்லூரி, புதுக்கோட்டை அரசினர் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றுள் தமிழ்ப்புலவர் பயிற்சி வகுப்பிற் சேர ஆடவ மாணவர்களிடமிருந்து (Men Candidates) மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப் படுகின்றன. அவ்வகுப்பு 1972-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் தேதியிலிருந்து தொடங்கும்.

2. பயிற்சிக் காலம் :—ஜூன் திங்கள் முதல் தேதி தொடங்கி அக்டோபர் திங்கள் 31-ஆம் தேதி முடிய ஐந்து திங்களாகும்.

3. சேர்வதற்குரிய தகுதிகள் :—முன்பே மொழியாசிரியராகப் பணியாற்றுமல் விண்ணப்பிப்பவர் உயர்நிலைப் பள்ளி நிறைவு வகுப்புத் தேர்வில் கல்லூரியிற் சேர்வதற்கான தகுதியுடன் வெற்றி பெற்றிருப்பவராகவோ, அதற்கான சான்றிதழ் நிறைவு (Completed) பெற்றவராகவோ இருத்தல் வேண்டும். முன்னரே பணியாற்றி யுள்ள புலவர்களுக்கெனச் சிறப்பான தொரு பொதுக் கல்வித் தகுதி குறிக்கப்பெறவில்லை. ஆனால் அவர்தம் ஆசிரியப்பணி புரிந்த காலமும் பொதுக் கல்வித் தகுதியும் அத்தகையவர்க்கும் பயிற்சிக்கு இடமளித்தல் பற்றிக் கருதப்பெறும். தமிழாசிரியர் பணியில் அமர்த்துவதற்காக அமைக்கப்பெற்றுள்ள தமிழ்நாட்டுக் கல்வி பற்றிய 13-ஆம் விதிகூறும் தகுதிகளையும் விண்ணப்பிப்பவர் மேற்குறித்த தகுதிகளுடன் பெற்றிருத்தல் வேண்டும்.

4. வயது வரையறை :—பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பெறுவதற்கு விண்ணப்பிப்பவர் 1972-ஆம் ஆண்டு ஜூன் 3-ஆம் தேதியில் 45 ஆண்டு நிறைவுக்குமேல் வயதுடையவராய் இருத்தல் கூடாது.

5. பகுதிக்காலப் பணியாளர்கள் சேர்க்கைக்குத் தகுதி பெறுதவராவர்.

6. 1956 டிசம்பர்த் திங்கள் 12-ஆம் தேதியிட்ட டி. எண். 2217 எண்ணுள்ள அரசாணையின்படி, தமிழ்ப்புலவர் பயிற்சி பெறும் அட்டவணைப்படுத்தப்பட்ட வகுப்பு (S. C.) தாழ்த்தப்பட்ட பின்தங்கிய வகுப்பு (B. C.) மாணவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 20 (இருபது ரூபாய்) உதவித் தொகை (தேவையான சான்றிதழ் களைச் சமர்ப்பிப்பதின் பேரில்) வழங்கப்பெறும்.

7. வெளிமாநிலத்திலிருந்து சேர்க்கப்பெறும் புலவர் மாணவர் பயிற்சி முழுமைக்கும் கட்டணமாக ஐம்பது ரூபாய் கட்டவேண்டும்.

8. பயிற்சியின் முடிவில் நடைபெறும் தேர்வில் வெற்றிபெற்ற மாணவர்க்கு அதற்கான சான்றிதழ் ஒன்று வழங்கப்பெறும். கல்லூரி வேலை நாட்களில் 75 சதவிகிதம் வகுப்புக்கு வராத மாணவர்களும், புலவர் பயிற்சி வகுப்புப் பொறுப்புப் பேராசிரியர், கல்லூரி முதல்வர் ஆகியோர் தம் நற்கருத்தையும் உளநிறைவையும், பெறும் வகையில் நடந்து கொள்ளாதவரும் பயிற்சியை முழுமை யாகவும் குறையின்றியும் பெற்றவர்களாகக் கருதப்பெறமாட்டார்கள்.

9. பயிற்சிபெறும் மாணவர்க்குப் பயிற்றும் பயிற்சி உண்டு. அவர்கள் கல்விச் சுற்றுலா, பாசறைப் பயிற்சி முதலியவற்றையும் மேற்கொள்ளல் வேண்டும்.

10. கீழே குறித்துள்ள சான்றிதழ்களின் படிகள் அரசிதழ் பதிவுபெற்ற அலுவலரின் ஒப்புதல் (Attested) செய்யப்பெற்று இத்துடன் இணைத்துள்ள விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்பெற வேண்டும்.

1. பொதுக்கல்வித் தகுதிச் சான்றிதழ்.
2. பள்ளி இறுதிவகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் சான்றிதழ்.
3. இனச்சான்றிதழ் Community Certificate.
4. வித்வான்/பண்டிதம் சான்றிதழ்.
5. பண்டிதம்/வித்வான் படிப்பில் பெற்ற தேர்வுநிலைக்கான சான்றிதழ்.
6. பணிச்சான்றிதழ்.

11. கல்லூரியுடன் இணைந்த மாணவர் இல்லத்தில் இடம் இருப்பின் மாணவரில்லக் காவலரது முடிவின்படி தகுதிக்குரிய மாணவர்கட்கு இடம் வழங்குவது பற்றிக் கருதப்பெறும்.

12. போதிய தபால் தலைகள் ஒட்டப்பட்ட சுய முகவரி எழுதிய உறை ஒன்றை இணைத்தனுப்புவதன் மூலம், விண்ணப்பபடிவத்தை இக்கல்லூரி அலுவலகத்திலிருந்து இலவசமாகப் பெற்றுக்கொள்ள லாம்.

13. 5—4—1972-ஆம் நாள் அல்லது அதற்கு முன்னர் கீழ்க் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டும்

" முதல்வர், சைதை ஆசிரியர் கல்லூரி, சென்னை-15 ".

கே. ஆர். மாணிக்கம்,
முதல்வர், சைதை ஆசிரியர் கல்லூரி.

(த. 65)

## ஒப்பந்தப் புள்ளி

### கதர் கிராமத் தொழில் துறை

கதர் கிராமத் தொழில் துறையின்கீழ் இயங்கும் தையல் அலகு களுக்கு 1972–73-ஆம் ஆண்டுக்குத் தேவையான தையல் பொருட்கள் விநியோகம் செய்ய அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 14—4—1972 பிற்பகல் 5 மணி வரை கீழ்க்கண்ட அலுவலரால் ஏற்கப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், வந்திருக்கும் ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் முன்னிலையில் 15—4—1972 முற்பகல் 11 மணியளவில் திருப்பூரில் கீழ்க்கண்ட அலுவலரால் பிரிக்கப்படும்.

ஒப்பந்தப் புள்ளி சம்பந்தமான இதர விவரங்கள் அடங்கிய பத்திரங்களை ரூ. 5-ம் அதற்கான விற்பனை வரி மற்றும் சர்சார்ஜ் ஆகியவைகளை ரொக்கமாகவோ அல்லது கிராஸ்டு வங்கி வரை வாகவோ செலுத்தி கீழ்க்கண்ட அலுவலரிடம் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

மண்டலத் துணை இயக்குநர்,
கதர் கிராமத் தொழில்கள்,
18, ஜி. அவநாசி ரோடு,
குமாரன் நகர், திருப்பூர்.

(த·63)

## ஏல விளம்பரம்

### வனத்துறை

20—3—1972-ஆம் தேதி காலை 10 மணியிலிருந்து மேட்டுப் பாளையம், அரசினர் மரக்கிடங்கில் மத்திய கோவை மாவட்ட வன அலுவலராலோ அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற அலுவல ராலோ கீழ்க்காணும் தடிமரத் துண்டுகள் ஏலமிடப்படும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. தேக்கு | .. | .. | 509 | — | 254·961 கனமீட்டர். |
| 2. வேங்கை | .. | .. | 26 | | 12·561 ,, |
| 3. கருமருது | .. | .. | 3 | — | 3·673 ,, |
| 4. அயினி | | .. | 7 | | 9·303 ,, |
| 5. அல்பிசு | .. | .. | 32 | — | 12·006 ,, |
| 6. நீர்கடம்பை | | | 4 | — | 1·715 ,, |
| 7. தேக்காங்கள் | | .. | 313 | | |

(i) 30 செ. மீட்டர் கீழ்—86.
(ii) 31 செ. மீட்டரிலிருந்து 45 வரை—19.
(iii) 46 செ. மீட்டரிலிருந்து 60 வரை—81.
(iv) 61 செ. மீட்டரிலிருந்து 90 வரை—127.

மற்ற விவரங்களுக்கு மாவட்ட அலுவலர், மத்திய கோவை, கோவை-18 அல்லது வனச்சரக அலுவலர், அரசினர் மரக்கிடங்கு, மேட்டுப்பாளையத்திற்கோ எழுதிப்பெறவும்.

எம். ஏ. அப்துல் கரீம்,
மாவட்ட வன அலுவலர்,
மத்திய கோவை.

(த. 63)

## அறிக்கை

## மின்சார வாரியம்

சுருளியாறு நீர் மின்சாரத் திட்டம் பற்றிய அறிக்கை

மதுரை மாவட்டத்தில் உத்தமபாளையம் வட்டத்தில் சுருளியாறு நீர் மின்சாரத்திட்டம் என்னும் ஒரு நீர் மின்சாரத் திட்டத்தைச் செயல் படுத்தத் தமிழ்நாடு மின்சார வாரியம் உத்தேசித்துள்ளது. இத் திட்டத்தின்படி, சுருளியாற்றின் முக்கிய உபநதியான எரவாங்கலாறு என்னும் நதியின் வலது கரையில் 35 மெகாவாட் உற்பத்தித் திறனுள்ள ஒரு மின்சார நிலையம் நிறுவப்படும்.

இத்திட்டத்தின் கீழ்க்கண்ட அணைகளும் நீர்ச் சுரங்கப்பாதைகளும் மற்றும் நீர் அழுத்தக் குழாய்களும் நிறுவப்படும் :—

1. ஹைவேவிஸ் ஆற்றின் கிழக்குப் பகுதியில் ஒரு நீர்த்தேக்க அணை.

2. ஹைவேவிஸ் ஆற்றில் ஹைவேவிஸ் அணைக்குக் கீழ்ப் பகுதியில் ஒரு திசை திருப்பு மதகு.

3. மணலாற்றில் ஒரு நீர்த்தேக்க அணை.

4. வெந்நீராற்றில் ஓர் அணை.

5. வெந்நீராற்றில் ஒரு திசை திருப்பு மதகு.

6. எரவாங்கலாற்றின் முன் அமைவான ஓர் அணை.

7. மேற்குறிப்பிட்ட அணைகள், மதகுகள் ஆகியவைகளை ஒன்றோடொன்று இணைக்கத் திருப்பு நீர்ச் சுரங்கப் பாதைகள், ஹைவேவிஸ் மதகிலிருந்து ஹைவேவிஸ் அணைக்கு நீரேற்றுக் குழாய்கள் ஆகியவை.

8. முன் அமைவான அணையிலிருந்து ஸர்ஜ் ஷாப்டு வரை செல்லும் அதிக அழுத்த நீர்ச் சுரங்கப் பாதை, ஸர்ஜ் ஷாப்டிலிருந்து வால்வு நிலையம் வரை செல்லும் குழாய் பதித்த நீர்ச்சுரங்கப்பாதை ஆகியவை.

9. வால்வு நிலையத்திலிருந்து மின்சார உற்பத்தி நிலையம் வரை செல்லும் பென்ஸ்டாக் குழாய்கள் ஒரு வரிசை.

10. 35 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஒரு மின்னுற்பத்தி இயந்திரமும் அதன் துணைக்கருவிகளும் கொண்ட ஒருமின்சார நிலையம் ஆகியவை.

இந்த மின்சார நிலையம் 110 கிலோவோல்ட் மின் பாதை மூலமாகப் பெரியாறு என்னுமிடத்தில் தமிழ்நாட்டு மின்சாரக் கூட்டிணைப்புடன் இணைக்கப்படும்.

இந்தத் திட்டத்திக்கு ரூ. 656 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதன் மூலம் ஆண்டொன்றுக்கு நிகர வருமானம் ரூ. 54·01 இலட்சம் கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

1948-ஆம்ஆண்டின் மின்சாரம் வழங்குதற் சட்டத்தின் 29(1)-வது பிரிவின்படி அந்த அறிக்கை பொதுமக்களின் தகவலுக்காக வெளியிடப்படுகிறது. இத்திட்டத்தால் ஈடுபாடுடையவர்கள் இதுபற்றித் தங்கள் கருத்துக்கள் ஏதேனும் இருந்தால் அவற்றைத் தலைமை மின்சாரப் பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், 157, அண்ணா சாலை, சென்னை-2 என்ற முகவரிக்கு, இவ்வறிக்கை வெளியான இரண்டு மாதங்களுக்குள், எழுத்து மூலமாகத் தெரிவிக்கலாம்.

தலைமை மின்சாரப் பொறியாளர்,
157, அண்ணா சாலை
சென்னை-2.

(த.77)

---

## காஞ்சிபுரம் நகராட்சி

நகராட்சி ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் தமது அலுவலகத்தில் 27-3-1972 மாலை 4 மணிவரை கீழ்க்கண்ட வேலைக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

வேலையின் பெயர்:—நகர மன்ற நூற்றாண்டுவிழா மண்டபத்திற்கு உட்காரும் வசதிகள் செய்ய ஒப்பந்தப்பத்திரத்தின் விலை ரூ. 3.
வேலையின் மதிப்பு:—ரூ. 40,000.
வைப்புத்தொகை:—ரூ. 940.

த. ஆ. சிவசுப்ரமணியன்,
ஆணையர்.

(த.83)

---

## பொறியியல் பணித்துறை

வேலையின் பெயர்.—சென்னை அண்ணா நகரில் காலியாக உள்ள இடத்தில் கிடங்கு ஒன்று அமைத்தல்.

தமிழ்நாடு ஆளுனருக்காகவும், அவர் சார்பிலும், மேர்பார்வைப் பொறியாளர், சென்னை–செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் மேற்கண்ட வேலைக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் பத்திரங்கள் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 24-3-1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தப்பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொ. ப. து. சென்னை செங்கற்பட்டு மாவட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் 24-3-1972 மாலை 3-15 மணி அளவில் வந்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

1. ஒப்பந்தப் படிவம்—மொத்தத்தொகை.

2. முன்வைப்புத் தொகை—ரூ. 2,500.

3. ஒப்பந்தப்பத்திரங்களின் விலை—ரூ. 20. 3½ சதவித விற்பனை வரி.

4. முடிக்க வேண்டிய காலம்—3 மாதங்கள்.

5. ஒப்பந்தப்பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், சென்னை–செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை-5ல் கிடைக்கும் நாட்கள்—17-3-1972 முதல் 23-3-1972.

6. ஒப்பந்தப்பத்திரங்கள் பெறப்படும் கடைசி நாள்—24-3-1972.

7. ஒப்பந்தப்பத்திரங்களுக்குரிய விலை "P.W.D. Rmittances III other remittances" என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர் கட்டிடக் கோட்ட எண் 11 அவர்கள் கணக்கிலும் விற்பனைவரி "XII Seles tax b. receipt under State Salez tax Act—General Sales tax" என்ற தலைப்பிலும் ஒரே சலானில் அரசாங்கக்கருவூலங்களிலோ (அ) திரிசர்வ் பாங்கியிலோ கட்டப்படவேண்டும். ஒப்பந்தப்பத்திரங்கள் சலானைக் கொடுத்தப் பின்னர்தான் வழங்கப்படும். எக்காரணத்தைக் கொண்டும் ஒப்பந்தப்பத்திரங்களின் விலை திருப்பித் தரமாட்டாது.

8. மேற்பார்வைப் பொறியாளர், பொ.ப.து. சென்னை–செங்கற்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் ஒப்பந்தப்பத்திரங்களை எவ்விதக் காரணம் காட்டாமல் நிராகரிக்கும் உரிமையை தனக்கு வைத்துக் கொண்டுள்ளார்.

9. மற்ற விரங்கள் மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை–செங்கற்பட்டு வட்டம்.

(த. 75)

---

## பல்லவா போக்குவரத்துக் கழகம்

அண்ணா சாலை, சென்னை-2.

தலைவர், பல்லவா போக்கு வரத்துக் கழகம் சார்பில், நிருவாகப் பொறியாளர், பல்லவா போக்குவரத்துக் கழகம், அவர்களால், வரும் மூன்று வருடத்திற்கு, பெரம்பூர் பேருந்து நிலையத்திலுள்ள கடை நம்பர் 1-ஐ குத்தகைக்கு, அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், போக்குவரத்து இல்லத்தில், 30-3-1972 மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அந்தக் கடை நம்பர் 1ல் வியாபாரம் நடத்தப்படுவது "டீ வியாபாரம்". ஒப்பந்தத்திற்கான விதிகள், நிபந்தனைப் பத்திரங்கள் முதலியவற்றை, நிருவாகப்பொறியாளர், பல்லவா போக்குவரத்துக்கழகம், சென்னை-2 அவர்களிடம் ரூ. 1-04 கட்டி, எல்லா அலுவலக நாட்களிலும் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் புள்ளிகளை அதே நாள் 30-3-1972 மாலை 3-30 மணிக்குத் திறக்கப்படும். எக்காரணத்தைக் கொண்டும், இந்தப் பணம் திருப்பித் தரமாட்டாது.

நிருவாக இயக்குநர்.

(த. 74)

## ஒப்பந்தப் புள்ளி

### பொதுப் பணித்துறை

### சென்னை செங்கற்பட்டு வட்டம்

வேலையின் பெயர் :—சென்னை மருத்துவக் கல்லூரியில் சிற்றுண்டிச் சாலைக்காகக் கட்டடம் கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநரின் சார்பில் பொதுப்பணித்துறை, மேற்பார்வைப் பொறியாளர் சென்னை–செங்கற்பட்டு வட்டம் அவர்களால் மேற்கண்ட வேலைக்கு அவருடைய அலுவலகத்தில் 28–3–1972 மாலை 3 மணி வரையில் மூடிய உறையில் அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் தகுந்த வகுப்பில் செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3–15 மணிக்கு அந்த சமயத்தில் வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிதாரர்களின் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர் சென்னை–செங்கை வட்டம் அவர்களால் திறக்கப்படும்.

1. ஒப்பந்த விவரம்—மொத்தத் தொகை.—
2. கட்டுத்தொகை.—ரூ. 3,125.
3. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை.—ரூ. 20, விற்பனைவரி 3½ சத வீதம்.
4. வேலையை முடிக்கவேண்டிய காலம்.—4 மாதங்கள்.
5. ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்கள் இந்த அலுவலகத்தில் கிடைக்கும் காலம்.—17–3–1972லிருந்து 27–3–1972 வரை.
6. ஒப்பந்தப் புள்ளி பெறும் நாள்.—28–3–1972.

மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களின் விலை விற்பனைவரி ஆகியவை அரசுக்கருவூலத்திலாவது ரிசர்வ் பாங்கியிலாவது **P. W. Remittances III other remittances to the credit of the Exe. Engr. N.P. Division, Madras-5.** என்ற தலைப்பில் கட்ட வேண்டும். விற்பனை வரியும் அதே சலானில் **"XII Sales tax B. receipts under State Sales Tax Act—General Sales Tax"** என்ற தலைப்பில் கட்ட வேண்டும். மேற்கண்ட சலானைக் கொடுத்தால்தான் ஒப்பந்தப்புள்ளி பத்திரங்கள் வழங்கப்படும். இச்சலானின் தொகை திருப்பித்தரப்பட மாட்டாது.

ஏதாவது ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ (அல்லது) எல்லாவற்றையுமோ நிராகரிக்கும் உரிமை மேற்பார்வைப் பொறியாளர், சென்னை–செங்கை வட்டம் அவர்களுக்கு உண்டு.

மற்ற விவரங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, சென்னை–செங்கை வட்டம் அவர்கள் அலுவலகத்தில் வேலை நேரங்களில் வந்து அறிந்து கொள்ளவும்.

பி. கே. கந்தசாமி,
மேற்பார்வைப் பொறியாளர்,
சென்னை-செங்கை வட்டம்.

(த.80)

## ஏல விற்பனை

### மாவட்ட கதர் கிராமத் தொழில்

சென்னை மாவட்ட கதர் கிராமத் தொழில் அலுவலகத்திற்குரிய டெம்போ எம்.எஸ்.எக்ஸ். 7870, 1972 மார்ச்சு 22–3–1972-ஆம் தேதி சென்னை இயக்குநர், கதர் கிராமத் தொழில் அலுவலகம், நெ. 2, சர் தேசிகாச்சாரி சாலை, சென்னை-4 கட்டடத்தில் பிற்பகல் 3 மணிக்குப் பொது ஏலத்தில் விற்கப்படும். மேற்படி டெம்போவைப் பார்வையிட விரும்புவர்கள் மேலே சொன்ன அலுவலகக் கட்டடத்தில் எல்லா வேலை நாட்களிலும் பார்வையிடலாம். ஏல சம்பந்தமாக விதிகளைக் கீழே குறிப்பிட்ட அலுவலரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வ. நயினார் பாண்டியன்,
மாவட்டக் கதர் கிராமத் தொழில் அலுவலர், சென்னை-32.

(த.79)

## ஒப்பந்தப் புள்ளி

### நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை

தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் சார்பாகவும், உத்திரவுப்படியும், கோயம்புத்தூர் வட்டம் நெடுஞ்சாலை மற்றும் கிராமப் பொறியியல் பணித்துறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 22–3–1972-ஆம் தேதி மாலை 3 மணி வரையில் கோயம்புத்தூர் ரத்தினசபாபதிபுரம் வெங்கிடரமண சாலையில் மேற்படியார் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3–15 மணி அளவில் (அலுவலக கடிகாரப்படி) திறக்கப் படும்.

| வரிசை எண்ணும் வேலையின் பெயர். | கோட்டம். | முன்வைப்புத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1 சேலம் நகராட்சி எல்லைக்குள் சேலம்–திருச்சிராப்பள்ளி சாலையில் மைல் 1/8-ல் திருமணிமுத்தார் ஆற்றின் குறுக்கே உள்ள பாலத்தை அகலப் படுத்துதல். | சேலம். | 3,450 |
| 2 எட்டிமடை ரயில்வே பீடர் சாலை மைல் 0/2-ல் ஒரு பாலம் கட்டுதல். | கோயம்புத்தூர் | 3,485 |
| 3 மதுக்கரை செட்டிப்பாளையம் சாலையில் மைல் 5/1-ல் ஒரு பாலம் கட்டுதல். | ,, | 2,975 |

ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகள், வரைபடங்கள், பத்திரங்கள் ஆகியவற்றை அந்தந்த கோட்டப்பொறியாளர்களிடமிருந்து ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 20 உடன் விற்பனை வரியும் செலுத்தி 15–3–1972 முதல் 21–3–1972 வரை பெற்றுக் கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக்கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. ஒப்பந்த நாளன்று ஒப்பந்தப் பத்திரங்களுக்கான மனுக்கள் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

மேலே கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள முன்வைப்புத் தொகையை அந்தந்த கோட்டப் பொறியாளர் சார்பில் அவருடைய வரம்பிற்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் செலுத்திச் செல்லுச் சீட்டை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்பவேண்டும். பாங்கு காரண்டி முன்வைப்புத் தொகை பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால் மேற்படி பாங்கு காரண்டி தமிழ்நாடு அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட குறிப்பிட்ட படிவத்தில் இருக்கவேண்டும். தவிர ரிசர்வு பாங்கு ஆப் இந்தியாவில் மேற்படி பாங்கு காரண்டிற்கான ஒப்புதலையும் சேர்த்து ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கவேண்டும். தவறினால்ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

ரத்தினசபாபதிபுரம்,
கோயம்புத்தூர்-2.

ப. சேக்உமர்,
மேற்பார்வைப் பொறியாளர்,
(நெ.கி.ப.)

(த.78)

## ஒப்பந்தப் புள்ளி

### மன்னார்குடி நகராட்சி

கீழே கண்ட நகராட்சி வேலைகளுக்காக 27–3–1972-ஆம் தேதி மாலை 4-00 மணி வரை கீழ்க்கையொப்பமிட்டவரால் மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படும். இதர விவரங்களை நேரிலோ, அஞ்சலிலோ கோரிப் பெறலாம்.

| வேலையின் விவரம். | மொத்த மதிப்பீட்டுத் தொகை. | கட்டுத் தொகை. |
|---|---|---|
| நகராட்சி எல்லைக்குள் நடைபெற இருக்கும் ரோடு வேலைகள், கட்டடங்கள் (9 வேலைகள்). | ரூ. 40,800 | ஒவ்வோரு வேலைக்கும் மதிப்பீட்டுத் தொகையில் 5 சத விதம். |
| புதிய பேருந்து நிலையத்தில் புதை சாக்கடைக்கான சாமான்கள் சப்ளை செய்வது மற்றும் கட்டி முடிப்பது. | ரூ. 7,990 | |

கோ. முருகன், பி. ஏ.,
ஆணையர்.

(த. 84)

## குடிசை மாற்று வாரியம்

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், கீழ்க் கண்ட வேலைக்காக, பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிட மிருந்து; நிர்வாகப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம், கோட்டம் எண். 2, 35/37, ஜகாங்கீர் தெரு, இரண்டாவது லேன் பீச், சென்னை–1 அவர்களால், 25–3–1972 அன்று மாலை 3–00 மணி வரை, உறையின் மீது வேலையின் பெயரும், ஒப்பந்ததாரரின் பெயரும், குறிப்பிடப்பட்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. வரப்பெற்றப் ஒப்பந்தப்புள்ளிகள், அதே நாள் மாலை 3–30 மணிக்கு, அச் சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களது அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகள் முன்னிலையில் நிர்வாகப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம், கோட்டம் எண். 2 அவர்களால் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும், வேலையின் பெயரும். | வேலை முடிக்க வேண்டிய காலம். | ஒப்பந்த வடிவம். | கட்டுத் தொகை. | ஒப்பந்தப் படிவத்தின் விலை (+) விற்பனை வரி (திருப்பித்தர ரப்பட மாட்டாது). |
|---|---|---|---|---|
| | | | ரூ. | ரூ. |
| 1. மாநகராட்சிக் கோட்டம் 53-ல் மாதவரம் அய்ரோடில் மேற்கில், டான்பாஸ்கோ உயர்நிலைப் பள்ளியிலிருந்து ஒரு பர்லாங் தெற்கில் மாதவரம் அய்ரோடில் ஜமீலா சந்தில் நான்கு அடுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்.— | | | | |
| (ஏ) பிரிவு "ஏ" ஒன்றில் 16 குடியிருப்புகள் (ஒரு பிளாக்) .. .. .. | 4 மாதங்கள் | மொத்தத் தொகை | 1,350 | 15 (+) விற்பனை வரி. |
| (பி) பிரிவு "பி" ஒன்றில் 24 குடியிருப்புகள் (ஒரு பிளாக்) .. .. .. | 9 மாதங்கள் | ,, | 3,960 | 20 (+) விற்பனை வரி. |
| (சி) பிரிவு "சி" ஒன்றில் 32 குடியிருப்புகள் (இரண்டு பிளாக்குகள்) .. .. | 9 மாதங்கள் | ,, | 5,235 | 20 (+) விற்பனை வரி. |

ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள், நிர்வாகப் பொறியாளர், குடிசை மாற்று வாரியம், கோட்டம் எண். 2, 35/37, ஜகாங்கீர் தெரு, இரண்டாவது லேன் பீச் சென்னை–1 அவர் தம் அலுவலகத்தில், எல்லா வேலை நாட்களிலும் காலை 11–00 மணி முதல் மாலை 3–00 மணி வரை ஒப்பந்தப் புள்ளிப் பத்திரங்களை விலை விற்பனை வரியுடன் செலுத்திய ரிசிப்ட் சலானைக் கொடுத்துப் பெறலாம். ஒப்பந்தப்புள்ளிப் பத்திரங்கள் விலை, **Personal Deposit Account C.P.D. A/c of the Executive Engineer, Slum Clearance Board, Division II** என்ற தலைப்பிலும், விற்பனை வரியை **"XII Sales Tax B. Receipts under State Sales Tax Act—General Sales Tax** என்ற தலைப்பிலும், ஸ்டேட் பேங் ஆப் இந்தியா, சைதாப்பேட்டை, சென்னையில் செலுத்தலாம்.

ஒப்பந்தப்புள்ளிகள், துறையில் வழங்கப்பட்ட குறிப்பிடப்பட்ட படிவத்திலேயே கொடுக்கப்பட வேண்டும். தாமதமாக வந்தாலோ, தவறிப் போய் விட்டாலோ துறை பொறுப்பேற்காது.

ஒன்று அல்லது எல்லா ஒப்பந்தப்புள்ளிகளையும் எக்காரணமும் கூறாமல் நிராகரிக்க உரிமை உண்டு.

கட்டுத்தொகை ஒப்பந்தப்புள்ளி அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஏதாவதொரு வடிவத்திலேயே இருக்க வேண்டும். இம்மாதிரிக் கட்டுத் தொகை யில்லாத ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

(த. 94.)

**எம். ஆத்மநாதன்,**
நிர்வாகப் பொறியாளர்,
கோட்டம் எண் 2.

---

ஒப்பந்தப் புள்ளி

## அருப்புக்கோட்டை நகராட்சி

கீழே காணப்படும் வேலைகளுக்கு, மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 23-3-1972 மாலை 4 மணிவரை நகராட்சி ஆணையரால் வழங்கப்படும். ஒவ்வொரு வேலைக்கான விவரத்தையும் ரூ. 1-00 அனுப்பி, இவ்வலுவலகத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

| வேலையின் விவரம். | மதிப்பீட்டுத் தொகை. | கட்டுத் தொகை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1. நாடார் தெப்பத்தின் கிழக்குக் கரையிலுள்ள 6" விட்ட ஆழக் குழாய்க் கிணற்றை ஆழப்படுத்த. | 1,950 | 50 |
| 2. மதுரை ரோடு நெசவாளர் குடியிருப்பிலுள்ள 6" விட்ட ஆழக் குழாய்க் கிணற்றை ஆழப்படுத்த. | 2,500 | 65 |
| 3. 1/14 நீர் தெருவிலுள்ள குழாய்க் கிணற்றை ஆழப்படுத்த | 500 | 15 |
| 4. 4/8 தெருவின் கிழக்குக் கடைசியிலுள்ள கை போரிங் குழாய்க் கிணற்றை ஆழப் படுத்தி குழாய் மாட்ட. | 320 | 10 |
| 5. 4/9 தெருவின் கிழக்குக் கடைசியிலுள்ள கை போரிங் குழாயை ஆழப்படுத்தி மாட்ட. | 320 | 10 |
| 6. கரு. சொ வீரப்பன் செட்டியார் நகராட்சிப் பூங்காவிற்குத் தென்மேற்கு மூலையிலுள்ள குழாய்க் கிணற்றை ஆழப் படுத்த. | 350 | 10 |
| 7. நகராட்சி வார்டுகளில் 67 இடங்களில் பிளாட்பாரத்துடன் கைபோரிங்குழாய் போட. | 980 (ஒவ்வொன்றுக்கும்). | 25 (ஒவ்வொன்றுக்கும்). |

(விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்).

**எம். புகழும்பெருமாள், பி.காம்.,**
ஆணையர்.

(த. 37)

16-3—12ஏ

## ஒப்பந்தப் புள்ளி

### நெல்லை நகராட்சி

மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் முனிசிபல் கட்டிடங்களிலுள்ள மின் விளக்குகள் பராமரிப்புக்கான மின்சார பல்புகள், குழல் விளக்குகள் முதலானவைகளை வழங்க மின்சார டீலர்களிடமிருந்து கீழ்க் கையொப்பமிட்டுள்ளவரால், 29—3—72-ஆம் தேதி மாலை 4—00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

மற்ற விவரங்கள் நகராட்சிப் பொறியாளரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

தெ. ரா. கனகசபாபதி,
ஆணையர்,
திருநெல்வேலி நகராட்சி.

(த.60)

## ஒப்பந்தப் புள்ளி

### குற்றால நகரியம்

(திருநெல்வேலி மாவட்டம்.)

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் குற்றால நகரிய நிருவாக அதிகாரியால் 29—3—72-ஆம் தேதி மாலை 4.00 மணி வரையில் குற்றால நகரிய அலுவலகத்திற்கு 1972—73-ம் ஆண்டிற்கு தேவையான, எழுதுபொருள்கள் சுமார் ரூ. 1,000 மதிப்பிற்கு வழங்கப்பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் ரூ. 25 ஒப்பந்தப் புள்ளி கட்டுத்தொகையாகச் செலுத்தவேண்டும். நல்ல தரமான சாமான்களுக்கான விலையையே ஒப்பந்தப் புள்ளிதாரர்கள் கொடுக்கவேண்டும். 29—3—72ஆம் தேதி மாலை 4.30 மணிக்குப் பெறப்பட்டுள்ள ஒப்பந்தப் புள்ளிகள் அனைத்தும் அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். தேவையான எழுது பொருள்களின் பட்டியலும் மற்ற விவரங்களும் எல்லா அலுவலக நாட்களிலும் அலுவலக நேரங்களில் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(த.59)

சா. நா. பழனிச்சாமி, பி.ஏ.பி.எல்.,
நிருவாக அதிகாரி.

## தடிகள் ஏலம்

### தேக்கு, மருது, வேங்கை, வெந்தேக்கு மற்றும் மற்றும் பல ஜாதிகள்

இடம் :—அரசாங்கத் தடி மண்டி, நாகர்கோவில்.

தேதியும், நேரமும் :—28, 29—3—1972 முற்பகல் 9-00 மணி.

அளவு :—ஏறத்தாழ 1,000 கன மீட்டர்.

மேற்கொண்டு விவரங்களுக்கு நாகர்கோவிலிலுள்ள மண்டிச் சிறகு அலுவலருக்கு விண்ணப்பிக்கவும்.

எஸ். கொண்டாஸ்,
மாவட்ட வன அலுவலர்,
திருநெல்வேலி தென் பிரிவு.

(த.58)

## ஒப்பந்தப் புள்ளி

### நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை பாம்பன் வட்டம்.

ந.க. எண். 24160/71/வ3, தேதி 3—3—1972.

தமிழ்நாடு ஆளுநருக்காக ஆளுநர் சார்பில் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) பாம்பன் வட்டம் அவர்களால் கீழ்க்கண்ட வேலைகளுக்கு அரக்கு முத்திரையிட்ட இனவாரி ஒப்பந்தப் புள்ளிகள் திருமானூர் தனிக்கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) தஞ்சாவூர் அலுவலகத்தில் 24—3—1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். அதே நாள் மாலை 3-30 மணிக்குத் திறக்கப்படும்.

வேலைவிவரம்.—முத்துப்பேட்டை மீமிசல் சாலையில் கி.மி. 67/0 (மைல் 41/7)-ல் பாலம் கட்டுதல்

கட்டுத்தொகை.—ரூ. 7,300.

ஒப்பந்தங்களுக்கான நிபந்தனைகள் நமூனுக்கள் வரைபடம் முதலியவற்றைத் தனிக்கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) திருமானூர் பாலவேலை தஞ்சாவூர் அலுவலகத்தில் வேலைநாட்களில் ரூ. 25-00 செலுத்தி 15-3-1972 முதல் 23-3-1972 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பித்தரப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட கட்டுத்தொகையைத் தனிக்கோட்டப் பொறியாளர் திருமானூர் பாலவேலை தஞ்சாவூர் தனிக்கோட்ட அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் தனிக்கோட்டப்பொறியாளர் திருமானூர் பாலவேலை தஞ்சாவூர் பெயரில் ரெவினியூ டெபாசிட் என்ற தலைப்பில் செலுத்திச் செலுத்துச் சீட்டை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

முன்வைப்புத் தொகையை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளின் உறுதி பத்திரங்களாக அனுப்பினால் அதற்கான ரிசர்வ் வங்கியின் ஒப்புதலை சேர்த்து அனுப்பவேண்டும்.

மாற்றிய வடிவமைப்புத் தாங்கிய ஒப்பந்தங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

குறிப்பிட்ட கட்டுத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப் படமாட்டாது.

கு. சிவானந்தம்,
மேற்பார்வைப் பொறியாளர்.

(த.82)

## ஏல விற்பனை:

### வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம்

வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்திலுள்ள வடக்கு வள்ளியூர், பணகுடி ஆகிய இடங்களிலுள்ள வாரச் சந்தைகளின் 1972–73 ஆண்டிற்கான கட்டணம் வசூல் செய்யும் பாத்தியதையை (1-4-1972 முதல் 31-3-1973) முடிய ஒரு வருடத்திற்கு 13-3-1972-ம் நாள் திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் அவர்களாலோ அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற அதிகாரிகளாலோ பகிரங்கமாக ஏலம் விடப்படும்.

ஏலம் கேட்க விரும்புபவர்கள் அடியிற்கண்ட கட்டுத் தொகையை ஒவ்வொரு சந்தைக்கும் தனித்தனியே ஏலம் கோருவதற்கு முன் ஏல நிபந்தனைப்படி இவ்வலுவலகத்தில் செலுத்தவேண்டும். மற்ற நிபந்தனைகள் இவ்வூராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம். கூடுதல் ஏலம் கேட்பவருக்கு ஏலம் ஜாரி செய்யப்படும். ஏல விளம்பரத்தில் கண்ட நிபந்தனைஷரத்துக்களுக்குட்பட்டே ஏலம் கேட்க வேண்டும்.

| | | கட்டுத் தொகை. |
|---|---|---|
| | | ரூ. |
| 1 | வடக்கு வள்ளியூர் வாரச்சந்தை .. .. | 400·00 |
| 2 | பணகுடி வாரச்சந்தை .. .. .. | 50·00 |

ஆணையர்.

(த.66)

## ஏல விற்பனை

### தீயணைப்புத் துறை

கண்டனம் செய்யப்பட்ட நோயாளி வண்டி எம்.எஸ்.எக்ஸ்.61.. (வில்லீஸ் ஜீப் 1959-ஆம் வருட மாடல்) கடலூர் பீச் ரோடிலுள்ள கடலூர் கோட்டத்தீயணைப்பு அலுவலர், அலுவலகத்தில் 1972-ஆம் வருடம் மார்ச் மாதம் 27-ஆம் நாள் திங்கள்கிழமை காலை 11 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். இந்த ஊர்தியை மேற்கண்ட விலாசத்தில் பார்வை இடலாம். விற்பனை நிபந்தனைகளை கீழ்க் கையொப்பமிட்ட அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வா. ஜெயபெருமாள்,
கோட்டத்தீயணைப்பு அலுவலர்,
கடலூர்-1.

(த.48)

## ஒப்பந்தப் புள்ளி

### கோவை நகராட்சி

எலி கொல்லி மருந்து தூவும் பம்புகள் (சயனோகாஸ் பம்புகள்) வழங்க மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஆணையர் அவர்களால் 20-3-1972 திங்கட்கிழமை மாலை 4 மணி வரை கோரப்படுகிறது.

விவரம் வேண்டுவோர் நகராட்சி நல அலுவலரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ஆணையர்.

(த.31)